# ஆயிரம் நிலவே வா!



1

மலைகளின் ராணி எனப் புகழ் பெற்ற ஊட்டி மலைப் பாதையில் கறுப்பு நிற சாண்ட்ரோ கார் வெண்ணையாய் வழுக்கி 60 கி.மீ. வேகத்தில் பறந்தது. வெல்கம் ஓட்டல் அதிபர் ஆதவன் ஏற்றப்பட்ட கார் கண்ணாடிக்குள் ஏஸியின் குளிரை அனுபவித்த படியே மனதை உறுத்தாத இசையைக் கேட்டபடி இருந்தான். குளிர் கண்ணாடி ரிஸ்ட் வாட்ச், ப்ரவுன் நிற சூட் இதம் அவனைக் காண ஒரு கந்தர்வன் போல் இருந்தான்.

மனம் எதையோ அசைபோட்டபடியே வந்தது. மாலை மங்கிய நேரமாகையால் இருளை விரட்ட சாலையெங்கும் பொன்னிற விளக்குகள், யூக்கலிப்டஸ் மரங்களின் மணம். இரவு அன்னை பூமிக் குழந்தையை இருளென்னும் தொட்டிலில் இட்டுக் கொண்டிருந்தாள்.

காரை இலாவகமாய் வளைவுகளில் ஓட்டியபடியே தன் முதலாளியைக் கண்டு நகைத்தான் கிருஷ்ணன்.

அதில் கலைந்த ஆதவன், ''என்ன கிருஷ்ணா என்கிட்ட சொன்னா நானும் சிரிப்பேன் இல்லையா? தனியா சிரிக்கிறியே?''

''ஒரு நிமிஷம் கூட ஓய்வில்லாமல் ஓடுப்வர் நீங்கள். எப்படி இன்னும் ஒரு மாதத்திற்கு எந்த வேலையும் செய்யாமல் இருக்கப் போகிறீர்களோ என்று நினைத்தேன் சிரிப்பு வந்துடுச்சு.''

''என்ன பண்றது கிருஷ்ணா? இது அம்மாவின் கட்டளை. எனக்கே கூட நம்ம ஊரை விட்டு ரொம்ப நாள் பிரிஞ்சு போன மாதிரி ஒரு பீலிங். அதான் கொஞ்ச நாள் அம்மா அப்பாவோட இருக்கலான்னு..''

''ரொம்ப சந்தோஷம். இந்த வருடம் உங்களுக்குத் திருமணம் செய்ய அய்யாவும் அம்மாவும் தீர்மானம் செய்து இருக்காங்க.''

''கல்யாணமா? நான் அறியாத இந்த சதிவேலை எல்லாம் நடக்கிறதா? கிருஷ்ணா இதுவும் ஒருவகையில் அபீஷியல் ட்ரிப்தான். ஊட்டி சிறந்த பொழுது போக்கு இடமும் கூட, நம்ம ஹோட்டல் பக்கத்தில் 40 ஏக்கரில் நிலமிருக்கு. விலை பேசிட்டேன். அதிலே ஒரு பிக்னிக் ஸ்பாட் அமைக்கலாம் என்று ஒரு ஐடியா.''

''இது பெரியம்மாவிற்குத் தெரிந்தால் மிகவும் கோபிப் பார்களே அய்யா!''

''கோபிப்பதா! கட்டி வைத்து உதைப்பார்கள். என்ன செய்ய ஒரு விஷயத்தில் ஈடுபாடு அதிகரித்து விட்டால், அதை செயல்படுத்தியே தீரவேண்டுமென்ற வேகம் வந்து விடுகிறது. இந்த அன்பும் பாசமும் தடைக் கற்களாய் மாறி விட்டால் கஷ்டம் இல்லையா?''

''சின்னய்யா நீங்க ஒரே பிள்ளை. உங்க திருமணத்தை பெரியவங்க மட்டுமில்லாம நாங்களும் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.''



''ஆதவன் தன்னை மறந்து ஒரு விநாடி நகைத்தாலும், மனதில் ஓரம் இலேசாய் வலித்தது. என் மனதில் கல்யாணம் என்ற பேச்சுக்கே இடமில்லை.'' நிலாவின் முகம் ஒரு முறை மனக்கண்களில் வந்து போனது. அதற்கு மேல் அவன் பேச்சை வளர்க்கவில்லை.

அதற்குள் தாமரை இல்லத்தின் வாயிலில் நின்றது. காரிலிருந்து இறங்கியவன் சில்லென்ற காற்றை நுகர்ந்தபடியே விழிகளை விரட்ட, வீட்டினுள் இருந்து தாய் செந்தாமரையும், தந்தை சந்திரசேகரும் மகனை ஆரத் தழுவிக் கொண்டார்கள்.

''எத்தனை நாட்கள் ஆகிறதடா தம்பி உன்னைப் பார்த்து, நேரம் வாய்க்கும் போது வந்து போகக் கூடாதா? அம்மா, அப்பா நினைவே உனக்கில்லையா?'' அம்மாவின் அங்கலாய்ப்பில், ''விடும்மா வாசலில் வைத்தே எல்லாம் கேட்கணுமா? ஊரெல்லாம் சுத்தியிருக்கான் முதல்ல பிள்ளைக்கு திருஷ்டி கழித்து விடு!''

அம்மா ஆரத்தியெடுத்து உள்ளே அழைத்துப் போனார் தாமரையம்மாள். தந்தையின் நேசமிக்க கரங்களில் புதைந்தவன், ''தம்பி பிஸினஸ் எல்லாம் எப்படியிருக்கு?''

''ரொம்ப நல்லாயிருக்குப்பா. உங்க உடம்பு எப்படி யிருக்கு?''

''அதுக்கென்னப்பா வயசாகுதில்லையா? அம்மாவும், ராணியும் நல்லாவே கவனிக்கிறாங்க.''

''சரி ஓட்டல் எப்படி போகுது?''

''நாட் பேட்! ராணி இருக்கும்போது என்ன கவலை. எல்லாத்தையும் ரொம்ப பொறுப்பா கவனிச்சிக்கிறா!''



''ராணியா? அது யாருப்பா பேரு புதுசாயிருக்கு? நியூ அப்பாயிண்ட்மெண்ட்டா கேசவ் என்ன ஆனார்?''

''அவர் வேலையில் இல்லை தம்பி. என்னாலும் நேரடியா கவனிக்க முடியாததினால் நிர்வாகத்தினால் நிறைய சிக்கல் வந்திடுச்சு. நல்ல வேளை ராணி வந்து சேர்ந்தா.''

மேற்கொண்டு ஏதோ கேட்க முற்பட்டவனை அறைக்குள் நுழைந்த பணிப்பெண் கலைத்தாள். ''அய்யா மணி எட்டாச்சு. ராணியம்மா மாத்திரை தரச் சொல்லி இருக்காங்க'' வெள்ளையும், சிவப்புமாய் இரண்டு மாத்திரைகளை அவர் கையில் திணிக்க மறுபேச்சின்றி விழுங்கினார் சந்திரசேகர்.

''அம்மா அய்யாவுக்கு வெந்நீர் தயாராயிருக்கு!''

''நீ போ! சரி, தம்பி மத்ததையெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். முதல்ல குளி.. சாப்பிட்டு ரெஸ்ட் எடு.''

''ஹோட்டல் வரை போகலான்னு இருந்தேன்.''

''மூச்.. வீட்டை விட்டு நகரக் கூடாது..'' அம்மா வாயில் விரலை வைத்து அதட்ட புன்னகைத்தபடியே சென்றான் ஆதவன்.

''ஏங்க ஆதவன் எத்தனை பெரிய மனுஷனாயிட்டான் இல்லை. சின்னப் பிள்ளையிலே என் புடவை முந்தானையைப் பிடிச்சுக்கிட்டே அலைவான்.''

''பிள்ளையைப் பற்றி பெருமை பேசுறது இருக்கட்டும். இந்த வருஷம் நிச்சயம் அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணிடணும். அவனைச் சம்மதிக்க வைக்க வேண்டியது உன் பொறுப்பு.''



''எங்கே கல்யாணத்தைப் பத்தி பேச்சு எடுத்தாலே ஓடிப் போயிடறான்.'' தாமரையம்மாளின் குரலில் மிதமிஞ்சிய கவலை தொனித்தது.

இயற்கையின் மடியில் புதைந்து கிடந்த செடி கொடிகளும், கண்ணுக்கு குளிர்ச்சி அளித்தது. யூக்கலிப்டஸ் கலந்த வெந்நீர் உடலெங்கும் இதமாய் பரவிட, சுகமாய் குளித்து முடித்து இரவு உடையுடன் வெளியே வந்தான்.

சப்பாத்தி, சப்ஜி, சாதம்.. குழம்பு என அம்மாவின் பரிமாறலில் உண்டவன்,

''அய்யா பால்..''

''பாலா.. சாப்பிட்டதே வயிறு புல்லா இருக்கே. இதிலே இது வேறயா?''

''குடிப்பா... எத்தனை நாளாச்சு. அம்மா கையால சாப்பிட்டு..''

''அம்மா இப்படியே நான் சாப்பிட்டுட்டே இருந்தா ஓடியாடி வேலை செய்ய முடியாதும்மா..''

''ஏம்பா நம்ம வீட்டுலே இருக்கிற வசதிக்கு நீ உட்கார்ந்தே நாலு தலைமுறைக்குச் சாப்பிடலாம். இன்னமும் வேலை வேலைன்னு ஏன் ஓடணும்..''

''அம்மா சாப்பாடும் ஓய்வும் இந்த வயசில் எனக்குத் தேவையில்லை. உன் பிள்ளை சாதிக்கப் பிறந்தவன். நான் தொட வேண்டிய சிகரங்கள் இன்னும் நிறைய இருக்கு. அதுக்குள்ளே ஓய்வெடுக்க நினைக்கலாமா?''

''அதுக்கில்லைடா... ஆதவா எங்களுக்கு நீ ஒரே பிள்ளை. வயசும், இருபத்தெட்டு ஆகுது. இந்த சின்ன வயசிலே பெரியத்

தொழில் பண்றே! நம்ம பக்கத்து ஆளுங்க எல்லாம் உனக்கு பொண்ணு கொடுக்க நான் நீன்னு போட்டி போட்டுக்கிட்டு அலையறாங்க..''

''அப்போ கல்யாண மார்க்கெட்டுல எனக்கு நல்ல கிராக்கின்னு சொல்லுங்க..''

''போடா போக்கிரி பேச்சை மாத்தாதே..''

''தம்பி காசு பணம் நம்மகிட்டே அளவுக்கு அதிகமாகவே இருக்கு. வர்றவ உன்னையும் நம்ப குடும்பத்தையும் தாங்குவாளான்னு பார்க்கணும்..''

''அப்பா சொல்றதுதான் சரி. அம்மா கேக்குறாளேன்னு தப்பா நினைக்காதே. நீ யாரையாவது மனசிலே நினைச்சிக்கிட்டு இருந்தா சொல்லிடு. உடனே முடிச்சிடலாம். எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. உன் சந்தோஷம்தான் தம்பி எங்களுக்கு வேணும்.''

''அம்மா.. வீணே மனசைப் போட்டு அலட்டிக்காதீங்க. அப்படியெல்லாம் எதுவும் இல்லை..''

''என்னமோப்பா.. எங்களுக்கு நீ ஒரே பிள்ளை. உனக்கு ஒரு நல்லது பண்ணிப் பார்க்க மனசு கிடந்து தவிக்குது. சரி நேரமாகுது. நீ போய் தூங்குப்பா..''

''ஆமா, நம்ம மேனேஜர் கேசவன் ஏன் போனார்?''

''அவரெங்கே.. போனார், நானில்லை அவனை வேலையை விட்டு அனுப்பினேன். இப்போ ராணிதான் எல்லாத்தையும் கவனிச்சிக்கிறா.''

''அதானே வந்ததுமே கேட்கணுமின்னு நினைச்சேன் அது யாரு ராணி..''



''நம்ம பாதர் தேவசகாயம்தான் அந்த பொண்ணை இங்கே கூட்டிட்டு வந்தார். நல்ல குணமுள்ள பொறுப்பான பொண்ணு. அப்பா இல்லை அம்மாவும் சமீபத்திலேதான் இறந்தாங்களாம். படிச்ச பொண்ணு. பாதர் கேட்டு கிட்டதால சேர்த்தோம். வந்த கொஞ்ச நாளிலேயே கேசவன் கணக்கிலே பண்ண குளறுபடி எல்லாம் கண்டுபிடிச்சிட்டா..''

''தொழில்ல பக்தியும், சுறுசுறுப்பும் கனிவும் அவ மேலே ஒரு தனிமதிப்பே வந்துடுச்சு..''

''அப்படியா?''

''ஆமா தம்பி நம்ம அவுட் ஹவுஸில் தான் தங்கியிருக்கா. சொந்த தாய் தகப்பனை கவனிக்கிறா மாதிரி கவனிக்கிறாப்பா எங்களை! அந்த அளவிற்கு அன்பு...''

''அவங்க எப்போ வருவாங்களம்மா..?'' இப்போது ஆதவிடம் மரியாதை கூடி இருந்தது.

''சில நேரம் தாமதமாகும். ஆனா எங்களைப் பற்றி போனிலாவது விசாரிச்சுக்குவா. தங்கமான பொண்ணு சரி நேரமாயிடுச்சு. நீ போய் தூங்கு. அப்பாவும் ரெஸ்ட் எடுக்கட்டும்..''

''சரிம்மா...'' அறைக்குள் நுழைந்து, லேப்டாப்பை எடுத்துக் கொண்டு படுக்கையில் சரிந்தான். ஸ்கீரினில் ஓவியமாய் அவளின் முகம். எங்கே இருக்கிறாய் நிலா? உன் ஆதி இங்கே ஏக்கத்தில் துடிப்பதை நீ உணரவேயில்லையா? என் அன்பில் காதலில் விழுவதும் கரைந்து விடத் தோன்றாமல் என்னை விட்டுப் பிரிய நீயேன் முன்வந்தாய்.

நிலா! கோடி பூக்களின் சுகந்தம் உன் புன்னகை முகம் வீசுமே! அதையினி நான் காணப் போகிறேன் கண்மணி! என்ன



தவறு செய்தேன். நான் எனக்கேன் இந்த தண்டனை. நீ மட்டும் இந்நேரம் என் அன்பை புரிந்து கொண்டு இருந்திருந்தால் நம் வாழ்வு எத்தனை இனிதாய் மலர்ந்திருக்கும் தெரியுமா?

பெருமூச்சுகளை சுமந்தபடியே உறக்கம் தொலைத்த விழிகளோடு தவித்திருந்தான் ஆதவன். அந்த இரவைப் போலவே அவன் கனவுகளிலும் இருள் படிந்திருந்தது.

ஓட்டல் தாமரை உயர் ரக ஐந்து நட்சத்திர ஓட்டல் விளக்குகளின் ஒளி வெள்ளம் இரவும் பகலும் வழிந்தோடி அந்த இடத்தையே மினி சொர்க்க புரியாக்கி விட்டிருந்தது. பெரிய வெண்கலப் பானையில் நீரை நிரப்பி பூக்களின் இதழ்களை பரப்பி விட்டிருந்தது. ரசனையோடு இருந்தது.

கண்ணாடிக் கதவுகளின் பின் வரவேற்பறையில் குயில் குரலோடு அழகான நெற்றியை பற்றியபடி கொஞ்சிக் கொண்டு இருந்தாள் லாவண்யா.

''என்ன வருண் இது? ஆபீஸ் டைமில் கூப்பிடாதே? மேடமிற்கு தெரிஞ்சா தேவையில்லாத பிரச்சனைதான் வரும்..''

''ஆமா பெரிய மேடம் எந்நேரமும் வேலை வேலைன்னு கண் கொத்தி பாம்பு மாதிரி. இவளும் சின்ன வயசுதானே. இத்தனைக் கண்டிப்பும் கறார் தனமும் தேவைதானா?''

''அதனாலதான் அவங்க தலைமை பொறுப்பில் இருக்காங்க..''

''ம்.. நீ என்ன அவளுக்கு வக்கீலா? ஒரே இடத்தில் வேலை செய்யறோன்னுதான் பேரு? ஒரு வார்த்தை கூடப் பேச முடியலை. இன்னைக்கு ஈவ்னிங் ஸ்விம்மிங் பூலுக்கு வந்திடேன் லாவண..''



''முயற்சி பண்றேன் வருண். இப்போ தயவு செய்து போனை வை. ரூம் நெம்பர் 203ல் மெனு சொல்லி கால்மணி நேரமாச்சு. அந்த ஆள் கத்தறான். முதல்ல அதைப் போய் கவனி..'' லாவண்யா போனை அதனிடத்தில் வைத்து விட்டு பெருமூச்சோடு நிமிர்ந்தாள்.

புதுமணத் தம்பதிகள் ரூம் கேட்டு வர, அவர்களின் பெயர் முகவரியைப் பதிவு செய்தாள்.

''யுவர் குட் நேரம் ஸார்..''

''வர்ஷன், மிருதுளா..''

''அந்தப் பெண், அநியாயத்திற்கு வெட்கப்பட்டாள்.

''ஸார் இந்த லெட்ஜரில் உங்க அட்ரஸ், மத்த டீடெய்ல்ஸ் எல்லாம் பில் அப் பண்ணிடுங்க.'' அவன் எழுதி கையெழுத் திட்டுத் திருப்பித் தர..

''ஸார், உங்களுக்கு எத்தனை நாளைக்கு ரூம் வேணும்..''

''மூணு நாட்கள்..''

''ஒருநாள் செலவு 1500 ரூபாய் மூன்று நாட்களுக்கு டேக்ஸ், ரூம் சர்வீஸ் எல்லாம்..''

''நோ ப்ராப்ளம் பேபி... ரூம் வெகேட் பண்ணும்போது ரெடி பண்ணிடு..''

''விஷ் யூ ஹேப்பி ஜேனீ ஸார்..''

''தேங்க்யூ..!''

''வேலு ஸாரோட பெட்டியை எடுத்துட்டு போ...'' மூவரும் நகர்ந்திட மறுபடியும் அழைப்பு வந்தது.

இம்முறை ராணியிடமிருந்து.

''யெஸ் மேடம்'' லாவண்யாவின் உடலில் ஒரு விறைப்பு தொற்றிக் கொண்டது.

''எஸ் மேடம்'' என்ற வார்த்தையைத் தவிர வேறெதுவும் பேசினாளில்லை. பின்னர் ரூம் பாயை அழைத்தாள். ''மணிகண்டா, எம்.டி. ரூமை கிளீன் பண்ணு..''

''எதுக்கு அக்கா?''

''சின்ன முதலாளி வர்றாராம்! ராணி மேடம் போன் பண்ணாங்க..''

அந்தப் பெயரைக் கேட்டதும் எதிர் கேள்வி கேட்காமல் ஓடினான்.

வாட்ச் மேனின் விறைப்பான சல்யூட்டை பெற்றபடியே மிடுக்கான நடையோடு உள்ளே வந்தாள் ராணி.

மொரமொரப்பான காட்டன் சேலை. ஒற்றையாய் சாட்டை போன்ற பின்னல், அதில் ஒரு மஞ்சள் நிற ரோஜா. குத்து விளக்கென ஜொலித்த நெற்றியில் அவள் கோபத்தினை உணர்த்துவது போல் சிகப்பு பொட்டு.

''லாவண்யா..''

''மேடம்.. குட்மார்னிங்..''

''மார்னிங்... ஒரு பொக்கேக்கு ரெடி பண்ணிடு. பவுண்டேஷன் மோட்டர் ரிப்பிரஷ் பண்ணச் சொல்லு. எம்.டி. வரும் போது எல்லாமே பளிச்சின்னு பர்பெக்டா இருக்கணும்.. ஒரு சின்னத் தப்பு கூடக் கண்ணில் படக் கூடாது.. புரியுதா?''

''ஓ.கே மேடம்..''



''வருணை என்னோட கேபினுக்கு வரச் சொல்லு.''

''யெஸ் மேடம்!'' ராணி மறையவும், லாவண்யா, ஒரு உதறலோடு வருணைத் தொடர்பு கொண்டாள்.

''ஏய் செல்லம் என்ன திடீர்னு? என் ஞாபகம் வந்திட்டதா?''

''சும்மா இருங்க. மேடம் உங்களை உடனே அவங்க கேபினுக்கு வரச் சொன்னாங்க..''

''என்னவாம்?''

''நம்ம எம்.டி. வர்றார் இல்லையா? அது சம்பந்தமா ஏதாவது பேசுவாங்க. நேரம் கடத்தாம சீக்கிரமா போங்க..''

லாவண்யாவின் குரலில் தொனித்த பரபரப்பு அவனையும் தொற்றிக் கொண்டது. கார்டாரில் இறங்கி, ராணியின் கேபினை அடைந்தான்.

''மே ஐ கமீன் மேடம்..''

''எஸ் என்ன வருண். இத்தனை தாமதமா வர்றீங்க?''

''ஸாரி மேடம். இன்னிக்கு வெள்ளிக்கிழமை. அதனால ரூம் சர்வீஸுக்கு ஆள் அனுப்பிட்டு கேண்டீன் போய் பார்த்திட்டு வர லேட்டாயிடுச்சு.''

''இட்ஸ் ஓ.கே. ஸீ மிஸ்டர் வருண். நம்ம எம்.டி. இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வந்திடுவார். எல்லாம் பர்பெக்டா இருக்கணும்.''

''ஷ்யூர் மேடம்..''

''நீங்க போகலாம்'' அவள் கம்ப்யூட்டர் வசம் திரும்பிட வருண் ஒரு சிறு வெறுப்புடன் நகர்ந்தான். இவளுக்கு பெரிய ஹிட்லர்னு நினைப்பு மனசிலே திட்டியபடியே நகர்ந்தான்.



ராணி பரபரப்பாய் இயங்கினாள். அக்கௌண்ட்ஸ் சம்பந்தப்பட்ட சி.டி. மற்றும் பிளாப்பிகளை டேபிளின் மீது வைத்துவிட்டு, சிப்பந்தி ஒருவன் கொண்டு வந்து கொடுத்த காபியை அருந்தியபடியே நேரம் பார்த்தாள். காலை ஒன்பதைத் தொட்டு இருந்தது. தொலைபேசியைக் கையில் எடுத்தாள்.

எதிர்முனை எடுக்கும் வரை பொறுமையாய் காந்திருந்த வளின் ஹலோ எனும் குரல் காதில் அழகாய் மோதியது. அரை விநாடியில் அயர்ந்தவள், பின் ஐ'யம் ராணி. குட்மார்னிங் ஸார்.. ஹேவ் எ நைஸ் டே ஸார்..''

''ஓ மிஸ் ராணி.. நானே உங்களைப் பார்க்க வரணுமின்னு நினைச்சேன். எங்கே இருக்கீங்க?''

''ஹோட்டலில் ஸார்..''

''இத்தனை சீக்கிரமாவா? நானும் கிளம்பி விட்டேன். இன்னும் டென்மினிட்ஸ்ஸில் நான் அங்கே இருப்பேன். இன்னைக்கு ப்ரேக்பாஸ்ட் உங்களோடதான்..''

''வெல்கம் ஸார்... உங்களுக்காக எல்லாம் தயாராயிருக்கு.''

''வெகு குறுகிய காலத்தில் எல்லார் மனதிலும் இடம் பிடித்து விட்டீர்கள் மிஸ், ராணி. அம்மாவும் அப்பாவும் உங்களைப் பற்றி ரொம்ப உயர்வாய் கூறினார்கள்.''

''நான்தான் அவங்களுக்கு நன்றி சொல்லணும். எங்கிருந்தோ அநாதையா வந்த என்னை சொந்த மகள் போல் பார்த்துக்கிறாங்க. என்னை நம்பி இத்தனைப் பெரிய பொறுப்பை தந்து இருக்காங்க. அதுக்கு நான் உண்மையா உழைக்க வேண்டாமா..''



''உங்களை மாதிரி திறமையான ஸ்டாப்ஸ் இருந்தாலே எங்க வளர்ச்சி இன்னும் உயரும். ஓகே நாம நேர்ல மீட் பண்ணலாம். ஒன் மோர் டெல்லிங் வரவேற்பு என்ற பெயரில் பெரிதாய் எதுவும் செய்ய வேண்டாம். எனக்குப் பிடிக்காது.''

''ஷ்யூர் சார்..''

பரஸ்பரம் ரிசீவர் சாத்தப்படவும் ஏனோ இனம் புரியாதவொரு படபடப்பு ராணியினுள் உருவானது. காரணம் புரியவில்லை. சொன்னாற் போல் சரியாய் பத்து நிமிஷத்தின் ஆரம்பத்திலே காரில் வந்து இறங்கினான் ஆதவன். கையில் பூச்செண்டோடு வரவேற்பறையில் காத்திருந்த ராணியின் கண்கள் இரண்டும் நிலைகுத்தி நின்றன.



## 2

''இவனெங்கே?'' என்பது போல்.

ஆனால் ஆதவனின் கண்களிலோ பரவசம், ஏய்? நீ நிலா..! இங்கே யெப்படி?'' என்றான்.

இவளோ வெகு எச்சரிக்கை. எவ்வித உணர்வையும் வெளிக்காட்டாமல், ''ஸாரி ஸார்.. ஐ'ம் ராணி. நிலா இல்லை'' என்றாள் இறுகிய முகத்துடன். ஆதவன் அடுத்த அறிமுகப் படலம் எதையும் பொருட்படுத்தாமல் இயந்திர தனமாய் தலையசைத்து தன் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

''யாரிவள்?'' சந்தேகமில்லை. என் நிலாவேதான். ஆனால் ராணியென்கிறாளே, இல்லை என்று மனம் இடித்தது. ஜாடை வேண்டுமானால் மாறலாம். ஆனால் ஆசை ஆசையாய் காதலோடு நோக்கிய அந்தக் கண்களை அவன் அறிவானே!

இவனைக் கண்டதும் அவளின் விழிகளும் விநாடிக்கும் குறைவான நேரத்தில் ஒரு மலர்ச்சி தோன்றி உடனே ஒரு இறுக்கமும் தோன்றியது! என்ன காரணமாய் இருக்கும். தானாய் புலம்புவதைக் காட்டிலும் அவளையே நேரடியாகக் கூப்பிட்டு கேட்டால் என்னவென்று தோன்றியது.

நேரம் தாழ்த்தாமல் அதை உடனே செயல்படுத்தவும் செய்தான். அடுத்த ஐந்தாவது விநாடி ராணி உள்ளே நுழைந்தாள், தனியாக அல்ல வருணுடன்.

''குட்மார்னிங் ஸார் வெல்கம் டூ ஹோட்டல்..''

''தேங்க்யூ ஸார் யாரு?''

''இவர் வருண். இங்கே சூப்பர்வைசர் சின்சியர் ஒர்க்கர். நீங்கள் ஓட்டலை ஒருமுறை பார்வையிட விரும்பினால் வருணுடன் போகலாம் டேபிளில் அக்கவுண்ட்ஸ் சம்பந்தப் பட்ட அத்தனை தகவல்களும் இருக்கு. நீங்க பார்த்து வெரிபை பண்ணிடுங்க..''

அவள் வெகு கவனமாய் வேறு ஏதும் இல்லையென்பது போல் பேசினாள். விழிகள் அவனை நேராய் சந்திப்பதைத் தவிர்த்தது.

''வருண் உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. தேவைப்படும் நேரம் அழைக்கிறேன். நீங்க போகலாம்'' என்றான்.

''எஸ் சார்!''

''இப்போது அந்த பெரிய அறையில் இருவர் மட்டும் தனிமையாய்!

''நான் ஒண்ணும் புரபஸர் இல்லை உட்காரலாம் மிஸ்.''

''பரவாயில்லை ஸார், நான் போகலாமா?''



''என்ன அவசரம் என் சந்தேகங்கள் இன்னும் தீரவில்லையே?''

''சந்தேகமா'' புருவம் உயர்த்தினாள்.

''யெஸ்.. உங்க பெயர்?''

''ராணி..''

''உங்களுக்கு சமீபத்தில் ஏதும் அம்னீஷியா அட்டாக் ஆச்சா?''

''ஏன்? என் பெயர் என்னவென்று ஆராயத்தான் இங்கே வந்தீர்களா?''

''அதில்லை வெண்ணிலாங்கிற பேரை எப்போ மாத்துனீங்க?''

''ஸார் என் பேரு ராணிதான். உங்களை நம்ப வைக்க சர்டிபிகேட் காட்டட்டுமா?'' என்றாள்.

''பீ கூல்! ஏன் டென்ஷன் ஆகறீங்க? இதே ஜாடையில் வெண்ணிலான்ற பெண்ணை எனக்குத் தெரியும். அது நீங்களான்னு கேட்டேன். இல்லேன்னா இல்லைன்னு சொல்ல வேண்டியதுதானே! ஏன் கோபப்பட வேண்டும்?''

அவனின் எதிர் கேள்வியில் ஒரு விநாடி மயங்கி பின் சுதாரித்தாள். ''எனி ஹெல்ப் சார்?''

''இந்த பிளாப்பி, சிடி எல்லாம் என்னோட சிஸ்டமில் டவுன் லோட் பண்ணிடுங்க. நான் ஈவ்னிங் பார்த்துக்கிறேன்.''

''யெஸ் ஸார்..'' அவனைக் கடந்து லேப்டாப்பை ஆன் செய்தவள் லாகினுக்குப் பிறகு, பாஸ்வேர்ட் கேட்க, ஸார் உங்க பாஸ்வேர்ட்?''



''நிலா..'' என்றான் வெகு கூர்மையாய் அவள் விழிகளை நோக்கியபடியே.

விரலும் மனமும் நடுங்கிட நான்கு வார்த்தைகளைத் தட்டினாள். அவளின் மனக்குமுறலினை அந்த விரல்களில் புரிந்து கொண்டவன் வாய்க்குள்ளேயே சிரித்தான்.

''ஓகே மிஸ்.. மிஸ்தானே..''

'கடவுளே இவனிடம் இன்னும் எத்தனை குத்தல்களைத் தாங்க வேண்டுமோ?' என்றெண்ணியபடியே,

''ஆமாம்..'' என்றாள்.

''மிஸ்.. நிலா ஸாரி ராணி... நான் இந்த ஹோட்டலை பார்வையிட வேண்டுமே?''

''நான் வருணை அழைக்கிறேன் ஸார்..''

''இங்கு இன்சார்ஜ் நீங்கதானே அப்போ நீங்களே வரலாமே?''

''அது வந்து ஸார்..?'' அவள் மறுப்பு தெரிவிப்பதற்குள் அவன் எழுந்து விட்டதால் வேறு வழியின்றி அவளும் புறப்பட வேண்டியதாகிப் போனது.

முதலில் ரிசப்ஷனில் லாவண்யாவை அறிமுகப்படுத்தி விட்டு, இதர வேலையாட்களை சிறு அறிமுகம் செய்தாள். காலியான அறையொன்றை கவனித்தான். ஒழுங்காய் விரிக்கப்பட்ட விரிப்புகள், அழுக்கில்லா திரைச் சீலைகள், சுவரை அலங்கரிக்கும் சுவரொட்டிகளோடு பூக்களும் என அறை கண்ணைக் கவரும்படி ரசனையோடு இருந்தது.

''வெரிகுட் ரூம்ஸ் எல்லாம் நல்லா மெயிண்டெனண்ட் பண்றீங்க?''



அடுத்தடுத்து உணவருந்தும் இடம், நீச்சல் குளம், உணவு தயாரிக்கும் விதம் என அவன் பார்வை விரிந்தது.

நீச்சல் குளம் அருகில் வந்ததும் இருவரிடமுமே சற்று நேரே மௌனம் நீடித்தது. அவன் மனதில் அந்நாளைய நினைவுகள் பூத்தன. ராணியின் நிலையும் அதுதான். இதுபோன்ற நிலையில்தானே தன்னையும் மறந்து அவன் அணைப்பில் கட்டுண்டு நின்றது.

ஆதவன் அவள் புறம் திரும்பினான். அவளின் உணர்வுகள் ததும்பிய முகத்தில் நிலாவின் மனமும் தன்னைப் போல் பழைய நினைவுகளில் சுழல்கிறது என்று தோன்றியது.

''நிலா?'' மெல்ல அழைத்தான்.

''ம்..'' தன்னையும் அறியாமல் அவன் அழைப்பிற்கு தலையசைத்தாள். பின் உடனே சுதாரித்து ஆதவனிடம் இருந்து விலகி நடந்தாள். அவனும் வேறெதுவும் பேசாமல் பின் தொடர்ந்தான். அவன் அவளுடன் நெருங்கி நடந்தது எல்லோரையும் புருவம் உயர்த்திப் பார்க்கவே செய்தது.

ராணிக்கு இது தர்மசங்கடமாய் இருந்தது. ஆதவனுடன் தனித்திருக்கும் ஒவ்வொரு நொடியும் முள் மேல் நிற்பதைப் போல் இருந்தது.

இரவு நேரம் அறைக்குள் வந்து முடங்கி விட்டாள். தாமரையம்மாளிடம் கூட நேரில் சென்று பேசவில்லை. போனிலேயே விசாரித்து விட்டு, தனக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வந்துவிட்டாள்.

உடையைக் கூட களைய மனமின்றி அப்படியே படுக்கையில் சரிந்து விட்டாள். இவனெப்படி இங்கே? யார்

கண்ணில் இருந்து தப்பியோட வந்து இங்கே தஞ்சம் புகுந்தாளோ அவனிடமே மாட்டிக் கொண்டாளே?

நேரில்தான் பார்க்கவில்லையே தவிர மனதில் ஓராயிரம் முறை பார்த்திருப்பாளே? எத்தனை மூடிகள் இட்டாலும் ஆதியின் நினைப்பை மறைக்க இயலாமல் தவிப்பது உண்மைதான்! விவஸ்தை கெட்ட மனது. இந்நிலை நீடிப்பது கூடாது. என்ன செய்ய வேறு எங்காவது போய்விடலாமா என்றால் அதுவும் அவளால் முடியாதே?

தனியாளான அவளின் செலவிற்கும், மேல் வரும் வருமானத்தினைக் கொண்டு ஆசிரமத்தில் இரண்டு பிள்ளைகளைப் படிக்க வைத்து வருகிறாள்.

இப்போது திடீரென்று எடுக்கும் எந்தவொரு முடிவும் பாவம் அவர்களை பாதிக்குமே? இவை தவிர, பெரியவரிட மும், தாமரையம்மாளிடம் இருந்து விடைபெறுவது அத்தனை சுலபம் இல்லையே? சரியானதொரு காரணம் இல்லாமல் அவரிடம் இருந்து தப்பிச் செல்லவும் இயலாதே!

தாயின் மறைவிற்குப் பிறகு, தனியாய் தவித்தவளை இன்னொரு அன்னையாய். தாங்கி நேசக்கரம் நீட்டி கௌரவமாய் வாழ்ந்திட ஒரு வாழ்க்கையும் ஏற்படுத்தி தந்த மதரின் பேரும் கெடுமே. இருப்பினும், இதையெல்லாம் மனதில் வைத்து இங்கே வேலையைத் தொடரும் பட்சத்தில் ஆதியின் அருகாமை நெருப்பு மூட்டாதா?

ஒரு காலத்தில் ஒருமுறையேனும் காண மாட்டோமா? என்று. ஏங்கித் தவித்த அந்த முகத்தை இன்று எதிர் கொள்ளவே முடியவில்லையே, மனம் குமைந்தது. சிலர் வாழ்வில் அழமட்டுமே பிறந்தவர்கள் அந்த வகைதான் ராணியும்.





## 3

கற்பனையும், நினைவுகளும் இல்லை யென்றால், உலக இயக்கமே திசைமாறிப் போயிருக்கும். சில நிகழ்வுகள் நடக்கும் நேரத்தை விடவும், நினைவிற்குள் அமிழும் நேரம்தான் அதிகமாய் இனிக்கும். அதுவும் காதல் கொண்ட மனது, ஒரே விஷயத்தையே ஆயிரம் முறை யோசிக்கும், மனமும் மூளையும் அரை மயக்க நிலையிலேயே இருக்கும் காதல் ஒரு போதை.

இனிக்க இனிக்க சுவைத்து விழுங்கும் நேரம் கசப்பைத் தருவது. வெண்ணிலா இதுதான் அவளின் பெயர். சிறு வயது முதலே அவளின் செய்கையில் உள்ள நெளிவும், கம்பீரமும் அனைவரையுமே கவர்ந்தது. தாய் நந்தினி மகளின் அழகிற்காய் செல்லமாய் அழைக்கும் பெயர்தான் ராணி.

ராணியின் தாய் நந்தினி வசதியான குடும்பத்தில் பிறந்தவள். ஒரு விபத்தில் பெற்றோரை இழந்து உறவு களினால் ஆசிரமத்தில் விடப்பட்டவள். அழகும் படிப்பும் வளர கூடவே காதலும் வளர்ந்தது. மதரின் ஆசீர்வாதத்தோடு அவனையே திருமணமும் செய்து கொண்டாள்.

இனிமையாய் சில காலம் ஓடிய வாழ்வில், பார்த்திபனின் அஜாக்கிரதையால் வேலை பறிபோக குடும்பச் சூழ்நிலையில் நந்தினி பணிபுரிந்தாள். அன்றிலிருந்து எதற்கெடுத்தாலும் சந்தேகம், தினம் தினம் அடி உதை சித்ரவதை இதில் ராணி வேறு கைக்குழந்தை, எத்தனையோ போராட்டத்தோடு வாழ்ந்தவள்.

கணவனும் ஒரு கட்டத்தில் பிரிந்து போய்விட, இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையோடு மதரிடமே மீண்டும்



அடைக்கலம் புகுந்து விட்டாள் அப்போது வெண்ணிலா விற்கு வயது 11.

தாயின் வலிகளையும், கற்பனைகளையும் வேதனைகளை யும் அவள் வெகுவாய் உணர்ந்து இருந்தாள். சந்தேகம் எனும் பேயின் பிடியில் அழகான மலரான அம்மா பட்ட வேதனைகளை அவள் மனதில் பசுமரத்து ஆணி போல் பதிந்தன. பின் அன்னையும் மறைய, படிப்பு முடித்து மதரின் ஆலோசனையில் பாதர் தேவசகாயம் கிருபையில் இந்த வேலை கிடைத்தது!

காதற் காற்று தீண்டாதவர்கள் பூவுலகில் யாருமில்லை, எத்தனையோ இரும்புக் கதவுகளை மனதிற்குள் போட்டிருந்த போதும் ஆதவனைக் கண்டதும் நெருப்பிற்கு இளகும் இரும்பாய் மாறினாள் வெண்ணிலா. ஆதவனை சந்தித்த நாள் கண் முன் விரிந்தது.

வெண்ணிலா அப்போது கல்லூரி இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்த நேரம். சக மாணவியின் திருமணத்திற்கு என சேலத்திற்கு சென்ற போதுதான் முதன் முதலில் ஆதவனைக் கண்டது.

மாணவப் பருவம் என்பதே மனக் கவலை அற்ற பருவமல்லவா அர்த்தமற்ற சிரிப்பு, தேவையில்லா கோபம், உணர்வுகளுக்கு அதிகம் மதிப்பளிப்பது போன்ற ஒட்டு மொத்த இளமையான நெகிழ்ச்சி அல்லவா. பட்டுப்பூச்சியாய் சுற்றித் திரியும் வயதல்லவா.

தோழிகளோடு அழகாய் உடை உடுத்தி அடக்கமாய் அங்குமிங்கும், அலைந்து கொண்டிருந்தவள் எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தாள்.



''டேய் பாபு! உன் ஆளு வெண்ணிலா இன்னைக்கு ரொம்பவும் நல்ல மூடில் இருக்கா போல. பேசாம இப்பவே உன் லவ்வை அவ கிட்டே ஓப்பன் பண்ணிடேன்.''

''ஆமாடா கூட்டமும் அதிகமாயிருக்கு. அவளால் அடிக்கக் கூட முடியாது.''

''சும்மாயிருங்கடா..''

''ஏண்டா மச்சான் காலேஜ்ல உன் பின்னாடி சுத்தாத பெண்ணுங்களே இல்லை. நீ என்னடான்னா உன்னை திரும்பிக் கூடப் பார்க்காத இவ பின்னாடி சுத்துறே.''

''டேய் வானத்துல ஆயிரம் நட்சத்திரம் இருந்தாலும் நிலா ஒண்ணுதானடா..''

''ரொம்ப நெஞ்சை பிழியறடா என்கிட்ட கொட்டாம அவகிட்ட போய் பேசு போ..''

''நானும் எவ்வளவோ ட்ரை பண்றேன்டா. ஆனா என்னால முடியல. அவ கண்ணைப் பார்த்ததும் ஆட்டோமேட்டிக்கா ஆப் ஆயிடறேன்..''

''இதே டயலாக்கை, இன்னும் எத்தனை தடவைதான்டா சொல்லுவீங்க..''

''டேய் இதெல்லாம் எங்கேடா நமக்குன்னு மடங்குது.''

''லவ் பண்றவனுக்குத்தான்டா அந்த பீலிங்ஸ் எல்லாம் புரியும்..''

''கரெக்ட்டா நானும் ட்ரை பண்றேன். ஆனா என்னைப் பார்த்தாலே நம்பியார், வீரப்பாவைக் கண்ட மாதிரி ஓடிறாங்க.. அதுக்கெல்லாம் மச்சம் வேணும்டா..''

இளசுகள் ஒருவரையொருவர் கிண்டல் பேசியபடி இருக்க, வெண்ணிலா இதையெல்லாம் கவனியாமல் மிகவும் மும்முரமாய் வேலையில் ஈடுபட்டு இருந்தாள்.

கரும்பச்சை நிறத்தில் ராசி சில்க் புடவையும், அதற்கேற்றாற் போல் சோளியும், முத்து மணியில் கற்கள் பதித்த வளையல்கள், கம்மல், நெக்லஸ் என மணி வகைகள் அவளை அப்சரஸாகக் காட்டியது. திருமண வரவேற்பு மிகப் பெரிய ஓட்டல் ஒன்றில் நடந்தது.

''கண்ணைப் பறிக்கும் விளக்குகளோடு, மேலும் ஜொலித்தனர் மணமக்கள். தோழியின் வீடு பசையுள்ள இடமென்றால் பணத்தை வாரி இறைத்திருந்தார்கள். நம்மூர் திருமணங்களில் மட்டும்தான் இந்த நேர்த்தி இருக்கும்.''

அழகான சடங்குகள், அன்பான உறவுகள், வேடிக்கை யானப் பேச்சுகள் என அந்த இடமே கலகலப்பாய் இருந்தது. சுவையின் உணவு பபே முறையில் வெஜ், நான் வெஜ் என இரு வகையாய் பிரித்து வைக்கப்பட்டு இருந்தது. கூடவே மென்மையான இசைக் கச்சேரி வேறு.

உடையின் கசகசப்பும், உறவினர்களின் வாழ்த்தும், பூமாலையின் கனமும் தாளாமல் மணப்பெண் தேவி வெண்ணிலாவை அருகிலேயே நிறுத்திக் கொண்டாள்.

''என்ன தேவியிது! என் கையை விடுடி, கல்யாணப் பொண்ணு என் கையைப் பிடிச்சுகிட்டு இருந்தா மாப்பிள்ளை கோபிச்சுக்கப் போறார்.''

''எனக்கு ஒரே படபடப்பாயிருக்கு!''

''அதான் பக்கத்திலேயே அவர் இருக்காரே நான் வேற நந்தி மாதிரி எதுக்கு?''



பெண்களிருவரும் புன்னகைத்தனர். கீழே பிரபு வெண்ணிலாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான். தனலாய் நெருப்பு எரிந்தது. நேற்றிரவு வரவேற்பிற்கு கிளம்பும் முன்பே வெண்ணிலாவிடம் தனிமையாய் கிடைத்த சந்தர்ப்பத்தில் காதலைச் சொல்லிட,

''ஸாரி பிரபு, காதல் கல்யாணம் இதிலெல்லாம் எனக்கு எந்த ஈடுபாடும் இல்லை. உங்க அழகுக்கு என்னை விட நல்ல பெண்கள் கிடைப்பாங்க. ப்ளீஸ் இனி இதைப் பற்றி பேச வேண்டாம்'' என்று முகத்திலடித்தாற் போல் கூறிவிட்டாள்.

காலேஜின் ரோமியோ அவன் பிரபுவின் கண் அசைவிற் கென, எத்தனையோ பெண்கள் ஏங்கிட பிரபுவிற்குள்ளும் கர்வம். எப்பேர்ப்பட்டவளும் தனக்கு அடிமையாகி விடுவாள் என்று! ஆனால் வெண்ணிலா எந்த மாய வலையிலும் சிக்க மாட்டாள் என்பதையுணர்ந்து காதல் எனும் வலை வீசிட, அவள் அதிலும் சிக்கவில்லை என்றதும், கூடவே நண்பர்களின் சீண்டல் வேறு அவனுக்கு போதை ஏற்றியது.

இந்த முறை ஊருக்குத் திரும்புவதற்குள் அவளை அடைந்து விட வேண்டுமென்ற வெறியே பிடித்து விட்டது. எனவே கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு சந்தர்ப்பத்திற்கெனக் காத்து இருந்தான் பிரபு.

உறவினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி குழுக்களாகப் பிரிந்து ஏதேதோ பேசிக் கொண்டிருக்க, திடீரென ஓட்டல் ஊழியர்களிடையே சின்ன சலசலப்பு. கையில் ஒரு பூங்கொத்தோடு நெடிய கால்களை நீட்டி தோள்களைக் குலுக்கி அலட்சியமாய் நடந்து வந்தவனைக் கண்டதும் மணமகனின் முகத்தில் அத்தனை மலர்ச்சி.



''காங்கிராட்ஸ்'' மணமகன் வாசுவின் கையைப் பற்றி குலுக்கினான்.

''தேங்க்ஸ் ஆதவா! எங்கே நீ வராம போயிடுவியோன்னு நான் ரொம்பவே பயந்தேன்.''

''என்ன வாசு நீ நேரில் வந்து அழைத்தும் நான் வராமல் இருப்பேனா?''

''பைதி வே தேவி இது என்னோட பெஸ்ட் பிரண்ட் ஆதவன். இந்த ஹோட்டலின் உரிமையாளன்.''

''வணக்கம்'' கரம் குவித்தபடி தேவி புன்னகைக்க,

''பெரிய பிஸியான ஆளு ஆனா இத்தனை வேலை யிலும்..!'' நண்பனின் பேச்சை இடைமறித்தான் ஆதவன். ''இவன் சரியான ஓட்டை வாய் ஆசாமி. வாயைத் திறந்தா மூடவே மாட்டான் சிஸ்டர்..'' வசீகரமாய் சிரித்தவன் தேவியை தாண்டி அருகில் பதுமையாய் நின்றவளைக் கண்டான்.

''மேடம் யாரு?''

''என் தோழி வெண்ணிலா..''

''வணக்கம்'' என்றான். பதிலுக்கு கரம் குவித்தாள். தாமரை மொட்டென குவிந்திருந்த வெண்ணிற விரல்களைக் கண்டதும் தொட்டு பார்த்திட ஆசை பிறந்தது அவனுக்கு!

சட்டென தலையை உதறிக் கொண்டான். இதென்ன நினைப்பு என்று. அதற்குள் வாசு குறுக்கே புகுந்தான். ''நல்லவேளை ஆதவா நீ வந்தே, தேவிக்குத் துணையா சிஸ்டர் இருக்காங்க. நான்தான் அம்போவென்று இருந்தேன்.''

''அதான் நான் வந்திட்டேனே..'' ஆதவன் வெண்ணி லாவைப் பார்த்து கண் சிமிட்ட, அவள் விதிர் விதிர்த்தாள்.



''இது உன் ஓட்டல் நான் கேட்கக் கூடாதுதான். இருந் தாலும் என் மணவிழாவாயிற்றே! ஏதாவது சாப்பிடறியா?''

''அதெல்லாம் பிறகு பார்க்கலாம்.''

''நோ.. நோ.. சிஸ்டர் இப் யூ டோன் மைண்ட் ஆதவனுக்கு உணவு அரேன்ஞ் பண்ண முடியுமா?''

''நானா?'' வியப்போடு கேட்டாள் வெண்ணிலா.

''ஆமாம் ஸார். பாவம் இவர் கூட இன்னமும் சாப்பிடலை. போ வெண்ணிலா போய் சாப்பிட்டு வா..''

அவள் மேலும் தயங்கிட, ''வாங்க மிஸ் மாப்பிள்ளையும், பொண்ணும் மறைமுகமா விரட்டும் போதே போயிடலாம். அப்புறம் தள்ளி விட்டுடுவாங்க. நாமயெதற்கு பூஜை வேளையில் கரடியாட்டம்.. கம் ப்ளீஸ்'' என்றழைத்து விட்டு, நடக்கவும் இவளும் பின்னே நடந்தாள்.

உரிமையாளன் என்பதால் எங்கு திரும்பினாலும் பல தலைகள் அசைந்தன. ஆதவன் இவளிடம் நெருக்கமாய் பேசியபடியே வர அனைத்துக் கண்களும் தன்னையே துளைப்பது போல் தோன்றியது வெண்ணிலாவிற்கு!

''ஏன் வெண்ணிலா அளந்துதான் பேசுவீங்களா?''

''அப்படியெல்லாம் இல்லை ஸார்..''

''ஸார் மோரெல்லாம் வேண்டாமே!''

''கேட்டாலும் இல்லை.''

''எது?''

''மோர்தான்..''

''எனக்கு சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது. யூ ஆர் வெரி ப்யூட்டிபுல்!'' என்றான் ஆதவன்.

''இப்போ நான் வெட்கப்பட்டு தேங்க்ஸ் சொல்வேன்னு நினைச்சா நிச்சயம் ஏமாந்துதான் போவீங்க. நீங்க என் கெஸ்ட். உங்களை உபசரிக்க வேண்டியது என் கடமை என்ன சாப்பிடறீங்க?''

அவள் நீளமாய் பேச, ஆதவன் புன்னகைத்தான். வெகு சீரான பல் வரிசை, தலை சரித்து முன்னும் பின்னும் குலுங்கி, குளிர் காற்று போல் அந்தப் புன்னகை வெண்ணிலாவை சற்று அசைத்துப் பார்த்தது, அந்தக் கோபத்தில்!

''இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படி விழுந்து விழுந்து சிரிக்கிறீங்க? பார்த்து பல் சுளுக்கிடப் போவுது.''

''உன் பட்டு விரல் உரசினால் எந்த சுளுக்கும் பறந்து விடுமே!''

''உங்களுக்கு ரொம்பவும் திமிர் மிஸ்டர்!''

''ஆதின்னு கூப்பிடலாம். எனக்கு நெருக்கமானவங்க அப்படித்தான் கூப்பிடுவாங்க.''

''உங்களைக் கூப்பிட வேண்டிய அவசியம் எனக்கில்லை.''

''கோபிக்காதே நிலா. முகம் சிவந்து கோவைப் பழமாகி விடுகிறது. உண்மையைச் சொல்லப் போனால் உன்னிடம் பேச வேண்டும் என்று எதுவோ தூண்டுகிறது. ஏன் என்று எனக்கேப் புரியவில்லை.''

''நான் வழி சொல்லவா?''

''ப்ளீஸ்..''



''ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து உச்சியிலே தேய்ங்க..''

''அதையும் தங்களின் திருக்கரங்களே செய்தால் நலம்.''

''உங்களை ஒரு ஜெண்டில்மேன்னு நினைச்சேன். ஒரு பெண் கிட்டே எப்படி பிஹேவ் பண்றதுன்னே எனக்குத் தெரியலையே!''

''ஏய் நானென்ன உன்னைக் கட்டியா பிடிச்சேன்.''

''ச்சீ... இந்த ஆசை வேற இருக்கா... உங்க கூட வந்ததே தப்பு..'' அவள் திரும்பி நடக்க முயல. அருகில் இருந்த செடியில் புடவைத் தலைப்பு மாட்டி இழுக்க தடுக்கி விழப் போனவளை ஆதவன் தன் வலிமையான கரங்களினால் தாங்கினான்.



4

வெண்ணிலாவின் கை அவன் தோளில் பதிந்தது. ஆதவனின் விரல்கள் அவள் தோளில் இடுப்பின் குழைவான பிரதேசத்தில் அழுத்தியது. நேருக்கு நேராய் இருஜோடி கண்களின் சந்திப்பு, தன்னையும் அறியாமல் மயக்கம் ஒன்று ஆட்கொண்டு இருந்தது.

ஆதவன் முகம் நோக்கி குனிந்தான். வெண்ணிலா கண்களை மூடிக் கொண்டாள். அவள் நெஞ்சுக்கூட்டு ஏதோ ஏக்கத்தில் மேலும் கீழும் அசைந்தது. ஈரமான உதடுகள் அதிகமாய் ஈர்த்தன. மூடிய இமைகளோடு ஒரு தேவதை உறங்குவதைப் போல் கற்பனை செய்தவன்.

இடத்தின் சூழ்நிலையை உணர்ந்து தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு அவளை விடுவித்தான் பிரிய மனமின்றி!



அந்த மயக்கத்தில் இருந்து மெல்லக் கலைந்தவள் மோனமான அந்த விழி வீச்சைத் தாங்க முடியாமல் தலைகவிழ்ந்த வண்ணம் 'நன்றி' என்றாள்.

''நானல்லவா நன்றி சொல்ல வேண்டும். இந்த தேவதை யைத் தாங்கியதற்கு! அடியேனும் ஏதோ புண்ணியம் செய்து இருக்கிறேன்'' எனும் பாவனையில் தலைதாழ்த்திக் கூறிட,

களுக்கென்று சிரித்துவிட்டாள்.

''அப்பாடா கோபமெல்லாம் தீர்ந்து விட்டதா. புன்னகை அழகு என்பதே உன்னைப் பார்த்துதான் புரிகிறது.''

''ஹோட்டல் அதிபர் என்றுதான் நினைத்தேன். எப்போதி ருந்து கவிஞர் ஆனீர்கள்?''

''கடைக்கண் பார்வைதனை கன்னியர்தம் காட்டி விட்டால்..!''

''அய்யோ போதும் போதும் என்னை விட்டுடுங்களேன் ப்ளீஸ்..''

''அப்படி சரண்டர் ஆயிட்டா நோ ப்ராப்ளம்... நிலாம்மா ஆபீஸிலிருந்து அப்படியே வந்துவிட்டேன்... பசிக்குது சாப்பிடலாமா?''

''ஷ்யூர்...!'' இருவரும் ஒரு சேர நடந்தனர். இலேசாய் விரல்கள் உரசின. மின்சாரம் பாய்ந்தது போலொரு உணர்வு.''

''நிலா நீயெப்படி வெஜ்ஜா? நான் வெஜ்ஜா?'' கேள்வி கேட்டான். ஏதோ நினைவில் அவள் பதில் சொல்லத் திணற,

''பிரியாணி ஓகேவா?'' என்று கேட்டுவிட்டு அவனே இரண்டு ப்ளேட்டுகளில் கொண்டு வந்தான். இவளுக்கோ



சங்கோஜமாய் இருந்தது. நிலாவென்று அவன் பெயரை சுருக்கி அழைத்ததும் இனித்தது.

''ப்ளீஸ் ஆதி! நானே எடுத்துக்க மாட்டேனா. எல்லாரும் ஒரு மாதிரி வித்தியாசமாய்ப் பார்க்கிறார்கள். இந்த ஓட்டலின் நிர்வாகி நீங்கள்.. எனக்குப் போய்..''

''ஸோ வாட் நிலா.. அடுத்தவங்க பாக்கிறதுக்கும், கேட்கிறதுக்கும் பயந்தா மூச்சு கூட விட முடியாது.''

''நிலா! நீ நம்புவாயாயென்று தெரியாது. சில பேரிடம்தான் பார்த்த முதலே ஒரு ஒட்டுதல் ஏற்படும். நீ முதற் பார்வை யிலேயே என்னை ஈர்த்து விட்டாய்!''

நிலா ஸ்பூன் கொண்டு உணவை அளந்தாள். அதற்குள் தேவியிடம் அழைப்புவர, அதே நேரம் ஆதவனிடமும் யாரோ சிலர் பேசிட, இவள் நழுவினாள். ஆனால் விழிகள் எத்தனைக் கட்டுப்படுத்தியும் ஆதவனிடமே நிலைத்தன. அவனும் இவளையேதான் பார்த்திருந்தான்.

''ஏய்! அவர் என்ன உனக்கு முன்பே பழக்கமோ?'' தேவி கேட்கத் திகைத்தாள் நிலா.

''இல்லையே? ஏன் கேட்கிறே?''

''இல்லே ஆதி! யாரிடமும் சுலபத்தில் பேச மாட்டாராம். எத்தனையோ பெண்கள் அவரிடம் பேச வந்து மூக்கறுபட்டு போய் இருக்கிறார்கள். ஆனால் உன்னிடம் இயல்பாய் பேசியதால் இவரே ஆச்சரியப்பட்டுப் போனார். தவிரவும் நீயும் இதுவரையில் யாரிடமும் பேசியதில்லை. அதனால் தான்..'' தேவி இழுக்க.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. உன் கணவரின் நண்பர் தவிரவும் ஓட்டலின் அதிபர் அந்த மரியாதையில்தான்

பேசினேன். சரி நான் ப்ரண்ட்ஸோட இருக்கேன்'' தோழியிட மிருந்து நழுவினாள். தேவியிடம் அத்தனை சமாதானம் கூறினாலும் அவளின் உள் மனமே அதை ஏற்க மறுத்தது.

எந்த ஆண் மகனையும் நிமிர்ந்து கூடப் பார்க்காதவள் கல்லூரியில் இவளிடம் பேச முயலும் ஆண்கள் எத்தனை எதற்கும் இடம் தராமல் ஒதுங்கியிருந்தாளே, பிரபு எந்த வகையிலும் குறையில்லாதவன் அவனே இவள் முன் மண்டியிட்ட போதும் ஒதுங்கினாளே?

ஆனால், ஒத்த விழிப் பார்வையிலும்... புன்னகையிலும், அந்தத் தொடுதலிலும் இதயத்தில் ஒரு சிறு சலனத்தை ஏற்படுத்தி விட்டானே. ஆதவனின் குறுகுறுத்த விழிகள் மீண்டும் போதையை ஊட்டின. முன்பின் அறியா ஒருவனிடம் ஏற்பட்ட இந்த ஈர்ப்பு அத்தனை சரியென்று தோன்றவில்லை, யோசனையோடு சென்றவளை தோழிகளின் கூட்டம் பிடித்துக் கொண்டது.

''ஏய்! வெண்ணிலா என்னடி எதிர்க்க நாங்க இருக்கிறது கூடத் தெரியாமா? எந்தக் கோட்டையைப் பிடிக்க தீவிரமான யோசனை?''

''உனக்குத் தெரியாதா? மேன்மை பொருந்திய வெண்ணி லாவை ஆட்கொண்ட அண்ணலையெண்ணி!''

''ஏய்..!''

''யாரோ ஒரு ஆணழகனோடு பேசிக் கொண்டு இருந்தியே அது யாரு?''

''சீப் கெஸ்ட்.''

''உனக்கா?''



''என்னடி பேச்சு இது?'' மாப்பிள்ளையின் நண்பர், இந்த ஹோட்டலின் நிர்வாகி.''

''கூடவே உன் மனங்கவர்ந்தவர் என்ற அடைமொழி யையும் சேர்த்துக் கொள்ளலாமே?''

''அடிப்பாவிகளா? அவரைப் பார்த்துப் பத்து நிமிடங்கள் தான் ஆச்சு.''

''கண்கள் கலக்க ஒரு நொடி போதும் அம்மணி..

''சும்மா இரு சுதா. இவதான் லேடி விஸ்வாமித்திரர் ஆயிற்றே?''

''அப்போ எதைப் பற்றி அரைமணியாய் பேசினாளாம்?''

''சாப்பாட்டில் உப்பிருக்கா? புல் அளவா வெட்டப்படு கிறதாவென்று?'' மீண்டும் கொல்லென்று சிரிப்பு அலை மோதியது.

''ஆனால், ஒண்ணு வெண்ணிலா உங்க ரெண்டு பேருக்கும் சூப்பர் பொருத்தம்..''

''ஆள் மட்டும் இல்லை ரதி, இருவரின் பெயரும் அய்யாவின் பெயர் ஆதவனாம். மேடம் வெண்ணிலா கேட்க வேண்டுமா?''

''அப்போ டே- நைட் ஒர்க்குன்னு சொல்லு..'' சுதா கண்ணடிக்க.

''ச்சீ! விட்டால் அவரோடு எனக்குக் கல்யாணமே பண்ணி வச்சுடுவீங்க போலிருக்கே? இனிமே உங்ககூட பேசினா எனக்கும் கிறுக்குதான் பிடிக்கும். தோழிகளின் கிண்டல் பேச்சுகளில் இருந்து விடுபட்டு கிளம்பினாள்.



கண்கள் தேவையில்லாமல் ஆதவனைத் தேடின. ஆனால், பிரபு இடைமறித்தான். ''என்ன வெண்ணிலா பணக்காரனைப் பார்த்ததும் பல் இளிக்கிறாயே? அவனை விட எந்த விதத்திலும் நான் குறைந்தவன் இல்லை.''

''யூ இடியட்..! உனக்கு ஒருமுறை சொன்னாப் புரியதா? அறிவில்லை இனிமே இந்த மாதிரி ஏதாவது உளறினால் மரியாதை கெட்டுடும்.. ஜாக்கிரதை..'' விரலை நீட்டி எச்சரித்தபடியே நடந்தாள்.

''இருடி இரு. திமிராகவே பேசறே, இந்தத் திமிரை அடக்குறேன். இங்கேயிருந்து போறதுக்கு முன்னாடி உன்னை அடைஞ்சே தீருவேன்'' மனதிற்குள் கறுவினான்.

மேற்கொண்டு இசைக் கச்சேரி தொடர்ந்தது. 'வசீகரா..' என்ற பாடல் வழிய, வெண்ணிலாவும், ஆதவனும் சில நேரங்களில் இணைந்தார்கள். பிரிந்தார்கள். பார்வைகளால் ஒருவரையொருவர் விழுங்கினார்கள்.

ஏக்கங்களைச் சுமந்தபடி கரைந்தார்கள். விருந்து முடிந்தது. அவரவர்களில் பெண்கள் நான்கு பேருக்கும் தனி அறைகள் ஒதுக்கப்பட்டு இருந்தன. தோழிகள் அனைவரும் களைப்பில் உறங்கிட, வெண்ணிலாவிற்கு மட்டும் ஏனோ உறக்கம் வரவில்லை. மனம் முழுக்க ஆதவனே நிறைந்திருந்தான்.

ஆண்களின் மேல் ஒரு பிடிப்பே இல்லாமல், இருந்தவளை திரும்பிப் பார்க்க வைத்தவன் அல்லவா! இது சரியா தவறாவென்று மனதினுள் மெல்லிய போராட்டமே நிகழ்ந்தது. அம்மாவின் முகம் ஒருமுறை மனதில் தோன்றியது.

எத்தனை போராட்டங்கள், வலிகள், எல்லாவற்றையும் எனக்காகத் தாங்கிக் கொண்டு சொல்லம்புகளால், இதயத்தில்



கீறி புண்ணாகிய போதும், என் வாழ்வு மலர போராடியவள் ஆயிற்றே!

இவள் பள்ளிப் படிப்பில் தேறி, கல்லூரியில் காலடி வைத்த நேரம், தாய் நந்தினி மகளின் தலையைத் தடவியபடி கூறியது, ''ராணியம்மா, இது அலைபாயுற வயசு. ஆனா எனக்கு உம்மேல முழு நம்பிக்கையிருக்கு.''

''எது சரி, எது தவறுன்னு தெரியாத அளவிற்கு உன்னை நான் வளர்க்கலைம்மா... ஆண்கள் தங்கள் தேவை தீரும் வரையில் அன்போடு இருப்பாங்க. அவங்க நினைச்சது கிடைக்கும்னு தெரிஞ்சிட்டா, அப்புறம் கால்ல போட்டு மிதிக்கவும் தயங்கமாட்டாங்க. இதுக்கு என் வாழ்வே ஒரு உதாரணம்..''

''நீ கவலைப்படாதேம்மா. என் கவனம் முழுக்க கட்டாயம் படிப்பில்தான் இருக்கும். சூடுபட்ட பூனையவள் இப்போது ஆதவன் பொறி வைக்கிறானோ! ஜன்னலின் திரையை விலக்கினாள். எதிரே சலனமே இல்லாமல் நீச்சல் குளம்! பொன்னிற விளக்கு ஒளியில் நீர் மின்னியது. தோழிகள் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.



5

இரவுக் கோழியாய் இவள் மட்டும் நீச்சல் குளம் நோக்கி நடந்தாள். அலைகளற்ற அந்த பச்சை நிற நீரின் மேல் இளநீல வளையங்கள் மிதந்தன. மஞ்சள் நிற ஒளியில் மின்னிய அந்த நீரை விரல்களால் அளந்தாள்.

வெது வெதுப்பாய் இருந்தது. குளித்தால் தேவலாம் போலிருக்க.. நைட்டியின் மேல் கோட்டை நீக்கி விட்டு நீரில்

அமிழ்ந்தாள். வெதுவெதுப்பான நீர் உடலுக்கு இதயமாய் இருக்க அத்தனை நேரம் களைத்து இருந்த மனமும், உடலும் உற்சாகம் கொண்டது.

மேலும் ஐந்து நிமிடங்கள் நீந்தியெழுந்து அருகேயிருந்த தொங்கு ஊஞ்சலில் சரிந்தாள். தென்னை மரத்தின் தாலாட்டு, காலையில் இருந்து வேலை செய்த அலுப்பும், நன்றாய் உடல் சோர்க்க நீந்தியதும் சேர்த்து சுகமாய் உறக்கம் வந்தது.

கனவில் ஆதவனின் குறும்பான கண்கள், ஆளை அடித்துப் போடும் அழகு புன்னகை, வசீகரமான பேச்சு ஒன்றோடு ஒன்றாய் மாறி மாறி வந்தது.

அரைத் தூக்கத்தில் இருந்தவளுக்கு மெல்ல யாரோ ஊஞ்சலை ஆட்டுவது போல் தோன்ற, திகைப்புடனே கண்களைத் திறந்தாள். எதிரே ஆதவன் ஊஞ்சலில் ஒரு கை வைத்து ஆட்டியபடி இருந்தான்.

ஒருகணம் இது கனவோ என்று தோன்றினாலும், உண்மை உரைக்க தூக்கி வாரிப் போட்டது இவளுக்கு. ஏனெனில் அவளின் சயன நிலை படபடவென்று எழுந்திருக்க முயன்று தோற்றுப் போய் மீண்டும் விழுந்தாள்.

''என்னம்மா மகாராணிக்கு தூக்கம் கலைஞ்சிடுச்சா?''

''ஸாரி நான் அசந்து..''

''தூங்க எல்லாம் அனுமதி வேணுமாயென்ன?'' கேட்டபடி அவள் இறங்க கை கொடுக்க, ஒரு கணம் தயங்கி பின் தந்தாள் மீண்டும் விரல்களின் ஸ்பரிசம்!

***''தென்றலின் முள்ளாய் உன் பார்வைகள்***
***என் உயிர்ப்பூட்டைத் திறக்கும்***



***சாவிகள்! விழிகளின் ஸ்பரிசத்தில்***
***இருந்தே நான் மீளவில்லை, இந்த***
***விரல்களின் ஸ்பரிசம் தேவையா?''***

''என்ன விழித்துக் கொண்டே தூங்குகிறாயா?''

''இல்லை.. நீங்க இங்கே எப்படி?''

''நான் உறங்குவதற்கு முன்பு சற்று காலார நடப்பது வழக்கம். அதேபோல் வந்தேன். நீ உறங்கிக் கொண்டு இருந்தாய்.''

''சரி தொந்தரவு செய்ய வேண்டாமென்று..''

''அதிக நேரமாகி விட்டதா?''

''அரை மணி நேரம்தான்!''

''கடவுளே எழுப்பி இருக்கலாமே?''

''மனிதர்களை உறக்கத்தில் இருந்து எழுப்புவது தவறு. கடவுளை வேறு எழுப்ப வேண்டுமா?''

''அதனால்தான் வெண்சாமரம் வீசினீர்களா?''

''ஏன்? கூடாதா? பொருள் பொதிந்த பார்வையொன்றை அவள் புறம் வீசினான். ஸ்லீவ்லெஸ் நைட்டியின் ஈரம் காய்ந்து இருந்தாலும் மெல்லிய உடையென்பதால் அவள் செழுமை பளிச்சிட்டது. ஆதவனின் ஏக்கமான பார்வையை சந்தித்த போது தான் தன் உடை பற்றிய நினைப்பே வந்தது அவளிற்கு!

அதை உணர்ந்தவன் போல் அவள் மேலாடையை எடுத்துப் போர்த்தினான்.

''நான் வருகிறேன்.''



நகர முயன்றவளை கரம் பற்றி இழுத்தான் ஆதவன். ''என்ன அவசரம், ஈரமான கூந்தலை உளர விடாமல், நடுங்குகிறாய். உட்கார் சூடாய் ஒரு கப் காபி சாப்பிடு. வா'' எதிரே கண்ணாடியில் செய்யப்பட்ட நாற்காலியில் அவளை அமர வைத்தான்.

இவன் கண்களுக்கு மட்டுமல்ல கைகளுக்கும் ஏதோ சக்தி இருக்க வேண்டும்.

***''கருங்கடலாம் உன் கண்கள்***
***அலைபாயும் விழி கூட்டிற்குள்***
***அகப்பட்டு விட்டேன் நான்***
***இமையென்னும் கரைசேர***
***காதற்படகில் ஏறிவிட்டேன்!''***

''நிலா! முகத்திற்கு நேராய் நீட்டிய அவன் விரல்கள் அவளை நிகழ் உலகிற்கு கொண்டு வந்தன. உனக்கு கண்களைத் திறந்தபடியே கனவு காண்பது பிடிக்குமோ?'' இந்தா காபி நீட்டிய கோப்பையை வாங்கியவள், பருகியதும் புது தெம்பு வந்ததைப் போல் உணர்ந்தாள்.

''மணப்பெண் உனக்கு நெருங்கிய தோழியா நிலா?''

''ம்.. இருவரும் சிறு வயது முதலே நல்ல தோழிகள்...''

''இப்போ என்ன பண்றே?''

''பிபிஏ மூன்றாம் ஆண்டு படிக்கிறேன்..''

''மேற்கொண்டு என்ன படிப்பா? இல்லைத் திருமணமா?''

''இரண்டுமே இல்லை. வேலை மூன்று வேளை உணவும், உடையும் அளிக்கும்படி ஒரு வேலையைத் தேடிக் கொள்ள வேண்டும். எத்தனை நாள்தான் என் கார்டியன்களுக்குத் தொந்தவராய் இருப்பது.''



''கார்டியனா? உன் பேரண்ட்ஸ்..''

''எனக்குன்னு யாரும் இல்லை. நான் அனாதை இல்லத்தில் வளர்ந்தவள். அம்மாவும் இறந்து விட்டாள். பாதர் உதவியால் யாரோ சிலர் படிக்க வைக்கிறார்கள்.''

அவன் முகம் சற்றே கனிந்தது. யாருமில்லை என்று நினைக்காதே கண்மணி என்று அவளை அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் போல் இருந்தது. தன்னை அடக்கியபடியே பேச்சை மாற்ற விரும்பி அவளின் விருப்பு வெறுப்புகள் பற்றி பேசத் துவங்கினான்.

இயல்பான பேச்சில் நேரம் கழிந்தது. ''வரேன் ஆதி, நேரமாயிட்டது. ப்ரண்ட்ஸ் யாராவது பார்த்திட்டா ரொம்பவும் கிண்டல் பண்ணுவாங்க... காலையிலேயே அவங்ககிட்டே மாட்டிக்கிட்டு..''

''எதைப்பற்றி?''

''நானும், நீங்களும் ஒன்றாய் பேசிக்கிட்டு இருந்ததைப் பற்றி...!''

சிரித்தான். ''நிலா.. நம் நட்பு மேலும் தொடர வேண்டு மென்று நான் விரும்புகிறேன்'' ஆதவன் அவளை நோக்கி கையை நீட்ட இவளும் நீட்டினாள்.

பற்றிய கரத்தை விடாமல் தன் உதடுகளுக்கு அருகில் கொண்டு போய் மென்மையாய் முத்தம் பதித்தான். உடல் சிலிர்த்து வெண்ணிலாவிற்கு!

கண்களை மூடிக் கொள்ள, முகத்தினை இரு கரத்தினால் ஏந்தி மூடிய இமைகளுக்கு முத்தமிட்டான். பின் கன்னம் சுவைத்து இறுதியில் இதழ்களை சிறைப்படுத்திட, இவள் மொத்தமாய் தன்னிலை மறந்தாள்.

''நிலா! ஐ லவ் யூ'' மந்திரமாய் ஒலித்தன வார்த்தைகள். விடுவித்தான். ஆதவனின் கண்களைச் சந்திக்க மனமின்றி புன்னகையோடு ஓடிப் போய் விட்டாள். ஆதவன் கண் கொட்டாமல் அவளையே பார்த்தான்.

அதையே மற்ற இரு கண்களும் குரோதத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தன. அவை பிரபுவின் கண்கள்.

எத்தனை நாள் நான் இவள் பின்னாடியே சுற்றி இருப்பேன். ஆனால் இன்று காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கூட்டிப் போன கதையாய் இவன் யார் குறுக்கே வர, மனம் முழுக்க எரிச்சல் மண்டிப் போய் இருந்தது. இதை இப்படியே வளர விடவே கூடாது. வேரிலேயே நசுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தீவிரமாய் யோசித்தான்.

அவன் மனம் கொடூரமான திட்டம் ஒன்றை யோசித்து அதை உடனே செயல்படுத்தவும் துணிந்தது. வெண்ணிலா புகைச்சலாய் வந்தது பிரபுவின் குரல்!

தனக்கு பின்னால் பின்னப்படும் சதி வலைப் பற்றி உணராமல் வெண்ணிலா கட்டிலில் ஆதவனை எண்ணியபடி படுத்து இருந்தாள். ஆதவன் தொட்ட இடம் குறுகுறுத்தது. மூடிய போர்வைக்குள் அவன் இருப்பதைப் போலெண்ணி, இருந்தாலும் ரொம்ப தைரியம்தான்.

காலையில் சந்தித்த ஒரு பெண்ணிடம் திடீரென்று முத்தமிட்டு விட்டானே. நானும் மடத்தனமாய் எதிர்ப்பு காட்டாமல்.. ச்சே! என்னவோ அவன் கையைப் பற்றிய அந்த விநாடி என்னை முழுவதுமாய் அல்லவா ஒப்புவிக்க மனம் அசைந்து தந்தது.

ஏன் இந்தத் திடீர் மாற்றம். நானா இப்படி மாறிப் போனேன் என்று தன்னைத் தானே எண்ணியபடி வியந்தாள் வெண்ணிலா.



டைரியைப் பிரித்து எழுதினாள்.

ஒரே நினைவுத் தூறலில் நனைகிறோம் நாம். ரசனைகள் மட்டுமல்ல ரகசியங்களும் ஒத்திருக்கின்றன. உனக்கும் எனக்கும். உன் வருகையை எதிர்பார்த்தேன். அதிகாலை யிலேயே! ஏனோ நெஞ்சிற்குள் இனம் புரியா குறுகுறுப்பு. வருகிறேன் என்று நீ உறுதியளிக்கும் வரையில் படபடத்த இதயம் தலையசைப்பில் பட்டு சிறகை விரித்துக் கொண்டு வரப் போகும் அந்த சில மணித் துளிகளுக்காகவே காத்திருக்கிறேன், கடக்கிறேன், நிமிடங்களை!

வந்தாய்! விழிக் கூண்டிற்குள் எனை சிறை பிடித்து விட்டாய்! பதைபதைக்க பார்வை வலை விரித்தாய்! விழுந்து விட்டேன் அதில்! இருளும் ஒளியும் இணைந்திருந்த நேரம் வான வீதியில் வெண் பளிங்கு மேகத்தில் நீயும் நானும் சஞ்சரிக்கிறோம்!

உனை நேரில் காணா நேரம் ஆயிரம் வார்த்தைகளை உச்சரிக்கும் இந்த உதடுகள். நீ அருகில் இருக்கும் நேரம். அரை வார்த்தை பேசக் கூடத் தயங்குகிறது. எதையோ கேட்க எண்ணி அருகில் வந்தேன். விநாடிக்கும் குறைவான நேரத்தில். என் கரங்களைப் பற்றினாய்! இடை பற்றி இழுத்தணைத்து நெஞ்சின் சூடுரைத்த நேரம்! என் இதழ்களை நோக்கி நீ குனிய, பதறிப் போய் நான் விலக!... உன் துணிவு கண்டு எனக்குள் வியப்பு!

விலகி நின்றேன். தலை சரித்துப் பார்த்துக் கரம் நீட்டினாய். உன்னிடம் போகத் துடித்த, நீட்டிய கரங்களை பற்ற துடித்த என் இரு கைகளையும் கட்டிக் கொண்டேன். குனிந்து இருந்த முகத்தை விரல் கொண்டு நிமிர்த்தினாய்! அடுத்த நொடியில் உன் பிடியில் நான்! என் கையில் உன்னை பாதுகாப்பாய் எப்படி அவை உனை சேர்த்தன!



உன் தொடுதலில்தான் எத்தனை மென்மை, இந்த அணைப்பிற்காகவே ஏங்கியது மனம். உன் இனிய முத்தம் வேகமாய் வந்தடைந்த இதழ்கள் என் இதழ்களை நனைத்து விட்டு பிரிந்து, பிரிவு தாளாமல் மீண்டும் இணைந்தாய். வெட்கம் தாளாமல் உனைத் தள்ளிவிட்டு விலகினேன். நான் நேசித்த விழிகள் கொஞ்சின. வா என்னும் ஒற்றைச் சொல் காற்றாய் மிதந்து போதையோடு வர..! மீண்டும் உன் அணைப்பில் கட்டுண்டேன். இதழ்களால் இதயத்தைக் குடித்தாய்!

விலகி சென்று பின் திரும்பி வந்தாய். மீண்டும் இடையைப் பற்றி அணைத்துக் கொண்டாய். இது பிரிவை உணர்த்திய அணைப்பு. உன் உதடுகள் முகத்திலும், தோள்களிலும், கழுத்திலும் பதிந்தன. ஒரு முழு நிமிட அணைப்பிற்குப் பின் என்னை விட்டுப் பிரிந்தாய். சென்று மறைந்தாய்.

உன் விழிகளின் அணைப்பில் மிதந்தவளை விரல்களின் அணைப்பில் மூழ்கச் செய்து விட்டாய்! இனி எழுவது கடினம். நான் உன்னில் முழுமையாய் விழுந்து விட்டேன்.

அதே நேரம் அறைக்கதவு தட்டப்படும் சப்தம் கேட்டு கதவைத் திறந்தாள் வெண்ணிலா. ஹோட்டல் பணியாள் ஒருவன் சீருடையில் இருந்தான்.

''என்ன?'' என்றாள்.

''மேடம் இங்கே வெண்ணிலாங்கிறது?''

''நான்தான்..''

''எங்க எம்.டி. இதை உங்களிடம் தரச் சொன்னார்'' என்றான் வெகு பவ்யமாய்.




ஏதும் பேசாமல் வாங்கிக் கொண்டாள். கதவைத் தாளிட்டு விட்டு கடிதத்தைப் பார்த்தாள்.

*அன்புள்ள வெண்ணிலாவிற்கு, நான் உன்னிடம் மனம் விட்டு சில விஷயங்கள் பேச வேண்டியிருப்பதால், நாளை காலையில் ரூம் நெம். 302க்கு வரவும். பயம் வேண்டாம்.*

இப்படிக்கு
**ஆதவன்.**

என்று எழுதியிருந்தது. இவளும் இத்தனை நேரம் ஆதியையே நினைத்துக் கொண்டு இருந்ததைப்போல் அவனும்..! நினைப்பே இனித்தது.



6

**கா**லையில் தோழிகள் அனைவரும் மணமக்களோடு சின்னதாய் ஒரு பிக்னிக் கிளம்பி விட வெண்ணிலா மட்டும் தனித்து நின்று விட்டாள். யாருக்கும் சந்தேகம் வராத வகையில், ஆனால் பிரபுவும் போகாமல் இருந்ததை அவள் அறியவில்லை. மிகவும் எளிதானவொரு ஒப்பனையோடு அவள் அறை எண் 302க்குச் செல்ல, விதி அவளை இருகரம் நீட்டி வரவேற்றது.

இவள் வருகையை எதிர்பார்த்ததுபோல் அறை திறந்தே இருந்தது. உள்ளே நுழைந்தவளின் பார்வையில் இவளின் ஆதவனுக்கு பதில் பிரபு நின்றிருந்தான்.

''பிரபு நீயெப்படி?''

''தயங்காதே நிலா. நானேதான் வா..! இங்கே நாம் இரண்டு பேரைத் தவிர வேறு யாருமில்லை. நான்தான் உன்னை இங்கே வரவழைத்தேன்.''

''நீயா?''

''ஆமாம். நானேதான். யாரோவென்று நினைத்து வந்திருப்பாய். என்னைப் பார்த்ததும் ஷாக்கா? அதுயெப்படி வெண்ணிலா நாய் மாதிரி நான் பின்னாடியே அலைஞ்சிட்டு இருக்கேன். நேத்து வந்தவன் உனக்கு முக்கியமாய் போயிட்டான் இல்லையா? அப்படி என்கிட்டே இல்லாதது அவனுக்கு மட்டும்..!''

''அசிங்கமா பேசாதே பிரபு! இது என் வாழ்க்கை. நீ யார் அதைக் கேட்க?''

''இத்தனை நாள்ல ஒருமுறை கூடவா நீயென்னை காதலோடு பார்க்காம இருந்திருப்பே?''

''பிரபு உன் மனம் எனக்குப் புரியுது. ஆனா காதல் கட்டாயப்படுத்தி வருவதில்லை. இத்தனை நாள் உன் மேல் தோன்றாத உணர்வு ஒரு நொடி சந்திப்பிலேயே அவரிடம் தோன்றி விட்டது.''

''என்னை விட பணக்காரன் என்ற நினைப்பில் விழுந்திருப்பாய். எது எப்படியானாலும், பரவாயில்லை. இன்று ஒரு முறை மட்டும்..'' அவள் கைப் பற்ற வருமுன் பதறி விலகினாள் வெண்ணிலா!

''பத்தினி வேஷம் போடாதே கண்ணு. நீ சம்மதிச்சே தீரணும்'' பேசியபடியே வந்த பிரபு திடீரென கீழே விழுந்தான். அவன் பின்னால் ஆதவன் நின்றிருக்க, பொங்கிய நிம்மதியோடு ஆதவனிடம் ஒண்டிக் கொண்டாள் வெண்ணிலா.

நடுங்கியவளை உரிமையாய் அழுத்தமாய் தன்னுடன் அணைத்தபடியே, ''இடியட்! உனக்கு என்னத் திமிர்



இருக்கும்?'' பற்களைக் கடித்தபடி ஆதவன் பேசினான். ''நேற்றே உனை அடித்திருக்க வேண்டும். ஆனால் உண்மை தெளிவாக வேண்டுமே என்றுதான் காத்திருந்தேன்.''

''என்ன ஆதி சொல்கிறீர்கள்?''

''நான் சொல்றேன். வெண்ணிலா. ஸாருகிட்டே நீயும் நானும் லவ் பண்றேன்னு சொன்னேன். நா எப்போ கூப்பிட்டாலும் நீ வருவேன்னு சொன்னேன். அது உண்மையா? பொய்யான்னு வேவு பார்க்கத்தான் அந்த அறைக்குள் இருந்தார் மிஸ்டர் ஆதவன்.''

''ஆதி இவன் என்ன சொல்றான்?''

''இந்த ராஸ்கல் என்கிட்டே வந்து உனக்கும் அவனுக்கும் தவறான தொடர்பு இருக்கிறதா சொன்னான். நீ எப்போ கூப்பிட்டாலும், வருவேன்னு அதை செய்து காட்டறேன்னும் சவால் விட்டான். திட்டமிட்டபடியே உன்னை கூப்பிட்டும் வந்திட்டான். பாவம் நான் இங்கே மறைந்து நின்று கவனிப்பதை அறியாமல் பேசிட்டான்..''

''அப்படின்னா..?''

''நீ வரும்போது பின் அறை வழியா நானும் வந்திட்டேன். உண்மை என்னவென்று காண்பதற்காய் காத்திருந்தேன். நான் எண்ணியபடி நீயும்..!''

அவன் பேசி முடிக்கும் முன்னரே தன்னை அணைத்திருக்கும் கைகளில் இருந்து விலகினாள் வெண்ணிலா.

''என்ன கண்ணம்மா, மறுபடியும் ஆதவன் அவளை அணைக்க முயல, தன்னை நோக்கி நீண்டு வந்த கைகளைத் தட்டி விட்டாள் வெண்ணிலா.



''வேண்டாம் ஆதி..! யாரோ ஒருத்தன் சொன்னதை நம்பி.. என்னைச் சந்தேகப்பட்டு வேவு பார்க்க ச்சே..! ஒரு நொடி என்றாலும் கூட என்னைத் தவறாக நினைக்க உங்களுக்கு எப்படி மனசு வந்தது'' அவள் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

''இல்லை நிலா. நான் நம்பவே இல்லேம்மா!''

''நம்பாமத்தான் இத்தனை நேரமா இங்கேயே ஒளிஞ்சிட்டு இருந்தீங்களா? ச்சீ... கடைசியிலே நீங்களும் உங்க ஆம்பிளை புத்தியை காமிச்சிட்டீங்க இல்லே..''

''நிலா..''

''பேசாதீங்க! பார்த்த சில நிமிஷத்திலே உங்கக்கிட்டே நெருங்கிப் பழகினதால என்னை எந்த எல்லைக்கும் போவேன்னு நினைச்சிட்டீங்க அப்படித்தானே!'' கோபமாய் பேசிய அவள் உடல் நடுங்கியது.

''இல்லேம்மா... என்னையும் கொஞ்சம் பேச விடு... உன்னைப் பற்றி தப்பா சொன்னவனை உன் முன்னாலேயே நிரூபிக்கணுமின்னுதான் நான் மறைந்து நின்றேன். அதுவே என்னைத் தப்பா நினைக்கும்படி ஆகுமுன்னு நான் கனவிலேயும் நினைக்கலை!''

''என் மனசை முமுசா உடைச்சிட்டீங்க ஆதி! இந்த பிரபுவை விடவும் தரம் தாழ்ந்து போயிட்டீங்க! இனிமேல் என்னைத் தொடர வேண்டாம்..'' கண்ணீரோடு கைகூப்பியபடியே அவள் ஆதவனைத் தாண்டி நடக்க,

இவனோ முழுவதுமாய் இடிந்து போய் நின்றான். எப்படி இவளை நம்ப வைக்க என்ற கேள்வி மலையாய் மனக் கண் முன்பு எழுந்தது.



அன்றைய நிகழ்விற்குப் பிறகு ஓரிரு முறை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றபோதும், அவளிடம் பேச இயலவில்லை. கடைசி வருடப் படிப்பு என்பதால் ஹாஸ்டலை விட்டு, எங்கும் நகர்வதில்லை. படிப்பிலேயே மூழ்கி இருப்பவளைப் போல் அமுங்கினாள். இயல்பிலேயே அவள் யாரிடமும் கலகலப்பாகப் பேசியதில்லை. ஆதலால், யாருக்கும் அது வித்தியாசமாகப் படவில்லை. யாரை ஏமாத்தினாலும் அவள் மனதை மட்டும் மாற்ற இயலவில்லை.

ஆதவனின் பேச்சு, அவன் அணைப்பு முத்தம் என ஒன்று மாத்தி ஒன்று நினைவில் தோன்றி, கண் முன்னே அவன் முகம் கண்ணாமூச்சி ஆடியது. எப்படியோ ஓடி ஓடி ஒளிந்தாலும் கல்லூரிக்கே அவன் வந்து நிற்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

பஸ் நிறுத்தத்தில் காத்திருந்த சமயம் காண்டஸாவை உரசியபடி வந்து நிறுத்தியவன் ''உள்ளே வா உங்கிட்டே பேசணும்'' என்றான்.

''ஸாரி மிஸ்டர்! எனக்கு உங்கக்கிட்டே பேச எதுவுமே இல்லே!''

உதடுகள் மறுத்தாலும், கண்கள் அவளையும் மீறி காட்டிய மகிழ்வை வெண்ணிலாவே உணர்ந்தாள்.

''நிலா இது பப்ளிக் ப்ளேஸ். ப்ளீஸ் வா ஐந்தே நிமிஷம்..'' அவன் கெஞ்சிட மறுக்க முடியாமல் காரினுள் அமர்ந்தாள்.

''சொல்லுங்க என்ன பேசணும்?''

காரை செலுத்தியவனிடம் சலனம் எதுவுமில்லாமல் போகவே, இவளிடம் நீண்ட பெருமூச்சொன்று வெளிப்படுத் தப்பட்டது.

காரை சற்று ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் நிறுத்தியவன் அவள் புறம் திரும்பியவன், ''நிலா நான் சுத்தி வளைச்சுப் பேச விரும்பலை, நேரடியா விஷயத்திற்கே வருகிறேன்..''

''எனக்கு உன்னை ரொம்பவே பிடிச்சிருக்கு. பார்த்தவுடனே ஏதோ ஒன்று என்னை ஈர்த்தது. மயங்கினேன். விளைவு என் வேலையில் கூட என்னால் சரிவர கவனம் செலுத்த முடியவில்லை. எப்பவும் தவிப்பாக இருக்கு. யூ.. நோ.. நிலா இந்த தவிப்பு எனக்கு புதுசு. நான் எதற்காகவும் இப்படி ஏங்கியது கிடையாது. யதார்த்தமா யோசி. முதல் நாளே பார்த்த பெண் உன்னை என் வாழ்க்கைத் துணைவியா ஏற்கத் தயாராயிட்டேன்.

ஆனா திடீர்னு யாரோ ஒரு ஆள் இல்லை. உன் கூட படிக்கிற ஒருவனே வந்து தப்பா சொல்லும்போது உண்மை உணர நினைத்தது தப்பா சொல்லு...''

''இப்போ நான் என்ன சொல்லணும்னு என்று எதிர்பார்க்கிறீங்க.. மிஸ்டர். நடந்த தவறை நான் மறந்திட்டேன்னு உங்க மடியிலே விழச் சொல்றீங்களா? கூடப் படிச்சவன் சொல்லிட்டா தப்பா நினைப்பீங்களா? அன்பு, காதல் சொல்லி புரியறது இல்லை ஆதி... பார்வையிலும், தொடுதலிலும் உணர்ற விஷயம்... என் பார்வையிலேயே அதை உணர முடியாத உங்களோடு எதிர்காலமின்னா நான் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?''

''இதுக்கு முடிவுதான் என்ன?''

''உங்க கண் அசைவிற்கே ஆயிரம் பெண்கள் வந்து விழுவாங்களே! இருந்தும் என்னையேன் தேட வேண்டும்.



ஆசை ஆசையாய் முளைத்த விதை வேரிலேயே கருகிப் போச்சு. இனியும் என் வரையில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இதுவே நம்ம சந்திப்பின் கடைசி துளியா இருக்கட்டும்.. பை..!'' சொல்லிவிட்டு திரும்பிப் பார்க்காமல் நடக்க, ஆதவனோ தலையில் கை வைத்துக் கொண்டான். தன் மேல் தவறில்லாதபோதும் கிடைத்த தண்டனை ரொம்பவே உறுத்தியது. எத்தனை வெற்றிகள் கேடயங்கள் எல்லாம் இந்த சின்ன பெண்ணிடம் அடிபட்டு விட்டதே என்று தவித்தான்.

நிலாவோ தன் மீதிப் படிப்பை முடித்துவிட்டு பாதரின் முன் நின்றாள்.

''நல்ல மதிப்பெண் எடுத்து இருக்கே. உனக்கு நம்ம ஜார்ஜ் வின்செண்ட் கோவிலில் இருந்து வேலைக்கு ஆபர் வந்திருக்கு போறீயாம்மா?''

''பாதர் என்னமோ தெரியலை. என் மனசை கட்டுப் படுத்தவே முடியலை. ஏதேதோ நினைவுகள் மனதைப் போட்டு அலைக்கழிக்குது. இடமாற்றம் இருந்தால் நல்லதாய் இருக்குமின்னு தோணுது. அதனால வேறு ஏதாவது ஊர்லே வேலைக்கு ஏற்பாடு பண்ணுங்க..''

''அம்மாடி மேரி சிஸ்டர் உன்னை என்கிட்டே ஒப்படைத்ததில் இருந்து நீ இத்தனை கவலையா இருந்ததை நான் பார்த்ததே இல்லைம்மா. எந்த கஷ்டமாயிருந்தாலும் மனதைத் தளர விடாதே. கர்த்தர் காப்பாற்றுவார்.''

''மிஸ்டர், சந்திரசேகர் ஊட்டியில் பெரிய ஆள். ரொம்ப நல்லவர். நம்ம ஆசிரமத்திற்கு எத்தனையோ உதவிகளைச் செய்து இருக்கிறார். நான் உன்னை அவரிடம் அனுப்புகிறேன்.. பாதுகாப்பான இடம். பயமில்லை போறியாம்மா?''



''சரி பாதர்'' என்றாள். ''எப்போ கிளம்பணும்?''

''சந்திரசேகரிடம் பேசிவிட்டு நான் உனக்குச் சொல்றேன். கர்த்தர்கிட்டே பிரார்த்தனை செய்யும்மா. உன் மனக் கவலை தீரும்.'' கனிவுடன் கூறியவரை பணிந்தாள் நிலா.

அன்று அத்தனை கோபமாய் பேசிய பிறகும், மீண்டும் ஓரிரு முறை கல்லூரியிலிருந்து வரும் நேரம் காத்திருப்பது ஆதவனின் வழக்கமாய் இருந்தது. மீண்டும் மீண்டும் அவனைக் கண்டால் தன் மனம் தடுமாறுவது உறுதி. இங்கேயிருந்தால் அவனைத் திரும்பவும் பார்க்க வேண்டி வரும் என்பதை உணர்ந்தவள் ஊட்டி செல்வது என்ற முடிவுக்கே வந்தாள்.

பாதர் சொன்னதைப் போலவே, சந்திரசேகரிடம் பேசி ஏற்பாடும் செய்தார்.

அவள் கிளம்பும் வரையில் அவள் பயணம் ரகசியமாகவே வைக்கப்பட்டு இருந்தது. ஊட்டி வந்து இறங்கியபோது இருந்த மனச் சோர்வு பின் வந்த நாட்களில் மறைந்தே போனது. புதிய இடம், புது மனிதர்கள், அவளால் இயல்பாய் நடமாட முடிந்தது.

ஹோட்டலில் சிறந்த நிர்வாகி ஆனாள். வேலைக்குள் தன்னையே அழுத்திக் கொண்டு மன வலிகளை மறைத்துக் கொண்டாள். அடுத்து வந்த இரண்டு மாதங்களில் கணக்குகளில் நடக்கும் குளறுபடிகளைக் கண்டுபிடித்து ஆதாரத்தோடு சந்திரசேகரிடம் கூறினாள்.

சந்திரசேகர் தொழிலில் பழம் தின்று கொட்டை போட்டவர், தற்போது உடல் நலம் சற்று குன்றியதால் தொழிலில் அதிக கவனம் செலுத்த இயலவில்லை. கேசவன் நீண்ட கால



ஊழியர். நம்பி அவரிடம் பொறுப்புகளை ஒப்படைக்க வந்த வினையிது!

''வெல்டண் ராணிம்மா! வந்த கொஞ்ச நாளிலேயே ரொம்ப பெரிய உபகாரம் செய்து இருக்கிறாய். கேசவன் இத்தனை பெரிய துரோகம் செய்வான்னு நான் நினைக்கலை. எனக்கும் வயசாயிடுச்சு. ரொம்பவும் வேலை செய்யக் கூடாதுன்னு மேடத்தோட கண்டிப்பான ஆர்டர்..''

அருகிலிருந்த தாமரையம்மாள் மென்மையாய் சிரித்தார். ''பார்த்தியாம்மா இவர் பேசறதை என்னமோ எனக்கு பயந்துதான் கட்டுப்படறா மாதிரி..''

''அதையேன் கேட்குறே! என்னைக்கு தாலி கட்டினேனோ அன்னைக்கே சரண்டர்தான்'' சந்திரசேகர் புன்னகையுடன் சொல்லிட ராணி சிலிர்த்தாள்.

''உங்க மகன்?''

''அவன் சென்னையில் இருக்கான். எப்போதாவது தோணும்போது வர்றதுண்டு.''

''ஏன் அப்படி?''

''இங்கே வந்தா, என்னை மாதிரியே அவனுக்கும் கல்யாணக் கட்டளை வந்திடுமே..''

ராணி அவர்களின் சம்பாஷணைகளை ரசித்துச் சிரித்தாள். இதுநாள் வரை இந்த மாதிரி விவாதங்களை அவள் கண்டதில்லை. நினைவு தெரிந்த நாளில் இருந்தே தாயும் தந்தையும் நன்முறையில் பேசிப் பார்த்ததே இல்லை.

தள்ளாடியபடியே எப்படி சண்டை இழுக்கலாம் என்ற குரோதத்துடன் வரும் தந்தையிடம் என்ன பேசத் தோன்றும்.

பாவம் இப்படி தோழமையுடன் ஒரு இணை கிடைப்பது எத்தனை பாக்கியம். இம்மாதிரி பெற்றோர்களிடம் இருந்து வாழாமல் தனித்திருக்கும் அந்த மகனின் மேல் பரிதாபமே உண்டாயிற்று, அவளிற்கு.

மற்றவர்களிடம் இருந்து சற்றே விலகி நின்றாலும், அவ் வீட்டு பெரியவர்களிடத்தில் ஓர் ஈர்ப்பு உண்டாகத்தான் செய்தது.

அதிலும் சந்திரசேகரின் கண்களின் பளபளப்பு எதையோ உணர்த்தியது. அன்பிற்காய் ஏங்கித் தவித்த உள்ளம். இடையில் மனதை முறித்துப் போட்ட தோல்வி என கலங்கிய மனதிற்கு, இந்த முதியவர்களின் அன்பு தேவாம்மிர்தமாய் இனித்தது.

அண்டி வாழ்வதற்கு ஒரு நிழல் கிடைத்து விட்டது என்ற மனமகிழ்வில் இருந்தவளுக்கு ஆதவனின் வரவு அதிர்வைத் தான் உண்டாக்கியது. இவளைச் சீண்டிக் கொண்டே இருக்கும் அவனிடம் இருந்து தப்புவதும் முடியுமா?

பேசாமல் இந்த வேலையை விட்டுப் போய்விட்டால், ஆனால் அதுவும் சாத்தியமில்லை. படித்த படிப்பிற்கு வேலை கிடைக்கும். ஆனால், இங்கு வந்து சேர்ந்த முதல் மாதத்தில் இவள் சம்பளத்தை கண்டபோது கணிசமாய் அதிகம்தான்.

ஒண்டிக் கட்டை அவள் செலவிற்குப் போக, மிஞ்சிய பணத்தில் பாதரிடம் கேட்க, இரண்டு மாணவர்களைப் படிக்க வைத்து வந்தாள். ஆதவனுக்குப் பயந்து வேலை வேண்டா மென்றால் அவர்களின் கதி மோசமாகுமே! தவிரவும் இவ்வீட்டு பெரியவர்களிடம், பாதரிடம் என்னவென்று சொல்லுவாள். குழம்பிய நிலையிலும் ஆதவனின் வரவில் மனம் துள்ளிக் குதித்ததென்னவோ உண்மைதான். என்னதான்



ஆதவனின் முன்பு வெறுப்பைக் கொட்டினாலும், அவள் மனம் முழுவதிலும் வீற்றிருக்கும் ராஜன் அல்லவா!

அவனின் அன்பை ஏற்கவும் முடியாமல், விலக்கவும் முடியாமல் தவிக்கின்றாளே. இது என்று தீருமோ?

அவள் கைப்பேசி ஒலித்தது. சிந்தனையை ஒதுக்கி வைத்தவள், ''ஹலோ..''

''நான் பாதர் பேசுகிறேன் ராணிம்மா..''

''குட் ஈவனிங் பாதர்..''

''நாளைக்கு நம்ம அர்ஜுனுக்கு செகண்ட் இயர். பீஸ் கட்டணும் மறந்திட்டியா?''

இவளுக்குத் திக்கென்றது. உண்மையில் மறந்துதான் போயிருந்தாள். எப்போதும் ஒருநாள் முன்பாகவே அனுப்பும் அவள் இப்போது மறந்தே போக பாதர் கேட்கும்படி வைத்துக் கொண்டோமே என்ற திகைப்பில், ''ஸாரி பாதர் கொஞ்சம் வேலை அதிகம். அதனால் மறந்து விட்டேன்'' என்றாள்.

''பரவாயில்லேம்மா. சும்மா நினைவுபடுத்தினேன். வேலை ரொம்பவும் கடினமாம்மா... உடம்பைப் பார்த்துக் கொள். அந்த வீட்டுப் பெரியவர்கள் கூடப் பேசினார்கள். உன் மேல் அத்தனை அன்பு. நல்ல இடத்தில் உன்னை சேர்த்த நிம்மதியம்மா எனக்கு!''

''எல்லாம் உங்க ஆசீர்வாதம் பாதர். அர்ஜுனை கொஞ்சம் நேரில் வந்து கலெக்ட் பண்ணிக்கச் சொல்லுங்க, பாதர் எனக்கு கொஞ்சம் ஹெவி வொர்க் இருக்கு..''

''சரிம்மா... ராணி நாளைக்கு உங்க அம்மாவுடைய நினைவு நாள்..''



''தெரியும் பாதர். அர்ஜுனிடம் பணம் தர்றேன். குழந்தைகளுக்கு இனிப்பு வாங்கி தந்திடுங்க. நன்றி'' செலுத்திவிட்டு போனை வைத்துவிட, அம்மாவின் நினைவு நாளையும் அவள் மறந்துதான் போய் இருந்தாள்.

இதென்ன ஆதவனின் அரை நாள் சந்திப்பே இப்படி எல்லாத்தையும் மறக்கடித்து விட்டதே. இதே நிலை நீடித்தால் மன அமைதி சாத்தியம்தானா? என்று யோசித்தாள். கண் முன்னால் ஆதவனின் உருவம் தோன்றி, என்னை விட்டு எங்கும் போக முடியாது என்று குறும்பாய் சிரிக்க இவள் அயர்ந்தே போனாள்.



## 7

**ஆ**தவன் மனம் முழுக்க பரவிய நிம்மதியோடு தோட்டத்தில் நடைபயின்று கொண்டிருந்தான். மாலை மங்கிய நேரம். இருளிலும் இனிமை, தனிமை, கொடுமை என்பார்கள். ஆனால், காதலில் விழுந்தவர்கள் பெரும்பாலும் தனிமையிலேயே கழிப்பார் கள். தனக்கென்று மட்டுமே உலகம் சுழல்வதைப் போல் தோன்றும்.

உலக முழுமைக்கும் குறுகுறுப்பாய் காண்பதாய் உணர்வும், இறக்கை கட்டி பறக்கும் மனம், உடல் ஒருபுறமும் உயிர் ஒருபுறமும் வாழும் உன்னதமான நிலையிது!

***''இரு கண்களின் இடைவெளியில்***
***இமைகளுக்குப் பதில்***
***என்னவளின் இதழ்களைப்***
***படைக்கலாமே இறைவா..!''***



என்று இறைவனுக்கே கட்டளையிடும் மயக்கநிலை. அப்படியொரு மயக்க நிலையில்தான் ஆதவனும் அப்போதிருந்தான். பாதையெங்கும் மஞ்சள் நிறப் பூக்கள் சிதறி படுக்கையாய் விரிந்திருக்க, கண்களை கொள்ளை கொள்ளும் வண்ணம் ரம்மியமாய் இருந்தது அந்த இடம்.

இடையில் ஏதோ பேச்சுக்குரல் அவன் ரம்மியத்தைக் கலைத்தது.

''லாவண்யாவின் அழுகையைக் காணத் தவிப்பாய் இருந்தது வருணிற்கு!''

''என்ன லாவண்? ஏன் இப்படி அழுவுறே? நீ அழுதா உன்னோட கிளாமர் கொஞ்சம் கம்மியாகுதும்மா... உன் கண்ணில் நீர் வழிந்தால்.. என் கண்ணில்..!'' அவன் பாடத் துவங்கும் போதே பட்டென்று வாயில் அடித்தாள்.

''ராஸ்க்கல் உனக்குப் பாட்டு வேறயா? என்னைப் பெண்பார்க்க வர்றாங்கன்னு சீரியஸா பேசிக்கிட்டு இருக்கேன். நீங்க காமெடியா பண்றீங்க?''

''ஏய்? இப்போ யென்ன கல்யாணமா ஆயிடுச்சு. அதனாலதான் இந்தப் பாட்டு பாடினேன். இல்லேன்னா, அவள் பறந்து போனாளேன்னு! பாடியிருப்பேன்.''

''டைமிங் ஸாங்கா... நா போறேன் போ!''

''எங்கே?''

''பொண்ணு பார்க்க வர்றவனையே கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.''

''என் மேல என்னம்மா திடீர் கரிசனம்?''

''யூ..!'' கோபமாய் எழ முயன்றவளை தன் மேல் சாய்த்துக் கொண்டான் வருண். ''என்ன டார்லிங் இது? நான் ஒருத்தன் இருக்கும் போது நீயேன் கவலைப்படறே? உன்னைத் தூக்கிட்டுப் போக முடியாட்டியும், அட்லீஸ்ட் ஆட்டோ விலாவது கூட்டிட்டுப் போக மாட்டேனாயென்ன?''

அவன் கேட்ட பாவனையில் களுக்கென்று சிரித்துவிட்டாள் லாவண்யா.

''இப்போ எத்தனை இதமாயிருக்கு. சொல்லு லாவண்.. நான் உங்கப்பாகிட்டே வந்து பேசட்டுமா?''

அவசரமாய் தலையாட்டி மறுத்தாள்.

''எனக்கு பயமாயிருக்கு வருண். அப்பாவுக்கு காதல்னாலே பிடிக்காது.''

''நாட்டுலே எந்த அப்பனுக்குத்தான் இதெல்லாம் புடிக்குது. பேசாம ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாமா?''

''நடக்கிற விஷயமா பேசுங்க!''

''ஏன் நடக்காது? என்னை நம்பி வரமாட்டியா?''

''பிரச்சனை உங்க மேல நம்பிக்கை இருக்கா, இல்லை யாங்கிறது இல்லை! பெரியவங்க வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்டு நம்ம வாழ்க்கையைத் துவங்க வேண்டாம்..''

''வர வர கிழவியாயிட்டே லாவண். உன்னைச் சொல்லித் தப்பில்லே. உனக்கு டிரைனிங் கொடுக்கிற ஆள் அப்படி?''

''மேடமை குறை சொல்லலைன்னா உனக்குத் தூக்கம் வராதே?''

''பாஸிட்டிவ் திங்க் முக்கியம் டார்லிங். நல்ல படிப்பு வேலைன்னு எல்லாமே நம்மிடம் இருக்கு. முயற்சி பண்ணாமலே ஏன் முடியலைன்னு சொல்லணும்.''



''வெரிகுட் வருண். நீங்க சொல்றதுதான் கரெக்ட்.'' புதிய குரலுக்கு சொந்தமானவன் தன் முதலாளி என்ற நினைப்பில் இருவரும் அதிர்ந்து போயினர்.

''ஸார்.. அது வந்து..''

''பதட்டப்பட வேண்டாம். நான் உலாவ வந்த இடத்தில் எதேச்சையாக உங்க பேச்சு காதில் விழுந்தது.''

''ஸார் நாங்க இரண்டு பேரும் மூணு வருஷமா லவ் பண்றோம். நானும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவங்க அப்பாகிட்டே பேசலாம்னு சொன்னா, இப்போ வேணாம், வேணாம்னு சொல்றா ஸார்.''

''ஏன்? லாவண்யா?''

''அப்பாவுக்கு உடம்பு சுகமில்லை ஸார்... இவர் ஏதாவது பேசப் போய்..!''

''இப்படியே பயந்துக்கிட்டே இருந்தா நீங்க இரண்டு பேரும் அறுபதாம் கல்யாணம் தான் செய்துக்கணும். நீங்க உங்கக் காதலில் உறுதியா இருந்தால் நானே உங்க வீட்டிலே வந்து பேசி சம்மதம் வாங்குறேன்.''

''நன்றி ஸார்..''

''ஆல் தி பெஸ்ட்..''

''இதுதான் ஆண்களோட சுபாவம் கேட்டவுடனே முடிவைச் சொல்லிட்டோம் பார்த்தியா. நீயும் உங்க மேடமும் போட்டு இமுப்பீங்களே?''

''மேடம் ரொம்ப நல்லவங்க வருண்..''

''யாரைப் பற்றி பேசறீங்க?'' - ஆதவன்.



''எல்லாம் நம்ம ராணி மேடமைப் பற்றித்தான் ஸார். அவங்களுக்கும் சின்ன வயசுதானே. எப்பவும் முகத்தை உர்ர்னு வைச்சிருப்பாங்க. அவங்க சிரிச்சு நான் பார்த்ததே யில்லை.'' வருண் குறைப்பட்டுக் கொள்ள லாவண்யா அவன் காதை செல்லமாய்த் திருகினாள்.

வலியோடு காதைத் தேய்த்தபடியே சிரித்தான் வருண்.

''என்னாச்சு வருண்?'' ஆதவன் கேட்க.

''இல்லே சார்... அறுபதாம் கல்யாணத்தின் போது இவள் எப்படியிருப்பாள் என்று நினைத்தேன். முன்னாடி நாலு பல் விழுந்து பாதிமுடி நரைத்து இருந்தாலும், கிழவியான பிறகும் கிளாமர் குறையவில்லை'' அவன் கூறி முடிக்கவும் சூழ்நிலையை மறந்து லாவண்யா விரட்ட வருண் ஓட, அதை ரசித்துப் பார்த்தான் ஆதவன்.

பிரச்சனை தீர்ந்தவுடன் எத்தனை சந்தோஷம். இது நிலைக்க வேண்டுமெனில் இவர்களின் திருமணம் விரைவில் நடக்க வேண்டும். இவர்களைப் போல் அப்பாவிடம் அனுமதி வேண்டுமே என்று பயந்து யோசிக்க வேண்டியதே இல்லை அவன்.

இந்தப் பெண்ணை விரும்புகிறேன் என்று யாரைக் கூட்டி வந்தாலும் சரியென்று ஒப்புக் கொள்பவர். அத்தோடு அவனின் திருமணத்தை ஆவலோடு எதிர்பார்ப்பவரும் கூட. ஆனால் இவன் விஷயத்தில் நிலா முறைத்துக் கொண்டு நிற்கிறாளே, என்ன செய்யப் போகிறேனோ... யோசனையோடு வீடு நோக்கி நடந்தான் அவன்.

இருளெல்லாம் இருளாகவே இருந்து விடுவதில்லை. வெளிச்சத் துளிகளை தூவி இருளென்னும் வெற்றுப்



பள்ளத்தை நிரப்பினான் சூரியன். காலை நேர நடைப் பயிற்சியை முடித்து விட்டு, லானில் அமர்ந்து பத்திரிகையை புரட்டிக் கொண்டு இருந்தான் ஆதவன்.

வெள்ளையும், கருப்புமாய் பூக்கள் பூத்திருந்த சேலையில் நீளமான ஈரக் கூந்தலை முதுகில் படரவிட்டு கையில் ஒரு தட்டோடு நடந்து வந்தாள் ராணி. அமர்ந்திருந்த இவன் புறம் பார்வையைத் திருப்பாமல் வேறு பக்கம் பார்த்தபடியே உள்ளே நுழைந்தாள்.

ஆதவனுக்கு ஒரு கணம் சிரிப்பு பீறிட்டது. கேட்டருகே வரும் வரையில் அவனைப் பார்த்தபடியே வந்தாள். அருகே வந்தவுடன் பார்வையைத் திருப்புவதைக் காண வேடிக்கை யாகவும் இருந்தது. எதற்காக வந்திருக்கிறாள் என்பதை அறிவதற்காக அவனும் உள்ளே சென்றான்.

அவள் ''அம்மா'' என்ற குரலோடு உள்ளே நுழையவும், பார்வதி அம்மாள் பூஜை அறையில் இருந்து வெளியே வந்தவர் சிறு முறுவலோடு, ''வாம்மா உட்கார்'' என்றார் வாஞ்சையுடன்.

''அம்மா இன்னைக்கு எங்கம்மாவுடைய நினைவு நாள். வருஷா வருஷம் யாராவது ஒருத்தருக்கு அம்மா நினைவாக புடவை எடுத்து தர்றது வழக்கம். இந்த முறை உங்களுக்குத் தரணுமின்னு தோணிச்சு. ஏத்துப்பீங்களாம்மா?''

''ராணி அன்பு கொடுக்கிற பொருளில் இல்லை. தர்றவங்க மனசிலிருக்கு. உன் தாய்க்கு இணையா என்னை நினைச்சுத் தர்றியே அதுக்கு நல்ல மனசு வேணும்மா!''

தட்டில் கொண்டு வந்த புடவை, ரவிக்கை, வளையல், பூச்சரம், குங்குமம் முதலியவற்றை அவரிடம் நீட்டினாள்.

வாங்கியவரின் காலில் விழுந்து வணங்கினாள். குங்குமத்தை சிறு தீற்றலாய் நெற்றியில் வைத்தவர். தன் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் அணிவிக்க இவளோ பதறினாள்.

''அம்மா இதெல்லாம்?''

''ஷ்.. பேசக் கூடாது... நீயென்னைத் தாயா நினைச்சே.. நான் உன்னை மகளா பார்க்கிறேன்..''

''ராணி உண்மையைச் சொல்லணுமின்னா உனக்கும் எனக்கும் ஏதோவொரு பந்தம் இருக்குன்னு என் மனசு சொல்லுது.''

''என்ன தாமரை உன் மனசு சொல்லுது'' கேள்வியோடு வந்தார் சந்திரசேகர்.

''ராணியோட அம்மாவிற்கு நினைவு நாளாம். எனக்கு புடவையெல்லாம் தந்தா..''

''ஏம்மா உனக்கு ஏன் இந்த ஓரவஞ்சனை. அம்மாவிற்கு மட்டும்தானே, வேஷ்டி சட்டை எனக்கு இல்லையா?'' அவர் கேட்க,

அம்முதியவர்களின் அன்பில் இவள் கரைந்தாள்.

''ராணி ஏதாவது சாப்பிடறியா? தேங்காய் பாலும், ஆப்பமும் பண்ணியிருக்கேன்.''

''இல்லேம்மா இன்னைக்கு காலையில விரதம். இன்னொரு வேண்டுகோள், இன்று நீங்க என் கையால சாப்பிடணும்...''

''கண்டிப்பாக நாங்க வர்றோம்..''

பெரியவர்களிடம் விடைபெற்றுக் கிளம்பிட, வழிமறித் தான் ஆதவன்.



''எனக்கு அழைப்பில்லையா மேடம்..''

''எதற்கு?''

''இந்தக் கரங்கள் பரிமாறி நான் உண்பதற்கு?''

''நீங்க பெரிய ஹோட்டலின் அதிபதி. நினைச்சா எத்தனையோ விருந்துகளில் கலந்துக்கலாம். இதெல்லாம் சாதாரணம்..''

''அதை நானில்லே சொல்லணும்..''

''வந்து..!''

''உன் விருந்துபசாரமே சரியில்லையே? குடும்பத்தில் உள்ள எல்லாரையும் அழைப்பதுதானே முறை?''

''ப்ளீஸ்... இன்னைக்கு எனக்கு..!''

''வேண்டாம் வம்பு பண்ணாதீங்க...! ஸார்..!''

''ஏம்மா, விருந்துக்கு கூப்பிடலைங்கிறது வம்பு செய்வதாகுமா?''

மேற்கொண்டு அவனிடம் வாக்குவாதம் செய்ய மனமின்றி அவள் வெடுவெடுவென நடந்தாள்.

''வா லாவண்யா..! என்னடா இன்னமும் காணலேயேன்னு பார்த்தேன்.''

''ஹோட்டலில் கொஞ்சம் வேலை மேடம், இப்போதான் வருண் வந்தார். நான் வந்திட்டேன்..''

''வருணையும் அழைத்தேனே..''

''நீங்களும் இல்லை, சின்னவருக்கும் ஏதோ வேலையாம்..! அதனால வருணால வரமுடியலை, முடிந்தால் என்னை உணவு கொண்டுவரச் சொன்னார்.''



''சின்னவர் எங்கே போகிறாராம்?''

''ஏதோ முக்கியமான இடம் என்றாராம்.'' அதற்கு மேல் பேசாமல் டேபிளில் உணவை எடுத்து வைக்கும் வேலையைக் கவனித்தாள் லாவண்யா.

அவனையும் அழைத்திருக்கலாமோ என்று எண்ணிய மனதை உடனே அடக்கினாள். நல்லவேளையாக வாசலில் அரவம் கேட்டிட திரும்பியவள் தாயுடன் வந்தவனைக் கண்டதும் திகைத்துப் பின் வரவேற்றாள்.

''வாங்கம்மா.. வாங்க ஸார்.''

''எதை வாங்கணும்?''

''சும்மாயிருடா'' தாயின் செல்லமான அதட்டலை தலைசரித்து புன்னகையோடு ஏற்ற அவன் மனதைக் கொள்ளையடித்தான்.

''சாப்பிட வாங்கம்மா..''

டைனிங் டேபிளில் லாவண்யா இருந்தாள். முதலாளியைக் கண்டதும் சிறு வியப்பு. ரொம்பவும் முக்கியமாய் வெளியே போக வேண்டுமென்று வேலையை ஒதுக்கியவர், இங்கே வந்திருக்கிறாரே என்று!

அதை உணர்ந்தவனாய், ''என்ன லாவண்யா மேடம் உன்னை சிலையாகப் போ என்று சபித்து விட்டார்களா என்ன?''

''வெல்கம் ஸார் ப்ளீஸ்...'' உட்கார இருக்கை காட்டி, இரண்டு பெண்களும் பரிமாறினார்கள். சாம்பார், சாதம், ரசம் இரண்டு வகைப் பொரியல், அப்பளம், பாயசம் என சுவை அற்புதமாய் இருந்தது.



''இதையெல்லாம் நீயே செய்தியா ராணிம்மா. உனக்கு நல்ல கைப்பக்குவம்'' தாமரையம்மாள் பாராட்டினார்.

''கரெக்ட்மா! பேசாம நம்ம வீட்டுக்கு இனிமே இவங் களையே சமைக்க வைச்சிடலாம்!''

''போடா போக்கிரி!''

''ஏன் மேடம் எங்களுக்காக சமைச்சு தர மாட்டீங்களா என்ன?''

புன்னகையை தவிர்த்து வேறு எதுவும் பேசிடவில்லை ராணி. ''அம்மாவுடைய படத்திற்கு உங்க கையால விளக்கு ஏத்திடுங்கம்மா..''

''சரிம்மா எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு. நான் கிளம்பறேன். உங்க சாப்பாட்டுக்கு நன்றி மேடம். அவன் கிளம்பும் சமயம் லாவண்யாவின் புறம் திரும்பி லாவண்யா உங்களுக்கு ஏதும் வேலை இருக்கா?''

''இல்லே சார்..''

''அப்போ கிளம்புங்க நானும் ஓட்டலுக்குத்தான் போறேன். வாங்க டிராப் பண்ணிடறேன்.'' என்றான்.

ராணியின் முகம் இலேசாய் கருத்ததைப் போல் இருந்தது. லாவண்யா இருவரின் புறமும் விடைபெற்று நகர்ந்தாள்.

''வா.. ராணிம்மா'' தாமரையம்மாளின் குரலில் திரும்பி யவள், பூஜையறை நோக்கி நடந்தாள். ஓவியமாய் வரையப்பட்ட புகைப்படம் அதனை உற்று நோக்கிய பெரியவரின் கண்கள் அதிர்விலும் மகிழ்விலும் விரிந்தன.

''ராணி இவங்க?''

''எங்கம்மா!''

''பேரு... நந்தினிதானே!''

''அம்மாவை உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியுமாவா? அவங்க வாழ்ந்த வாழ்க்கையும் நல்லாத் தெரியும்..''

''என்னம்மா சொல்றீங்க? எனக்கொண்ணும் புரியலையே?''

''இப்போ எதையும் விளக்கமா என்னால சொல்ல முடியாது. என் மனசு நீ கொடுத்த பாயசத்தை விடவும் இனிப்பா இருக்கு. நீ பூஜையை முடிச்சிட்டு வீட்டுக்கு வா உங்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.''

''அம்மா!''

''நீ வாயேன். நான் சொல்றேன்...'' பெரியவளின் சந்தோஷமும், பூரிப்பும் உண்டான காரணம் இவளுக்குப் புரியவில்லை. தாயின் படத்தை ஒருமுறை உற்றுநேக்கினாள்.

என்னவாக இருக்கும் என்று தனக்குத்தானே கேள்வியும் எழுப்பிக் கொண்டாள்.

## 8

''என்னங்க உங்களுக்கு ஒரு சந்தோஷமான விஷயம்..'' ஓட்டமும் நடையுமாய் வந்த மனைவியைப் பார்த்த சந்திரசேகர்,

''எதுவாய் இருந்தாலும் கொஞ்சம் மூச்சு வாங்கிட்டுப் பேசும்மா... இப்படி ஓடி வந்தா உடம்பிற்கு என்னாவது?''



''இனிமே எனக்கு எதுவுமே ஆகாது? ஏன்னா என் கவலையெல்லாம் தீர்ந்து போச்சு..''

அதே நேரம் உள்ளே நுழைந்த ஆதவன் அம்மாவின் முகத்தில் பூத்த மலர்ச்சியைக் கண்டவன், ''என்னம்மா ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க?'' என்றான்.

''நல்ல வேளைடா தம்பி, நீயும் வந்திட்டே, உங்க இரண்டு பேர்கிட்டேயும் முக்கியமான விஷயம் பேசணும். எங்க அண்ணன் உங்க நண்பர் சீனிவாசன் தன்னோட கடைசி காலத்திலே நம்மகிட்டே கேட்ட சத்தியத்தை எங்கே காப்பாற்ற முடியாம போயிடுமோன்னு பயந்தோம்! அதுக்கு ஒரு நல்ல வழி பிறந்திருக்கு!''

''என்ன சொல்றே? அப்படின்னா.. நந்தினியும் அவ மகளும் கிடைச்சிட்டாங்களா?''

''கிட்டத்தட்ட ஆனா அண்ணி இப்போ உயிரோட இல்லே, அந்த பொண்ணு வேற யாரும் இல்லை நம்ம ராணிதான்..''

''அப்படியா? இப்போது சந்திரசேகரனின் முகத்திலும் மகிழ்ச்சிப் பூக்கள். ஆனால் ஆதவனுக்குத்தான் ஒன்றுமே புரியவில்லை. என்னம்மா அண்ணன் என்கிறீர்கள்? அவர் மகள் ராணி என்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?''

''கொஞ்சம் நேரம் பொறுடா, கண்ணா. ராணியையும் வரச் சொல்லி இருக்கேன். வந்ததும் இரண்டு பேரிடமும் விவரம் சொல்றேன்.''

''முக்கியமா இதை தெரிந்து கொள்ள வேண்டியவர்களே நீங்க இரண்டு பேரும்தானே?''

அப்போது ராணியும் சிறு தயக்கத்தோடு உள்ளே நுழைந்தாள். வெகு ஜாக்கிரதையாய் ஆதவனின் பக்கம் பார்வையைத் திருப்பாமல்.



''வா, ராணி உன்னைத்தான் எதிர்பார்த்திட்டு இருக்கேன், உட்காரும்மா..''

''பரவாயில்லை!''

''அட.. நீ ஒண்ணும் சாதாரண ஆள் இல்லையே, என் மருமகளா வேற ஆயிட்டே! தாமரையம்மாளின் அந்தப் பேச்சில் திடுக்கிட்டுப் போய் ஆதவனிடம் பார்வையைத் திருப்பிட, அவனும் இவளைப் போலவே முழித்தான்.

''என்னம்மா ஆச்சரியமா இருக்கா? அது ஒரு பெரிய கதை. என் சொந்த அண்ணன் பேரு சீனிவாசன். அவரும் இவரும் நெருங்கிய நண்பர்கள். ஒண்ணா தொழில் துவங்கிய நேரம் எங்க இரண்டு பேர்க்குள்ளேயும் அன்பு துளிர்விட்டுப் போச்சு. எங்க கல்யாணத்திற்குப் பிறகு நாங்க இவருடைய சொந்த ஊரில் சில நாட்கள் தங்கினோம். அண்ணனும் ஏதோ ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதாகவும், ஊருக்கு அழைத்து வருவதாகவும் கடிதம் போட்டு இருந்தார். அப்போ ஆதவன் வயித்திலே மூணுமாசம்.

அண்ணி ரொம்ப அழகு, பரமசாது, குணமும் பொடம் போட்ட தங்கம், கல்யாணமாகி வந்து ஒரு வாரத்திலே புறப்பட்டுப் போனாங்க. சந்தோஷமாத்தான் இருந்தாங்க. ஒரு பொண்ணும் பிறந்தது.

கணவன் மனைவிக்குள்ளே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமா ரெண்டு பேரும் பிரிஞ்சிட்டாங்கன்னு கேள்விப் பட்டு எவ்வளவோ பேசினோம். அண்ணன் அவ மேலே சேற்றைப் பூசினார். ஆனா அண்ணி எந்தக் குறையும் பேசலை. அவரோட வாழ எனக்குப் பிடிக்கலைன்னு சொல்லி விலகிட்டாங்க.



அண்ணனுக்கு எதிலுமே அவசரந்தான். அண்ணியோட நல்ல மனசை புரிந்துக் கொள்ளலை. இவருக்கும் ஊட்டியிலே பிஸினஸ் துவங்கினதாலே நாங்க இங்கே வந்துட்டோம்..

அண்ணனும் எங்க கூடவே வந்திட்டார். சரி ஏதோ கோபத்திலே இப்படி நடந்துக்கிறாங்கன்னும் போகப் போகச் சரியாயிருமின்னும் நினைச்சேன்.

ஆனா கடலில் போட்ட கல்லா அமுங்கிப் போச்சு. அண்ணன் இங்கேயே சுமித்ரான்னு ஒருத்தியைக் கல்யாணம் செய்துகிட்டார். அந்த சுமித்ரா சரியான பணப் பேய். அந்த அடங்காப்பிடாரிட்ட அண்ணன் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

குத்து விளக்கான அண்ணியை விட்டுட்டு எதையோ.. அதனால நாங்களும் போக்குவரத்தைக் குறைச்சிட்டோம். இப்போ ஒரு இரண்டு மூணு வருஷத்திற்கு முந்தி ஒருநாள் வீட்டுக்கு ஒரு ஆள் வந்து, உங்கண்ணன் மரணப்படுக்கையில் இருக்காருன்னு சொன்னாங்க.

''மனசு கேட்கலை, நாங்க பார்க்கப் போனோம். அப்பவும் வாங்கன்னு ஒரு வார்த்தை கூப்பிடலை. அந்த மகராணி. அண்ணனை கட்டிலில் படுத்த படுக்கையாய்ப் பார்த்த அந்த நிலைமையிலே எனக்குத் தாங்கலை. மனசு ரொம்பவும் வலிச்சது. அண்ணன் இவர் கையைப் பிடிச்சிக்கிட்டு அழுதார்.

நான் அவளுக்கு செய்த தவறுக்கு நல்லா அனுபவிச் சிட்டேன். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரங்கிற மாதிரி இத்தனை வருஷம் கழிச்சு செய்த தவறுக்கு பிராயச்சித்தம் தேடுறேன்..''

''என்னண்ணா இது? பெரிய வார்த்தை எல்லாம் பேசிக்கிட்டு..?''

"இல்லே தாமரை, எனக்கு மன்னிப்பு கேட்குற தகுதிகூட இல்லேம்மா!"

"டேய் போன வரையில் போகட்டும். இப்போ டாக்டர் என்ன சொல்றார்?"

"எனக்கே என் உடல்நிலையைப் பற்றித் தெரியும்டா சேகரா! நான் பிழைக்கணும் என்பது துர்பலம். ஆனா கடைசி கடைசியா எனக்கு ஒரு ஆசை நீ நிறைவேத்துவியா?"

"அப்படியெல்லாம் பேசாதாடே? உனக்கு என்ன செய்யணும் சொல்லு.."

"நந்தினி..! நந்தினியைத் தேடிக் கண்டுபிடிச்சு அந்த தேவதையை புறக்கணிச்சப் பாவத்திற்கு நல்லா அனுபவிச் சிட்டேன்னு சொல்லி என்னை மன்னிக்க சொல்லுடா சேகரா? என் மகளை நீ உன்னோட மருமகளா ஏத்துக்கோ, செய்வியா?" அவர் நா தழுதழுக்கக் கேட்க,

"என்ன சீனு? இது என்ன யாசகம் கேட்கிற விஷயமா கட்டளை போடுடா நான் உடன் படுறேன். இது நம் நட்பின் மேல் சத்தியம். நான் நிச்சயம் நந்தினியைக் கண்டுபிடிப் பேன்.."

"பவுடர் பூச்சுடன் கவலை அப்பிய முகமுமாய் வந்த சுமித்ராவிடம் என்ன சொல்றார் சுமித்ரா டாக்டர்?"

"என்னத்த சொல்றது அண்ணி. இவர் ரொம்பவும் படுத்தறார். எரிச்சல்தான் வருது. இப்படி கஷ்டப்படுத்தற துக்குப் பேசாம போயிடலாம். எத்தனை பணம் செலவாகுது தெரியுமா?" ஈவு இரக்கமின்றி அவள் பேசியதைக் கேட்டத் தாமரைக்கு எரிச்சலாய் வந்தது.



"பேசிப் பேசிதான் இப்படி எங்கண்ணனைப் படுக்க வைச்சிட்டா எவ்வளவு நல்ல மனுஷன் இவ வலையிலே விழுந்து இப்போ படுத்த படுக்கையாய், நல்லாயிருந்தப்போ நகையும் பணமுமா போட்டு மினுக்கிக்கிட்டு இப்போ மனசார போயிட்டாத் தேவலைன்னு சொல்ல எப்படித்தான் இவளுக்கு மனசு வருதோ" என்று கணவரிடம் கண்ணீர் மல்கக் கூறினார் தாமரையம்மாள்.

தன் மனதில் இருந்த பெரும் பாரம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்று எண்ணினாரோ என்னவோ அடுத்த மூன்று நாட்களில் அந்த நரகத்தில் இருந்து விடுதலை அடைந்துவிட்டார். ஒப்புக்குக் கூட தாயும் மகளும் அழவில்லை. அத்தனைப் படுத்தி விட்டார் என்று வாய் கிழிய சொல்லிக் கொண்டு இருந்தனர். தாய் தான் இப்படி என்றால் மகள் ஒருபடி மேலேயே போய், "அப்பப்பா! இழவு நடந்த இடம். சொந்த தந்தை உயிர் கொடுத்தவர் என்றெல்லாம் எண்ணாமலே காரியம் ஆன கையோடு அடுத்த 5வது நாளே பெண் நல்ல மேக்கப்புடன் கிளம்பி விட்டது." ஆற்றாமையால் தாமரை வாய் திறந்து கேட்டே விட்டாள்.

'என்ன சுமித்திரா இது? உன் பொண்ணு செய்யறது உனக்கே நல்லா இருக்கா? சொந்த தகப்பன் அவர் இறந்து முழுசா நாலு நாள் கூட ஆகலை. அதுக்குள்ளே இது கொஞ்சம் கூட நல்லாயில்லே. பிறத்தியார் என்ன நினைப்பாங்க?"

"என்ன அண்ணி செய்ய இளரத்தம் நம்ம சொல்றது எல்லாம் அதுங்களுக்கு எங்கே புரியுது."

"இருந்தாலும்.."

"ஆன்ட்டி அப்பா போனது போயிட்டார்.ஏதும் செய்யாம சும்மா உட்கார்ந்து இருந்தா வந்திடவா போறார். நானும்



மூலையிலே உட்கார்ந்து அழுதுகிட்டு இருந்தா சரியா போயிடுமா. சொல்லுங்க. அடுத்த வேலையை பார்க்க வேண்டாமா... நான் இப்படி ஆக்டிவா சந்தோஷமா இருப்பதைத்தான் அப்பாவும் விரும்புவார்."

"இப்போயென்ன நீங்களும் அம்மாவும் இருந்து செய்ய வேண்டியதை சிறப்பா செய்திடுங்க. பை மம்மி... இவள் தன் செயலுக்கு நியாயமும் கற்பித்து விலகி நடந்திட தாமரை விக்கித்துப் போனாள். அத்தோடு கொஞ்ச நஞ்சம் இருந்த உறவும் அத்துப்போனது.

"ஆனா அதுக்குப் பறகு அம்மாவும் பொண்ணும் அவங்க இஷ்டத்திற்கு ஆடறாங்க. ஆனா இத்தனை நாளா அண்ணியும் அவங்க மகளையும் கண்டுபிடிக்க நாங்க எடுத்தமுயற்சிகள் பலனில்லாமல் இருந்தது. இப்போ அது பலிச்சிட்டது. ஆனா துரதிர்ஷடவசமா அண்ணி இப்போ உயிரோட இல்லை. நல்லவேளை அவங்க மகதான் எங்க கண்ணு முன்னாடி இருக்கா.."

"அம்மா..!"

"ஆமா ராணி நீதான் என் அண்ணன்மகள். உன்னை முதல்ல பார்க்கும் போதே, எங்க இரண்டு பேருக்குமே அதிக ஒட்டு இருந்தது.. அதுக்குக் காரணம் எனக்கு அப்போ புரியலை. ஆனா அண்ணி கிட்டே இருந்த அதே பரிவு, அன்பு, அடக்கம், கம்பீரம் எல்லாமே உன்கிட்டேயும் இருக்கு. எம் மனசிலே பெரும் பாரம் இறங்கினாற் போல இருக்கும்மா.."

ராணி பிரமிப்பு இல்லாமல் நின்றாள். ஆதவனின் மனம் சர்க்கரையாய் உருகியது.





## 9

"என்னம்மா எதுவும் பேசவே மாட்டேங்கிறே?"

"எனக்கு என்ன பேசறதுன்னே தெரியலைம்மா... யாருமில்லாத அநாதையா இருந்த எனக்கு கிடைச்ச உறவுகளை நினைச்சு சந்தோஷப்படறதா இல்லை. அப்பாவால அம்மா பட்ட துன்பங்களை நினைச்சு வருத்தப்படறதான்னு புரியலை."

"இல்லே ராணி, அண்ணன் மனசு திருந்தி அண்ணியை கஷ்டப்படுத்தியது தப்புன்னு உணர்ந்து தானே மன்னிப்பும் கேட்டு இருக்கிறார்.."

"வார்த்தை கத்தியிலே மனதைக் குத்தி கிழிச்சிட்டு மன்னியுங்கிற ஒரு வார்த்தையிலே எல்லா ரணமும் ஆறிடாது." இந்த வார்த்தையைப் பேசும்போது அவளையும் அறியாமல் கண்கள் ஆதவனிடம் சென்றது.

"தினம் தினம் அம்மா பட்ட வேதனைகளையும், அவமானங்களையும் கேட்டவ நான், வாழ்ந்த ஒவ்வொரு நொடியும் நரகம். முள் மேல் வாழ்க்கை. எத்தனை வார்த்தை சாட்டைகள் மாறி மாறி அடிச்சிருக்கும். ஆண் துணை இல்லாம அவங்க பட்ட இன்னல்கள், எந்த பொதுநிகழ்ச்சிக்கும் கூட முன்னால் நிக்க மாட்டாங்க. முகத்திற்கு முன்னாடி ஏளனமா சிரிப்புகள் தப்பான பார்வைகள், மனம் தாளாமல் அவள் விழிகளில் இருந்து நீர் பெருகியது.

தாமரையம்மாள் ஆதரவாய் வந்து தலையை வருடித் தந்தபடியே, எந்த மனிதனும் தவறு செய்யாமல் இல்லை. தவறுதல் இயல்பு. மனசுதான் எல்லாத்துக்கும் காரணம். தவறு

செய்தவருக்குத் திருந்த ஒரு சந்தர்ப்பம் தரணும் இல்லையா? உங்கப்பா கடைசியா கேட்ட மன்னிப்பு, வருத்தம் எல்லாமே மரணப்படுக்கையில் அப்போ ஒரு மனிதன் கோபம், வெறுப்பு அன்பு ஆசைன்னு எல்லாத்தையும் கடந்துவிட்ட நிலைமை யில் இருப்பான். அப்படிப்பட்ட நிலைமையிலேதான் அவர் பேசினார்.''

''இருந்தாலும்..! வேறு பெண்ணை மணந்து அவர் சுகப்பட்டு இருக்க நாங்க மட்டும்..''

''பாதிக்கப்பட்டவங்களும், பாதிப்பிற்கு காரணமானவங் களும் இப்போ நம்ம முன்பு இல்லை. ஒருவேளை உயிரோட இருந்து இரண்டு பேரும் ஒண்ணா சேர்ந்திருந்தாலும் வியப்பு இல்லை. ஏன்னா அவங்க இணைந்தது காதலால். அண்ண னைப் பிரிந்தாலும்அண்ணி அவரோட நினைவிலேயே தானே இருந்தாங்க..''

''என்னம்மா செய்யறது. அது பெண்களோட இயல்பு. ஒருமுறை மனசுக்குள்ளே நினைச்சிட்டாங்கன்னா உயிருள்ள வரை மறக்க முடியலை.''

''அதுதான் ராணிம்மா வேறு பெண்ணை மணந்தாலும் அண்ணனும் மனதால அண்ணியைத்தான் நினைச்சிக்கிட்டு இருந்தார்ன்னு சுமித்ராவோட பேச்சிலே நான் புரிஞ்சுக் கிட்டேன்.''

''இறக்கும் சமயமும் வேதனையோடுதானே அம்மா போனாங்க!''

''ராணி மன்னிப்போம், மறப்போங்கிறது தான் இயல்பு. அண்ணியோட குணம் உங்கிட்டேயும் இருக்குமே, பழசை மறந்திடும்மா, இனிமே என்னை அத்தைன்னே கூப்பிடு ராணி!''



''இங்கு நீ வந்து சேர்ந்த இத்தனை நாட்களில் எங்க இரண்டு பேரையும் நீ சொந்த தாய் தகப்பனாகத்தான் நினைச்சே. இப்போ எதையாவது காரணம் காட்டி எங்களை விட்டுட்டுப் போயிடாதேம்மா. ஏற்கனவே உயிருக்கு உயிரான இரண்டு உறவுகளை இழந்திட்டோம். இனியும் இழக்க மனசுக்குத் தெம்பு இல்லே.'

''சிறு பிள்ளையாய் மாறி அவர் தேம்பிட இளையவளின் நிலை இன்னும் சங்கடமாயிற்று.''

யாரை விட்டு ஒரேயடியாய் விலகிட வேண்டும் என்று யோசித்து நேரம் பார்த்துக் காத்திருந்தாலோ அவர்களையே உறவுகளாக்கி விதி கண்ணாமூச்சி காட்டுகிறதே. இந்த அன்பே உதறவிட்டு செல்லவும் மனம் வரவில்லையே!

ஏனெனில் தவறு செய்ததுதான் தந்தை இவர்கள் இல்லையே. இருவருமே பிறரிடம் அன்பை மட்டும் செலுத்தத் தெரிந்தவர்கள். அப்படிப்பட்ட இவர்களை விட்டு, பிரிந்து செல்வதில் என்ன நியாயம். மனம் முழுக்க குழப்பச் சுவடுகள்.

எல்லாவற்றையும் மீறி அநாதை என்னும் பெயர் மறைந்து தனக்கென்று இருக்கும் உறவுகள் மத்தியில் 'போகமாட்டேன் அத்தை' தாமரை அம்மாளின் கைகளைப் பற்றி ஆறுதலாய்க் கூறினாள். மேலும் சற்று நேரம் அவர்களுடன் செலவழித்து விட்டு வெளியே வந்தாள். மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியபடி நின்றான் ஆதவன்.

''நன்றி!''

''எதுக்கு?''

''அப்பா அம்மாவின் மனதைக் கஷ்டப்படுத்தாமல் இருக்க சம்மதித்ததற்கு!''



''யாரையும் புண்படுத்தி எனக்குப் பழக்கமில்லை.'' அவன் புன்னகைத்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''நத்திங்! ராணி ஹோட்டலுக்கு போவதற்கு முன்னாடி என் கூட வெளியே வாங்க சைட் சீயிங் போகனும்.''

''எதற்கு?''

''வாங்களேன் சொல்றேன்!''

''காரில் அவன் அருகே அமர மனமில்லாமல் பின் இருக்கையில் அமரப் போனவளை, ''ஒரு நிமிஷம் மேடம் முன்பக்கமே அமரலாம். நான் ஒண்ணும் உன்னைக் கடிச்சுத் தின்னுட மாட்டேன்.''

''எனக்கு யார்கிட்டேயும் பயமே இல்லை.''

''சரி உட்காரு.''

அவள் அருகில் அமர்ந்தாள். கோதுமை நிற சல்வாரில் பெரிய பூக்கள் விழித்தன. மெல்லியதாய் மல்லிகையின் வாசம் முதுகில் புரளவிட்டிருந்த கூந்தலில் இருந்து வந்தது.

''பட்டி மன்றமே வைக்கலாம் போல் இருக்கிறது.''

''எதற்கு?''

''பெண்களின் கூந்தலுக்கு மணம் இயற்கையா செயற்கையான்னு?''

''நக்கீரனைப் போல கிணற்றில் விழ வேண்டுமா?''

''நான்தான் ஏற்கனவே விழுந்து விட்டேனே?''

''விளையாட்டுப் பேச்சு வேண்டாம். இப்போ எங்கே போறோம்?''



''அந்தப்புரத்திற்கு?''

''வாட்..?''

''கண்ணை உருட்டாதே தாயே பயமாயிருக்கு.. நம்ம ஹோட்டலில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் நமக்கு சொந்தமான நிலமொன்று இருக்கு. அங்கே ஒரு பிக்னிக் ஸ்பாட் கட்டற ஐடியாவில் இருக்கிறேன். இப்போ அந்த சைட்டைப் பார்க்கத்தான் நாம போறோம்... உன்னோட ஐடியா இருந்தாலும் சொல்லு.''

''ஷ்யூர்..''

''வண்டியை விட்டு இறங்கியவர்களை வரவேற்றான் வருண்.''

''வெல்கம் ஸார். வெல்கம் மேடம்..''

''யெஸ், வந்து ரொம்ப நேரம் ஆயிட்டதா வருண்.''

''இல்லே ஸார்.. ஜஸ்ட் 10 மினிட்ஸ்.''

''அங்கு கட்டுமானப் பணிகள் ஓரளவிற்கு நடந்து கொண்டு இருந்தது. சில மிஷனரிஸ் பெரிய ராட்டினங்கள், பிக்ஸ் பண்ணியபடி ஆட்கள் வேலை செய்து கொண்டு இருக்கவும், சின்னச் சின்ன கடைகள் முளைக்கும் அறிகுறியும் இருந்தது.

''நல்ல ஏற்பாடுகள்தான் ஸார். ஒரு பிக்னிக் ஸ்பாட்டுக்குத் தேவையான எல்லாமே இருக்கு. நம்ம சில கேம் ஷோ வெல்லாம் வைக்கலாம். அப்புறம் புக் ஸ்டால் வாரக் கடைசியில் ஒரு மேஜிக் ஷோ, டான்ஸ் அப்படின்னு ஏதாவது செய்யலாம்..''

''அப்புறம், கொஞ்சம் வித்தியாசமான ஐடியாதான். அழகான அரேன்ஜ்மெண்ட்ஸில் அழகோட மொத்த

உருவமாய் ஒரு கனவுப் பூங்காவை உருவாக்கலாம். எப்படின்னா? செயற்கை நீரூற்று, மின்னல் போல இல்லாம மஞ்சளாய் பூசின மாதிரி இதமான விளக்கொலி, நட்சத்திரம், நிலவும் கைகோர்த்த மாதிரி செட்டிங்ஸ், மனதை வருடும் சாக்ஸபோன், மியூசிக் அப்படின்னு ரொம்ப ரொமாண்டிக்கா ஒரு பூங்கா..''

''புதுமையாகவும் இருக்கும், நல்லா ரிச்சாகவும் இருக்கும். அப்புறம் சின்னதாய் குகை போல வடிவமைப்புகள் அதில் நம்ம புராதன இலக்கியங்கள் கொண்ட ஓவியங்கள், குறிப்புக்கள்னு ரெடி பண்ணலாம்.''

''ரியல்லி புதுமையான சிந்தனைதான்... கட்டாயமா முயற்சி செய்யலாம்.''

''அப்புறம் நமக்கு ஹோட்டல் வேலைகளும் இருப்பதால், இந்த சைட்டில் கூட இருந்து கண்காணிக்கவும் ஆள் தேவைப்படறாங்க..''

''வருண் இருக்காரே ஸார். ரொம்பவும் ஷார்ப். இன்பேக்ட் நம்ம ஹோட்டலை நல்ல முறையில் நிர்வாகம் செய்ய எனக்கு நம்ம ஸ்டாப்ஸ் ஒவ்வொருத்தரும், உதவுறதுதான் உண்மை. வருணும், லாவண்யாவும் நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்யக் கூடியவர்கள்!''

''இஸிட்..!''

''எஸ் ஸார் இந்த புராஜெக்ட்டை நம்பி வருணிடம் தரலாம்.'

''வருண் நீங்க என்ன சொல்றீங்க?''

''மேடம் என் மேல இத்தனை நம்பிக்கை வைச்சிருக்காங்க. அதைக் காப்பாத்த வேண்டியது என் கடமை சார்.''



''வெரிகுட்..!''

மேலும் வருணிடம் சில குறிப்புகளைச் சொல்லி விட்டு வருண் வரும் வரை இவள் காத்திருந்தாள்.

''போகலாம்?''

''ம்..!''

''இந்த புராஜெக்ட் நல்லா வருமா இல்லையா?''

''அதுலே என்ன சந்தேகம். ஹோட்டல் பக்கத்திலே இருக்கு. ஏற்கனவே ஊட்டி ஒரு சுற்றுலாத் தலம், மெயின் ப்ளேஸில் வைக்கிறதால நிச்சயமா இந்த தீம் பார்க் நல்லா ரீச் ஆக சான்ஸ் இருக்கு ஸார்.''

''நன்றி! நிலா, நான் வந்ததில் இருந்தே கவனிக்கிறேன். நிர்வாகம் சாதாரண விஷயமில்லை, இந்த ஸ்தாபனத்தை நிர்வகிக்கிற உன்னிடம் சாதாரண வேலையாட்கள் கூட அன்போடு பழகுவதை நான் பார்க்கிறேன்.''

''எனக்கு யாரையும் வெறுத்துப் பேசற பழக்கம் இல்லை சார்.''

ஆதவன் காரை நிறுத்தி விட்டு அவளைப் பார்த்தான். ''என்னை மட்டும் ஏன் நிலா?''

''பழசையெல்லாம் நான் மறந்திட்டேன்..'' அவன் கண்களைப் பாராமல் கூறினாள்.

''யெஸ்... என்னை ஊட்டியில் முதன் முதலாய் பார்த்த போது உன் கண்ணில் தெரிஞ்சுதே சந்தோஷம் ஒருவிநாடி தான்னாலும் அதிலே உன் காதல் தெரிஞ்சுதே..''



''ஸார் வாழ்வின் அடித்தளமே நம்பிக்கைதான். நான் உயிரோட இருக்கேன். இந்த நிமிடம் நான் நிம்மதியா இருப்பேன். இதெல்லாம் நம்பிக்கையோட வெளிப்பாடுதான். அடித்தளமே அசையும் போது அஸ்திவாரம் எப்படி நிலைக்கும்?''

''உன் வாதப்படி பார்த்தாலும் இப்போ நீயும் என் மேல நம்பிக்கை வைக்க மறுக்கிறது உண்மைதானே!''

''இப்போது அவளிடம் மௌனம் நிலவியது. ஒரு கணம் தயங்கி பின் கூறினாள். நான் நிலாங்கிற நீங்க உணர்ந்ததும் எனக்குத் தெரியும். ஆனா யாரோ ஒருவனுடைய பேச்சைக் கேட்டு..''

''ஏன் நிலா பழசையே பேசுறே? நான்தான் அதுக்கு மன்னிப்பும் கேட்டேனே?'

''மன்னிப்புங்கிற ஒரு வார்த்தை மட்டும் எல்லா ரணத்தையும் ஆற்றிடாது. நான் உங்களை நம்பினேனே அந்த ஒரு நொடி பார்வையாலும், உங்க தொடுதலிலும் உண்மைன்னு நம்பித்தானே நான்..! அந்த நம்பிக்கையை நீங்க சிதைச்சிட்டீங்க.''

''அன்னைக்கு பிரபு எங்கிட்டே தவறா நடக்கப் பார்த்தபோது எம்மனசு எப்படித் தவிச்சுது தெரியுமா? ஆபத்தில் உங்களைக் காணவும் மனம் எத்தனை நிம்மதி யடைந்தது தெரியுமா? எல்லாத்தையும் ஒரே நொடியில் அழிச்சிட்டீங்களே?''

''அதுக்குத்தான் நான் ஆயிரம் முறை மன்னிப்பு கேட்டேனே. நீ என் நிலையில் இருந்து கொஞ்சம் யோசி நிலா. பிரபு எப்படிப்பட்டவன்னு எனக்குத் தெரியாது. நான்



விரும்புகிற நேசிக்கிற ஒரு பெண்ணைப் பற்றி அவன் தவறா சொன்னான். நீ என்னவள்ன்னு ஆனபிறகு, உன்னுடைய நன்மையும், தீமையும் எனதில்லையா? அதில் நான் அடக்கம் இல்லையா?

அவனை உன் முன்னாடி ஒரு குற்றவாளியா நிறுத்தணு மின்னு நான் நினைச்சேன். ஆனா கடைசியிலே நானே குற்றவாளி ஆயிட்டேன்.''

''சந்தேகங்கிற ஒரு உணர்வால எங்கம்மா என் கண முன்னாடி பட்ட வேதனையை துடிப்பை, உடனிருந்து பார்த்தவ நான்! ஆனா அதையும் மறந்து உங்ககிட்ட மயங்கினேன். அதன் விளைவு இப்போ... சரி வீண் பேச்செதற்கு?''

''என் மனசு உடைஞ்சு போச்சு. இனிமே ஒட்டறது கஷ்டம். தெரியாம எங்கம்மா செய்த தப்பை செய்யநான் தயாரில்லை. தெரிஞ்சே நெருப்பில் ஒருமுறை சூடுபட்ட பிறகும் மீண்டும் நெருப்பைத் தொட யார் துணிவார்கள். என்மனசை நானே தேத்திக்கிட்டு வாழறேன். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்.''

''ஏதோ அநாதையான எனக்கு ஆறுதலா இரண்டு உறவு கிடைச்சிருக்கு!'' அதில் உங்களுக்கு விருப்பம் இல்லேன்னா சொல்லிடுங்க. ஆனா, பெரியவங்களோட மனசை நோகடிக்க வேண்டாம்.பாவம். அவங்களாவது சந்தோஷமா இருக் கட்டுமே! அதுவரையில் இங்க தங்க எனக்கு அனுமதி தாங்க. பொறுமையா அவங்ககிட்டே எடுத்துச் சொல்லிட்டு நானே போயிடறேன் ப்ளீஸ்! என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க!'' பேசியபடியே அவன் முகத்தைப் பார்த்தாள்.

ஆதவனின் முகம் பாறையாய் இறுகிப் போய் எவ்வித உணர்வையும் வெளிக்காட்டாமல் இருந்தது. வண்டியைக் கிளப்பினான்.

## 10

**வீ**டு வந்து சேரும் வரையில் பேசுவது ஏன் ஒரு பார்வை கூட இவளைப் பார்க்கவில்லை. இவளாக ஒரிரு முறை அவனைப் பார்த்த தோடு சரி... ஆனால், நிலைமையோ இவர்களுக்கு எதிராய் இருந்தது.

வாசலிலேயே தாமரையம்மாளும், சந்திரசேகரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

''என்னத்தே வாசலிலேயே?''

''உங்கக்கிட்டேஒரு சந்தோஷமான விஷயத்தைப் பற்றிப் பேசணும். ஆதவா அதான் காத்திருக்கிறேன். ஆனா நீங்க ரெண்டு பேரும் ஒண்ணா நடந்து வர்றதைப் பார்க்கவும் அதை ரசிக்கவும் மெய் மறந்திட்டோம்.''

''சரி அத்தை நான் அவுட் ஹவுஸிற்குப் போறேன்.''

''அங்கே போய் என்னம்மா பண்ணப் போறே? உன்னோட திங்க்ஸ் எல்லாம் நம்ம வீட்டு மாடியறையில் வைத்தாயிற்று.''

''ஏன் ஸார்?''

''அட மாமான்னு கூப்பிடும்மா... இன்னமும் என்ன ஸார் மோருன்னுட்டு!''

''அது வந்து..!''



''என்னடாம்மா நீ இன்னமும் அன்னியமாகவே நினைக் கிறே? இந்த வயசான காலத்திலே நீயும் ஆதவனும்தான் எங்களுக்கு இரு கண்கள். ஹோட்டலில் கூட எல்லோருக்கும் சொல்லியாச்சு.''

''மாமா நான் உங்ககிட்டே எதிர்பார்க்குறது அன்பைத்தான். உரிமையை இல்லை.''

''கூடிய விரைவில் உனக்கும் ஆதவனுக்கும் ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்திட்டாத்தான் இப்படி பேசறதை நிறுத்துவே!''

''அம்மா ப்ளீஸ் எதிர்பாராம திடீர்னு கிடைச்ச அதிர்ச்சியிலேயே அவ, நிலா ரொம்பவும் குழம்பிப் போய் இருக்கா. இப்பவே எல்லாத்தையும் பேசிடணுமா? நாங்க எங்கே போயிடப் போறோம். பாவம் இன்னிக்கு ரொம்ப அலைச்சல். நிலா நீ போய் பிரஷ் பண்ணிகிட்டு ரெஸ்ட் எடு'' அப்போதைக்கு அந்த விஷயத்திற்கு தடை போட்டாலும்,

அவன் குரலில் இருந்த இறுக்கம் அவளை வருந்த வைத்தது.

''அதென்னடா ராணியை நிலான்னு கூப்பிடறே. அதுக்குள்ளே செல்லப் பேரா..'' தாமரை கண் சிமிட்ட,

''இல்லே மாமா, என் முழுப் பேரு வெண்ணிலா ராணி. அதை இவர்கிட்டே சொன்னேன்.''

''அப்படியா? சரி சரி சின்னஞ்சிறுசுங்க கொஞ்ச நாள் ப்ரீயா இருந்திட்டு அப்புறந்தான் கல்யாணம் பண்ணிக்கிடட்டுமே. இப்போ என்ன அவசரம்?''

''அதை விடுங்கம்மா! நாங்க வீட்டுக்குள்ளே நுழையும் போது ஏதோ சந்தோஷமான செய்தின்னு சொன்னீங்களே! என்னயிது?



''நம்ம ஊர் கோயில் மேல கோர்ட்டில் கேஸ் நடந்ததே அதுலே நம்ம பங்குக்கு வெற்றி கிடைச்சிருக்கு. இப்போதான் நம்ம லாயர் போன் பண்ணினார். இதுக்கெல்லாம் எம்மருமக வந்த நல்ல நேரம்தானே காரணம். அதான் ரொம்ப நாளைக்குப் பிறகு நல்ல விஷயங்கள் நடக்குது.''

''போச்சுடா இத்தனை நாளா மகன் புராணம். இப்போ மருமக புராணமா?''

''உனக்கு ஏண்டா கண்ணா பொறாமை..''

''பெரியவர்களின் சீண்டலில் இயல்பாய் கலந்து கொண்டனர் இளசுகள் இருவரும். ஆனால் அதற்கு அடுத்தபடி பேசிய விஷயங்கள் அடியோடு அவள் தூக்கத்தைக் கலைத்தன.

''நம்ம கோவில்ல நடக்கப் போற சிவராத்திரி திருவிழா விற்கு, நம்ம குடும்பத்து மனிதர்கள்தான் தலைமையேற்று நடத்தணும். இப்போ உள்ள சூழ்நிலையில் என்னாலயோ அப்பாலயோ போக முடியாது. அதனால நீயும் நம்ம நிலாவும் போயிட்டு வந்திருங்களேன்..''

''நம்ம குலதெய்வ வழிபாட்டோட உங்க வாழ்வு நல்லபடியா துவங்கட்டுமே, பெரியவர்களின் இந்த பேச்சில் நிலா மட்டுமல்ல, ஆதவனுமே கொஞ்சம் கலங்கித்தான் போனான். நிலாவைப் பார்த்தான். அவள் முகத்திலும் குழப்ப ரேகைகள்.

''அப்பா இப்போதான் நம்ம ஹோட்டலில் இருந்து 10 கி.மீ. தொலைவில் தீம் பார்க் அமைக்கும் விஷயமாக ரெடி பண்ணிக்கிட்டு இருக்கேன். இப்போ சம்மர் வெகேஷன் வரப்போகுது. அதுக்குள்ளே முடிச்சிட்டா நல்லா



இருக்குமின்னு பீல் பண்றேன். தவிரவும், நம்ம ரிஸாட்டுக்கும் ரெகுலர் கஸ்டமர்ஸ் வருவாங்க. எல்லாரையும் ரிசீவ் பண்ணனுமே'' என்றான்.

''இத்தனை நாள் நீங்க இல்லாமல் நான் பிஸினஸை நல்லபடியா கவனிச்சிருக்கேன். ஆதவா, ஆடிட்டர், வருண், லாவண்யான்னு சமாளிச்சிப்பேன்.''

''இருந்தாலும் உங்களுக்கு கஷ்டம் இல்லையா மாமா?''

''இப்போ நீங்க கோயிலுக்கு புறப்படலைன்னாத்தான் எனக்கு மனக் கஷ்டம். என் மருமகளின் கவனிப்பில் என் உடல் மட்டுமில்லாம மனசுக்கும் தெம்பு வந்திட்டது. அதனால தைரியமா போயிட்டு வாங்க. அந்த ஆதிபராசக்தி எல்லா விதத்திலும் துணை இருப்பா..''

''தம்பி நம்ம தொழில் நல்ல முறையில் நடக்குதுன்னா அது கடவுள் புண்ணியம்..''

''முதன்முறையா நம்ம கைங்கர்யத்தில் மூன்று நடக்கப் போகுது. அதுக்கு நம்ம குடும்பத்து மனுஷங்க இல்லேன்னா எப்படிடா?''

''அதெல்லாம் சரிதாம்பா நானும் நிலாவும் தனியா எப்படி போறது?''

''என்னடா தம்பி? தப்பு இதிலே, நாளைக்கு உங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் நடக்கப் போகுதுதானே, தாமரை யம்மாள் இயல்பாய் கூறிட, நிலாவிற்குள் இனம் புரியா படபடப்பு.''

''தம்பி நீ இத்தனை யோசிப்பது சரியில்லை, உங்க விருப்பத்திற்கு மதிப்பளித்து திருமணத்தை நாங்க தள்ளிப்

போட சம்மதித்து இருக்கிறோம். அதேமாதிரி நீங்களும் எங்களுடைய விருப்பத்திற்கும் மதிப்பு தரணும் இல்லையா?''

''ஆதவன் ஏதோ குறுக்கீடு செய்ய வாய் திறக்க அதற்குள் நிலா எப்போ கிளம்பணும் அத்தை'' என்றாள்.

''பார்த்தியா எம் மருமகளை, எல்லாத்திலேயும் அவ பர்பெக்ட்தான்! மெயில் புக் பண்ணிட்டேன்ம்மா. வர்ற புதன் கிளம்பணும்.''

''அதாவது நாளை மறுநாள்.''

''ஆமாம்..''

''சரி, நீங்க போய் ரெஸ்ட் எடுங்க.'' சாப்பாட்டை கொறித்துவிட்டு எழுந்தாள். ஆதவனுக்குப் பாலைத் தயார் செய்த தாமரையம்மாளிடம் இருந்து பெற்றுக் கொண்டு ஆதவனின் அறைக் கதவைத் தட்டினாள்.

லேப் டாப்பில் ஏதோ தகவல்களை பார்த்த வண்ணம் இருந்தவன், இவளை தன் அறை வாயிலில் கண்டதும் ''வெல்கம்...'' என்றான்.

''பால்...''

வாங்கிப் பருகியவன், டீபாயின் மேல் டம்ளரை வைக்க அவள் தயங்குவதைக் கண்டு ''என்ன நிலா?'' என்றான் பரிவுடன்.

''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்..''

''சொல்லு..''



''நான் அத்தை மாமா மனசு புண்படக் கூடாதுன்னுதான் உங்கக் கூட வர சம்மதிச்சேன். ஆனா, மனசிலே ஒருசின்ன நெருடல்.''

''அத்தனை தூரம் விலகலைப் பற்றிப் பேசியவள் திடுமென இவனுடன் ஊருக்குவர சம்மதித்ததை அவனாலும் புரிந்து கொள்ள இயலவில்லை. எப்படியோ ஒருவகையில் மனம் சந்தோஷப்பட்டது. அது தவறு என்று இப்போது பேச வந்திருக்கிறாள் போலும் என்று எண்ணியவன், கவலைப் படாதே, நிலா என்னால் உன் தன்மானத்திற்கோ, பெண்மைக்கோ எந்தக் களங்கமும் ஏற்படாது.''

''நான் அதைப் பற்றிப் பேசலை. ஆனா இந்த கல்யாண விஷயம்..''

''நான் உன்னைக் கட்டாயப்படுத்தலையே..''

''நீங்க இல்லை. அத்தையும் மாமாவும்... அதுதான் நெருடலா இருக்கு..''

அவன் எழுந்து வந்து அவள் அருகில் நின்று ஊன்றி கவனித்தான். ''உண்மைக் காதல் ஊமையாகத்தான் தன் உணர்வுகளைக் கூறுமே தவிர காயப்படுத்தாது. உன் விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடக்காது நிலா. நான் எந்த விதத்திலும் உனக்குத் தொல்லை தரமாட்டேன்.'' கடைசி வார்த்தைகளைக் கூறும்போது மிகுந்த வலியோடு வந்ததை அவளும் உணர்ந்தாள்.

''ஸார்.. நான் உங்களைக் காயப்படுத்தணுமின்னு இதைச் சொல்லலை.''

''இன்னொரு விஷயம்... அத்தான் என்று முறை வைத்து கூப்பிடாவிட்டாலும், ஆதியென்று அழைக்கலாமே! இதுவும்



அம்மா அப்பாவிற்காகத்தான் நீயாக உணர்ந்து என் தவறை மன்னிக்கும் வரை நான் காத்திருப்பேன்.''

''ஆதி!'' பெயரை உச்சரிக்கும் போதே உடலில் ஏதோ உணர்வுகள் குடைந்தன.

எத்தனை முறை சொல்லிச் சொல்லி ஆனந்தப்பட்டு விட்டாள். எத்தனையோ இழப்புகளை வாழ்வில் உணர்ந் தவள். நான் ஒவ்வொரு குழந்தையும் அதிலும் பெண் பிள்ளைக்கு தந்தையின்மேல் அலாதி அன்பு உண்டு. ஒரு முறை கூட எனக்கு நினைவு தெரிந்து அந்த அன்பு எனக்குக் கிடைக்கவில்லை.

எத்தனை ஏக்கங்களை எனக்குள்ளேயே புதைத்திருப்பேன் தெரியுமா? சுடு சொற்களிலும் அவமானங்களிலும் என் தாயின் நிலையைக் கண்டு நான் அழாத தினமே இல்லை. தவறு புரிந்தாலும் என் மனம் சமாதானம் அடைய மறுக்கிறது.

அன்றைய நிகழ்வின் கசப்பான தாக்கம் அவளுள் தோன்றியது போலும். கண்களை மூடி எதையோ மறைக்க முயல்பவள் போலிருக்க,

முதன் முதலில் தன் கைப்பிடிக்குள் அவள் கண்மூடி கலந்திருந்த நிலையை நினைவூட்டியது ஆதவனுக்கு! மெல்ல கண்களை மலர்த்தினாள். இனம் புரியா தேடல்கள் இருவரின் பார்வைகளிலும்!

''நீ போய் தூங்கு நிலா.. காலையில நேரத்தோடு ஹோட்டலுக்குப் போக வேண்டி வரும்...'' என்றான் மனமின்றி திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே நடந்தாள் வெண்ணிலா. ஆதவனும் தன் கட்டுப்பாட்டை முழுமையாய் இழந்துதான் போயிருந்தான்.



ஏங்கிய அவளை இழுத்தணைத்து ஆறுதல் படுத்தி உச்சியில் முத்தமிட கை பரபரத்தது. அப்படி ஏதேனும் நடந்தாலும் நிச்சயம் மேலும் தன்னைப் பற்றி தப்பிதமாக நினைக்க வேண்டி வரும் என்பதையுணர்ந்து பேச்சை அத்துடன் முடித்துக் கொண்டான்.



## 11

அறைக்குள் நுழைந்ததும், பெட்டியின் நடுவில் துணிகளுக்கு இடையில் இருந்த டைரியை எடுத்தாள். குறிப்பிட்ட அந்த நாளின் தேதியைப் பிரித்துப் பார்வையை விரட்டினாள்.

உன் மனதை ஆயிரம் முடி போட்டு நீ மறைத்தாலும், விழிகள் உண்மையைக் காட்டிக் கொடுத்து விடுகிறதே! இமைக்க மறந்த தருணங்கள்! புரிபடாத பார்வைகள்! காரணம் புரியாமல் தவிப்பாய் நான்... தனிமையைச் சந்திக்க பயம் கொண்டு யோசித்தபடி அங்கு இருந்தேன். மனதில் ஒரு சிறுநினைப்பு!

வீசி விட்டுப் போகும் புன்னகையில் ஆயிரம் வாசிப்பு அர்த்தங்கள். முதுகிற்கு பின்னால் துளைத்த பார்வையில் புரிந்தது மறக்க முயன்றும் தோற்றுப் போன உன் இதயம். வாசலில் நின்று வாடிய முகம்தனில் உன் வருகையின் காரணங்கள்.

வந்தாய், அழைத்தாய், அதிகாரப் பூர்வமாய் மெல்லிய உரசல். உன் விழிகள் என்ன சொல்கிறது என்னிடம். இரவுகளின் தொடக்கத்தில் போர்வையாய் உன் நினைவுகள்.

நீ விழிகளால் உறவாடியது சில மணித் துளிகள்தான். ஆனால் ஆயிரம் தருணங்களில் அதை நினைக்க வைத்து விட்டாயே! எங்கு திரும்பினாலும் நீயே இருப்பதால் ஒரு நினைவு. உறங்கிட முயன்றால் இமைகளுக்கு நடுவில் வந்து நிற்கிறாய்!

ஏக்கம் வழிந்த பார்வை, தயங்கிய நடை, ஏனிது? விநாடிகளைக் கூடக் கடக்கச் சிரமபடுகிறேன். என் விரல்களை அணைத்த உன் விரல்களை உறவாடியபோது மென்மையாய், பூப்போல என் விரல்களைத் தொட்டு உன் உதடுகளுக்கு அருகில் நீ எடுத்துச் செல்ல...!

உன் தொடுதலில் இத்தனை இதமா.. உனைச் சந்திக்க இயலாமல் தரை தாழ்ந்தன விழிகள். மொத்த சக்தியும் வடிந்து போனாற் போல் தளர்ந்தது. உடல், வெட்கம் நெட்டித் தள்ள மனமின்றி பிரித்தேன் என் விரல்களை உன்னிடமிருந்து!

ஏக்கமாய் வேண்டும் என்பதைப்போல் உன் விரல் நீண்டு வர, போதுமென்ற என் கெஞ்சலில் பிரிந்தாய் மனமின்றி. திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே! நாட்கள் சில ஆனாலும், நினைவுகள் மட்டும் நெஞ்சில் பசுமையாய்!

என்னையும் அறியாமல் விழுந்து விட்டேன். உன் அணைப்பிற்கும், அருகாமைக்கும், முத்தத்திற்கும் ஏங்குகிறது என் மனம்! என்னை விட்டுப் பிரிந்து விடுவாயோ என்று தவிக்கிறது இதயம்!

''நிலா..''

''சொல்லுங்க சார்.''

''ஸார் வேண்டாமென்று நேற்றே சொன்னேனே?''



''ஸாரி யெஸ் ஆதி போதுமா?''

''குட்... சரி சம்மர் வெகேஷன்ஸ்ல முக்கியமானவங்க யாரும் வர்றாங்களா?''

''ரெகுலர் கஷ்டமர்ஸ் சிலர் மெயில் மூலமா புக் பண்ணியிருக்காங்களாம். லிஸ்ட் டேபிளில் இருக்கு. அப்புறம் ஆஃபரில் வாரக் கடைசியில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்க என சுமார் 8 ஜோடிகளை தேர்ந்தெடுத்து இருக்கிறோம். அவங்களுக்கும் டேட்ஸ் அட்ஜஸ்ட் பண்ண லாவண்யா கிட்டே சொல்லியிருக்கேன்.''

''வேற ஏதாவது ஃபெசிலிட்டீஸ்?''

''வெகேஷனில் கிச்சன் ஒர்க்குக்கு சிலபேர் தேவைப்படறாங்க. ஆதி இண்டர்வியூ பண்ணனும். அப்புறம் நம்ம பழைய லாண்டரியில் சர்வீஸ் அத்தனை சரியில்லை. புதிய காண்டிராக்ட் எடுத்திருக்கேன். அப்புறம் கடந்த மாசத்திலே டெகரேஷன்ஸ் ஒர்க் ரெசாட்ஸ் ரூமில் ஸ்டார்ட் பண்ணியிருக்கேன். அதுக்கு பேமெண்ட் செக் உங்க டேபிளில் இருக்கு. சைன் பண்ணிட்டா தேவலை.''

''ஷ்யூர்!''

''மத்த எல்லாம் லாவண்யா பார்த்துப்பா. உங்க ஸைட் ஒர்க் எப்படி ஆதி அதை விட்டுட்டு போறது?''

''வருண் உன் டிரைனிங் ஆயிற்றே. எதிர்பார்த்ததை விடவும் வேலை துரிதமா நடக்குது. அம்மாவை தேதி பார்க்க சொல்லியிருக்கேன்.''

''எதுக்கு?''



''கல்யாணமின்னு சொல்ல ஆசைதான். ஆனா, நம்மிடம் இப்போ நேரமில்லை பாரு. தீம் பார்க் திறப்பு விழாவிற்கு!''

ஒரு சிறு மௌனத்திற்கு பிறகு ''நான் கிளம்பட்டுமா ஆதி?''

''எனக்கும் வேலை முடிந்து விட்டது. போகலாம்.'' அவனும் கூடவே எழுந்தான்.

''ஒரு நிமிஷம் வருணையும், லாவண்யாவையும் கூப்பிட்டு சொல்லிடலாமே!'' அவள் இண்டர்காமில் கையை வைக்கப் போக தடுத்தான் ஆதவன்.

''வேண்டாம் தாயே! ஏற்கனவே நம்ம பேரில நிறைய பாவங்கள் இருக்கோ என்னவோ? இப்போ.. மறுபடியும் ஒரு லவ் ஜோடியை பிரித்த பாவம் வேண்டாமே!''

''என்ன சொல்றீங்க ஆதி?''

''லாவண்யாவும், வருணும் லவ்வர்ஸ்... சின்சியர் லவ்வர்ஸ்..''

''நிஜமாகவா?'' விழிகளை அகல விரித்தாள் நிலா. ''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''அவங்க இரண்டு பேரோட கண் பார்வைகளையும் பார்த்தாலே போதுமே! நான்தான் இந்த பத்து நாளா கவனிச்சிக்கிட்டு வரேனே! அவங்க ரொமான்ஸை?''

''வேலையைத் தவிர மத்த எல்லாத்தையும் ரொம்ப நல்லா கவனிக்கிறீங்க போல...''

''நிர்வாகியின் கண் நாலாபுறமும் சுழலணும் இல்லையா? தவிரவும், அடியேனுக்குத்தான் அந்த பாக்கியம் கிடைக்கலை. பிறருக்காவது கிடைக்கட்டுமே.''



பேச்சு மறுபடியும் சுற்றி அங்கேயே வருவதுகண்டு இவள் மௌனமாக, ''இன்னும் ஒரு விஷயம், வருணும், லாவண்யாவும் நமக்காக வீட்டில் வெயிட் பண்ணிக்கிட்டு இருக்காங்க..''

''அவங்க இரண்டு பேர் வீட்டிலேயும் பேசி கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். அதைச் சொல்லத்தான்..''

''எனக்குத் தெரியாம நிறைய வேலை செய்து இருக்கீங்க..''

''புரிஞ்சா சரி வா போகலாம்.'' இருவரும் வீட்டை அடையும்போது, அங்கே வருணும் லாவண்யாவும் நின்றிருந்தார்கள்.

''என்ன லாவண்யா கடைசியிலே என்கிட்டே சொல்லாமலேயே மறைச்சிட்டீங்க?''

''என்ன மேடம்?''

''அதான் உங்க காதல் விவகாரத்தை!''

''அது வந்து..!''

''நீங்க ஸார் மாதிரி ப்ரீயா பேசியிருந்தா சொல்லி இருப்போம்... நீங்கதான் ரொம்பவும் கண்டிப்பாச்சே!''

''உண்மைதான் வருண். மேடம் ரொம்ப கண்டிப்புதான். நானே ஸ்கூல் பையன் மாதிரி கைகட்டி நிற்கிறேன்.. பாரேன்.''

''இதற்கெல்லாம் நீங்க கொடுத்து வெச்சிருக்கணும் ஸார்.''

''என்னப்பா கொடுத்து வைச்சு இருக்கணும்'' கேட்டபடியே வந்தார் தாமரையம்மாள்.

''அம்மா நம்ம வருணுக்கும், லாவண்யாவுக்கும் சீக்கிரமே கல்யாணம் நடக்கப் போகுது.''

''அப்படியா? ரொம்ப சந்தோஷமாயிருக்கு. சில நாட்களாகவே நல்ல நல்ல விஷயங்கள்தான் காதிலே விழுது. ஆதவனுக்கும், உங்க மேடமுக்கும் கல்யாணம் பண்ண லான்னு ஆசைப்பட்டேன். ஆனா அவங்க தள்ளிப் போட்டுட்டாங்க..''

''இப்போ உங்களோட கல்யாணத்தை செய்து அந்தக் குறையைத் தீர்த்துடலாம்..''

''நன்றிம்மா! எங்க கல்யாண வாழ்க்கையில் சாருக்குத்தான் அதிகபங்கு. நன்றிக்கடன் பட்டு இருக்கோம்.''

''பெரிய வார்த்தையெல்லாம் வேண்டாம் வருண். எங்க சொந்த ஊரான மறவர் பெருங்குடியில் கோவில் திருவிழா காரியமா நானும் நிலாவும் போக வேண்டியிருக்கு. நீயும் லாவண்யாவும் அப்பாவோட இருந்து பொறுப்பா எல்லாத்தையும் பார்த்துக்கணும்.''

''ஸார் அவ்வளவு பெரிய பொறுப்பை?''

''மூச்.. மேடமோட ஆர்டர். கூடவே உனக்கு எத்தனை நல்லது செய்யறேன் பார். லவ் பண்ற பொண்ணு தனிமை. அழகான சூழல் இதெல்லாம் யாருக்கு அமையும்?''

''கூடவே கடினமான வேலையும் கொடுத்திட்டீங்களே சார்..''

''ஒண்ணு சொல்லட்டுமா ஸார். இதிலும் நீங்கதான் அட்வான்ஸ். கல்யாணத்திற்கு முன்னாடியே ஹனிமூன் போறீங்க..!'' நிலாவின் முகம் எத்தனை முயன்று சிவந்து மெல்லிய சிரிப்பை வெளிபிட,

''மேடமோட முகத்தில் இப்பத்தான் சிரிப்பையே பாக்குறேன். ஏன் மேடம்? இந்த அழகான சிரிப்பை விடுத்து எப்பப் பாரு முகத்தை கடுகடுன்னு வைச்சிருந்தீங்க?''



''இடத்திற்கு தகுந்த மாதிரி தோற்றமும் அமையனுமே!''

''ஸார் ஒரு சின்ன அட்வைஸ் ஏதோ பழகிட்டோமேன்னு சொல்றேன். எப்பவும் மேடம் முன்னாடி கைக்கட்டியே நில்லுங்க. இல்லேன்னா பெஞ்சிலே ஏத்திடப் போறாங்க?'' வருண் கிண்டலாய் கூறிட வீடே சிரிப்பில் குலுங்கியது. 'இதே சிரிப்பு நிலைக்க வேண்டும்' என்று தாமரையம்மாள் மனதார பிரார்த்தித்தார்.



12

''நிலா இன்னும் ஒரு மணி நேரத்தில் நாம இறங்க வேண்டிய ஊர் வந்திடும்... கொஞ்சம் பிரஷ் பண்ணிக்கிறியாம்மா?''

தூக்கம் கலைந்த விழிகளோடு அவனைப் பார்த்தாள் நிலா. இரண்டு நாட்களில் பயணம் என்பதால் மற்ற வேலையில் கூடுதல் கவனம் செலுத்தியதும், சில பொருட்களை வாங்க, எடுக்க என பல வேலைகளினால் ஓய்வில்லாமல் இருந்ததாலும், மிகவும் அசதியாய்த்தான் உணர்ந்தாள்.

ஏஸி கோச் என்பதால் கூட்டமும் அதிகமில்லை. இவர்களோட இன்னும் இரண்டே பேர். அவரவர் தத்தம் வேலைகளில் இறங்கிட, நிலா பெயருக்காக கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு வாசிக்க ஆரம்பித்தாள். அவனுடனான தனிமையான பயணம் பிடித்து இருந்தாலும் மனம் குறுகுறுக்கவே செய்தது.

ஆனால், ஆதவனோ மிகுந்த இயல்பாய் இருந்தான். வீணாய் அவன் புறம் திரும்புவதை தவிர்க்க புத்தகத்தை



வாசிக்க ஆரம்பித்தவள் அப்படியே உறங்கியும் போய் இருக்கிறாள்.

''காபி வேணுமா நிலா?''

''வேண்டாம்.. ஆதி..!'' உடைகளைச் சரிபடுத்தியபடியே எழுந்து முகம் கழுவி வந்தாள்.

கலைந்த முடிக் கற்றைகள் முகத்தில் மோதி மோதி விளையாடின. ஆதியின் ஊடுருவும் பார்வையைத் தாங்க முடியாமல், ஜன்னல் புறம் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

இவனுள் புன்னகை நினைவில் சற்று அதிகமாகவே சிரித்து விட்டான்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''அவசியம் சொல்லணுமா?''

''சொன்னால் நானும் தெரிஞ்சிப்பேன். இப்போதைக்கு வேறு யாரும் இல்லையே. உங்க கிட்டேதானே பேசியாகணும்.''

''இன்னும் ஒரு நாலு ஐந்து நாளுக்கேனும் இந்த அவஸ்தையைப் பொறுத்துத்தான் தாயே ஆகணும்!''

''வேறு வழி? என்ன செய்ய சகித்துக் கொள்கிறேன். என்னைப் பார்த்துச் சிரிச்சதற்கு காரணம் சொல்லுங்க.''

''வேண்டாமே..''

''வேணுமே!'' அவளும் அதே தொனியில் கூறினாள்.

''தூக்கத்தில் கூட என்னைப் பற்றிய பயம்தான் உனக்கு இல்லையா நிலா? எனக்கு ஒரு பதில் சொல்லு. என்னைப்



பார்த்தால் அத்தனை மோசமாகவா இருக்கிறேன்? எப்படியெனில், பார்க்கவே கோரமாய்...!''

''ஆஹா... நீங்க அழகுதான். எத்தனை பேர் சைட் அடிக் கிறாங்க..''

''உடையவள் பார்த்தால் இன்பம். முறைக்காதே. கிட்டத்தட்ட ஆறே முறை ஆதி.. ஆதியென்று அழைத்தாய்.''

''நானா?''

''ஏன் நம்பிக்கையில்லையா? நான் பொய் சொல்ல வில்லை.''

''நேற்றே டி.வி.யில் சொன்னார்கள்..''

''என்னவென்று?''

''நீங்கள் பேண்ட் போட்ட கலியுக அரிச்சந்திரன் என்று!''

''அட ஆதவா உனக்கு இது தேவைதானா? வருண் அப்பவே சொன்னான். நான்தான் கொஞ்சம் ஓவரா பேசிட்டேன். நல்லவேளை இங்கே பெஞ்ச் இல்லை.''

அவள் கலகலவென்று நகைத்தாள்.

அதற்குள் ''காபி.. காபி..'' என்று குரல் கேட்கவும், இரண்டு காபி வாங்கி வந்து ஒன்றை அவளிடம் நீட்டி மற்றொன்றை ருசித்தான். மீண்டும் இருவரிடையேயும் மௌனம்.

நிலாவிற்கு மனம் முழுக்க மகிழ்ச்சி ஓடியது. வெளிப் படையாக ஆதவனிடம் முகம் திருப்பினாலும், மனதின் ஒரு மூலையில் அவன்மேல் கொண்ட நேசம் நீறு பூத்த நெருப்பாய் கனன்று கொண்டுதான் இருந்தது. விழிப்போடு இருக்கும் தருணம் மறைத்தது தன்னையும் அறியாமல் உறக்கத்தில்..!

இன்னும் வேறு என்னவெல்லாம் உளறி வைத்தேனோ..? என்னைப் பற்றியென்ன நினைத்தாரோ? நல்லவேளை வெறும் சீண்டலோடு நிறுத்திக் கொண்டானே தவிர அதுகுறித்து பரிகாசம் ஏதும் செய்யவில்லை. அந்த மட்டில் நிம்மதிதான்.

அவளின் நினைப்பு அவ்வாறு இருக்க ஆதவனோ, முன்பைக் காட்டிலும் நிலாவிடம் உள்ள இறுக்கம் மெல்லிய தாய் தளர்ந்துதான் வருகிறது. இதே நிலை நீடித்தால் பழைய கசப்பை மறக்க இயலும் என்று எண்ணினான்.

இருவரின் உள்ளங்களும் வெவ்வேறு சிந்தனையில் உழன்று கொண்டிருக்க ரெயில் ஊர்ந்து சாத்தூர் என்ற பெயர் பலகை தாங்கிய இடத்தில் நின்றபோது மணி இரவு பதினொன்றைத் தொட்டு இருந்தது. இரவு நேரம் என்பதால் ஸ்டேஷன் வெறிச்சோடிப் போய் இருக்க, பெட்டியை தூக்கியபடியே, நிலா ''இங்கே ஒரு ஹோட்டலில் ரூம் ஏற்பாடு செய்து இருக்கிறேன்'' என்றான் ஆதவன் ஆட்டோவை அழைத்தபடியே.

''ஓட்டலிலா?''

''ஆமாம்..''

''ஏன்? நேராக நம் ஊருக்கே போய் விடலாமே..''

''அம்மணி இது ஒன்றும் வளர்ந்த நகரம் இல்லை. நினைத்த நேரத்திற்கு, பஸ்ஸிலோ, டாக்ஸியிலோ ஏறிச் செல்ல. பக்கா கிராமம். இங்கேயெல்லாம் மணிக்கு இத்தனை முறை பிரயாணம் என்ற கணக்கு உண்டு. தவிரவும் நடு ராத்திரியில் யாரையும் தொந்தரவு செய்ய வேண்டாமே!''

''நாம் போக வேண்டிய ஊர் இங்கிருந்து குறைந்தது 48 மைலாவது இருக்கும். காலையில்தான் பஸ் கிடைக்கும். அதனால்தான்..''



வேறு வழியின்றி அவளும் தலையசைத்தாள். அவன் குறிப்பிட்ட அந்த ஓட்டல் பைபாஸ் ரோட்டில் இருந்தது. வரவேற்றிட இருந்தவனிடம் விவரம் சொல்லி சாவியைப் பெற்றுக் கொண்டு ரூமிற்கு சென்றனர்.

பெட்டியைக் கொண்டு வந்த பையன் இருவரையும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, நமுட்டுச் சிரிப்பை உதிர்த்தான். நிலாவிற்கு அந்நிலை சங்கடமாய் இருந்தாலும், ஆதவன் அதைப்பற்றி பெரிதும் எண்ணவில்லை. உடையை மாற்றிக் கொண்டு உறங்க முனைந்தவன், இவள் இன்னமும் சல்வாரிலேயே ஸ்தம்பித்து நிற்பதை அறிந்து ''என்ன நிலா?'' என்றான்.

வெறும் லுங்கியோடு இறுக்கமான பனியனும் அணிந்த அவனின் கம்பீரத்தையும், ஆண்மையும் உணர்ந்து இவள் தலை குனிந்தாள்.

''பசிக்கிறதா? இங்கே சாத்தூர் பரோட்டா என்றால் ரொம்பவும் பேமஸ் ஆர்டர் செய்யவா?''

''வேண்டாம், ஆதி, பசிக்கவில்லை!''

''எனக்கு உறக்கம் வருகிறது..'' என்றவன் அவள் பார்வை போன இடத்தைக் கண்டவுடன் அவளின் தயக்கத்திற்கான காரணத்தைப் புரிந்து கொண்டான்.

அங்கு ஒரேயொரு பெட் மட்டுமே இருக்க அதிலெப்படி உறங்குவது என்று மலைத்து நிற்கிறாள் என்பதையுணர்ந்து, ''நீ கட்டிலில் படுத்துக் கொள் நிலா. நான் சோபாவில் படுக்கிறேன்'' என்று தலையசைத்து விட்டு தலையணையோடு நகர்ந்தான்.



மௌனமாய் படுக்கையில் சரிந்தாள். ஆனால், மனம் உலைக்களம் போல் கொந்தளிப்பாய் இருந்தது. விவரிக்கவே முடியாத உணர்வுகள் மனதைப் பேரலையாய் மாறி மோதின!



## 13

மஞ்சள் நிற வானை வாசலாய் கொண்டு வாழும் சூரியனே! இருள் கவ்விய மலை முகடுகளுக்கு நடுவில் புதிதாய் பூத்திருக்கும் பூவாய் எந்த மன்மதனைக் கவர்ந்திட அக்னிக் கண்களில் குளிர் பார்வையை வீசுகிறாய்!

இருள் என்னும் பெண்ணின் ஊடல் அழைப்பை ஏற்று பூமியை அணைக்க ஓடோடி வந்தான் சூரியன். தன் வெளிச்சக் கரங்களை விரித்தபடியே!

நிலாதான் முதலில் கண் விழித்தாள். அதிகாலைச் சோம்பலை அனுபவித்தபடியே ஆதவனைக் கண்டாள். ஆழ்ந்த உறக்கம் என்பதன் அடையாளமாய் மூச்சு வெகு சீராய் ஏறி இறங்கியது.

சோபா மிகவும் சிறியதென்பதால் நெடிய கால்களையும், உடலையும் குறுக்கிப் படுத்திருந்தான். அந்நிலை ஆதவனுக்கு மிகவும் அசௌகரியமாய் இருக்கும் என்பதையுணர்ந்தபோது ஒருபுறம் பாவமாகவும் இருந்தது.

தலைக்குக் கையை மடித்து வைத்துப் படுத்திருந்தவனின் அருகில் சென்று அவன் கேசத்தை கோதி விட வேண்டுமென்று மனம் துடித்தது. சப்தமே இல்லாமல் சில விநாடிகள்... அவன் உருவத்தைக் கண்களில் வாங்கிக் கொண்டவள் எழுந்து குளியலறை நோக்கி நடந்தாள்.



குளிர்ந்த நீர் உடலைக் கழுவிட, உடலின் உஷ்ணம் தணிந்ததே தவிர மனதின் உஷ்ணம் தணிய மறுத்தது. தனிமையான மனம் எதை எதையோ நினைத்தது. ஆதவனின் அணைப்பினையே நினைவூட்டியது.

அவன் பிரிவை விடவும் இந்த அருகாமைதான் ரொம்பவும் ஏக்கம் கொள்ள வைத்தது.

ஈரான உடலை நைட்டியில் மறைத்து வெளியே வரவும், ஆதவன் பேப்பரை விரித்தபடி அமர்ந்திருப்பதைக் கண்டு வியப்பாய் விழித்தாள்.ஒரே அறையில் இவனுடன் எப்படி குழப்பமாய் ஏறிட, தெளிவான வசீகரப் புன்னகையுடன் 'ஹாய் குட்மார்னிங்' என்றான்.

''மார்னிங்... நீங்க குளிக்கலையா?''

''கிண்டலா? இருக்கிறது ஒரே பாத்ரூம். நீயே இப்பதான் உன் ஜலக்கிரீடையை முடிச்சிட்டு வர்றே. அடுத்த ஒரு நிமிடத்திலேயே குளிக்கணுமின்னு சொன்னா, எனக்கு காக்காய் குளியல் குளித்துப் பழக்கம் இல்லையே?''

''ஜோக்கா, காலையிலேயே கடியா?''

''இரத்தம் வருதா?''

''நான் உடை மாற்றனும்..''

''ச்சீ.. இதுக்கெல்லாம் என் பர்மிஷன் வேண்டாம். தவிரவும் எனக்குப் புடவை கட்டி விடும் பழக்கமில்லை.''

''ஆதி ப்ளீஸ்...'' அவஸ்தையாய் பார்க்கவும், இவனும் விளையாட்டைத் தொடர்ந்தபடியே,

''இதையேன் இப்படி மென்று விழுங்குகிறாய்? போடா என்றால் போகப் போகிறேன்..''

''சற்றும் யோசியாமல் 'போட'' என்றாள்.

''நன்றி..!'' புன்னகைத்தபடியே பால்கனியின் பக்கம் சென்றவன், ''நிலா ஒரு சின்ன அட்வைஸ், தலைகாணி உறை மாதிரி உடுத்தாம அழ்கா புடவை கட்டிக்கோம்மா''என்றான்.

''யூ..!''

''ஜூட்..!''

''பர்ப்பிள் கலர் புடவையை உடுத்தியவள் இறுக்கமானதை விடுத்து இப்படி இலகுவாய் பேசுவதும் மனதிற்கு இதமாய் இருப்பதை உணர்ந்தாள். வெகு நாளைக்குப் பிறகு ஒரு நிம்மதியுணர்வு பரவியதை அவளால் உணர முடிந்தது.

காலை உணவை முடித்துவிட்டுக் கிளம்பினார்கள்.

ஹோட்டலில் இருந்து ஊருக்குள் செல்ல இரண்டரை மணி நேரங்கள் பிடிக்கும் என்பதால் ஆதவன் கார் ஒன்றிற்கும் ஏற்பாடு செய்தான்.

டிரைவர் வண்டியைச் செலுத்திட இவர்கள் இருவரும் பின்புறம் அமர்ந்து இருந்தார்கள். ஒவ்வொரு இடம் பற்றியும் வெகு ஆர்வமாய் சொல்லியபடியே வந்தான். அவளும் தலையாட்டியவாறே கேட்டு வந்தாள்.

''இதுதான் பஸ்ஸ்டாண்ட் நிலா.''

''இந்தப் பச்சைக் கலர்லே நாலு டயரோடு, ஸ்டேரிங் எல்லாம் இருக்குமே.. அந்த பஸ் நிக்குற ஸ்டாண்டா?''

''உனக்கு கூட இத்தனை விவரங்கள் தெரிந்திருக்கும் என்று நான் நினைக்கலை.''

''பூ வேணுமா?''



''ம்..!''

''அவன் ஐம்பது ரூபாய்த் தாளை நீட்ட அந்தப் பெண்மணி அளந்த முறை கண்டு வியப்பாய் இதுயென்ன ஆதிமுழம் போடவே இல்லையே?''

''இங்கேயெல்லாம் எண்ணிக்கை கணக்குதான். நிலா நூறு பூ பத்து ரூபாய் என்று?''

''அப்போ இதிலே 500 பூ இருக்குமா?''

''நாம போய் சேர இரண்டரை மணி நேரம் ஆகும். அதுவரையில் எண்ணிக்கிட்டே வாயேன்..''

''உங்களுக்கு ரொம்பவும் கொழுப்பு ஆதி!''

''ஒருநாள் சமைச்சுப் போட்டே அதுக்கே இப்படிச் சொல்றீயேம்மா?''

''ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு ஸ்பெஷல் உண்டு. இங்கு என்ன ஸ்பெஷல் ஆதி?''

''ஊர்லேயெல்லாம் கோயில்கள் ரொம்ப பிரசித்தம். பங்குனி திருவிழா கூட பிரமாதமா கொண்டாடுவாங்க. முளைப்பாரி, தீச்சட்டி.. என்று!''

''ஓஹோ..''

''இதென்ன எதையோ தூக்கிட்டுப் போறாங்களே?''

''சாத்தூரில் மெயின் தொழிலே, தீப்பெட்டி தயார் பண்றதுதான் வாயேன். வண்டியை விட்டு இறங்கி அந்த இடத்தில் நுழைந்து, குவித்து வைக்கப்பட்டு இருந்த ஒரே சீராய் வெட்டப்பட்டு இருந்த குச்சிகளைக் காட்டி, இந்தக் குச்சிகள் எல்லாம் கேரளா, அந்தமான் போன்ற இடங்களில் இருந்து கிடைக்கும்.''



''இதோ இந்தக் குச்சிகளை எல்லாம் இரும்பு ராடில் அடுக்கி வெயிலில் காய வைத்து, அப்புறம் இந்த மெழுகு அடுப்பில் அடுப்பு இங்கே அந்த எரி மருந்தை முக்கி குச்சியைப் பரப்பி விடுவாங்க..

பின்னர் மறுபடியும் வெயிலில் காய வைத்து பெட்டியில் அடுக்கி லேபிள் ஒட்டி பண்டல் போட்டு வெளியூர்களுக்கு விற்கறதும் உண்டு.''

''பெண்களுக்குமா இந்த வேலை?''

''பெண்கள்தான் அதிகம் பணிபுரிவார்கள். மருந்து முக்கும் வேலை கடைகளுக்கு சப்ளை செய்வது ஆண்கள் பண்றாங்க. முன்பு சின்னச் சின்னப் பிள்ளைங்க கூட நிறைய இருப்பாங்க. கவர்மெண்ட்டோட சிவியர் கண்காணிப்பில் அவங்க எல்லாம் பிழைச்சாங்க..''

''பாவம் இல்ல ஆதி?''

''இந்த மாதிரி கிராமங்களில்தான் குடிசைத் தொழிலா நிறைய செய்யறாங்க. கிராமமின்னு மட்டுமா நாம பேசறோம். விரல் நுனியில் அழுக்குப் படாம பட்டணத்தில் நாம வேலை பாக்குறோம். ஆனா எத்தனை பேர் உடம்பை வருத்தி இங்கே வேலை செய்யறாங்க தெரியுமா?''

''உண்மையான உழைப்பாளிகள் இவர்கள். பேனாவோட நிப் தயாரிப்பு, சோப்பு, பேப்பர்னு நிறைய குடிசைத் தொழில்கள் இங்கே இருக்கு. பெயருக்குத்தான் கிராமமே தவிர இது ஓரளவுக்கு நல்லா வளர்ந்த நகரம்தான். பாரேன் வங்கிகள், கம்ப்யூட்டர் சென்டர்ஸ்..''

''உண்மைதான் ஆதி.



''இன்னொரு விஷயம், இந்த ஊர்லே இருக்கிற ஸ்கூலில் தான் நான் அஞ்சாவது வரை படித்தேன். அதோ பார் அந்த எட்வர்டு ஸ்கூலில் தான் படித்தேன்.''

''ஆதி நீங்க படிச்ச ஸ்கூலை நாம போய் பார்க்கலாமா?''

''ஷ்யூர்..'' காரை ஒரு ஓரமாய் நிறுத்தச் சொல்லிவிட்டு, கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தார்கள்.

''இந்த ஊரிலேயே இதுதான் பெரிய ஸ்கூல் நிலா. அடுக்கடுக்காய் அறைகள் ஒவ்வொன்றிலும் மர பெஞ்சு களோடு நாற்காலியும், அது விடுமுறை நாள் என்பதால் காலியாய் இருந்தது. சாயம் போன திரைச் சீலைகளை சுமந்த ஜன்னல்கள்..''

அழகான மண் தரை. அதில் ஒளிந்து மினுக்கும் கூழாங்கற்கள்.

''இதுதான் என் கிளாஸ் ரூம். இதில்தான் 3வது வரையில் படித்தேன். இந்த லாஸ்ட் டெஸ்கில்தான் உட்காருவேன்.'' அவன் தான் அமர்ந்த இடத்தைத் தடவிப் பார்த்தான்.

''ஏன் ஆதி? கடைசி பெஞ்ச் ஸ்டூடண்டா நீங்க? அப்போ படிப்பில் ரொம்பவும் வீக் இல்லையா?''

''நோ.. நோ.. நான்தான் பர்ஸ்ட் ரேங்க். எல்லாரையும் விட நான் கொஞ்சம் வளர்த்தி. அதனால் இந்த இடம்...''

''சரி சரி நம்பிட்டேன்.''

''கிண்டலா?''

''இல்லையே!''

''சரி... அங்கே வாயேன். ப்ரேயர் ஹாலைக் காண்பிக்கிறேன். இங்குதான் அசெம்பளி நடக்கும். நான்தான் பிரேயர் சாங்க் பாடுவேன்.''

''உங்க ஸ்கூல் பசங்க எல்லாருக்குமே கழுதை பொறுமை போல!''

''அப்புறம் ஒருமுறை 4ம் வகுப்பு படிக்கும் போது இங்கேதான் முட்டி போட்டேன்.''

''ஏன்?''

''ஹோம் ஒர்க் செய்யலை. இந்த மதில் சுவர் அப்போ வெல்லாம் இத்தனை உயரம் இருக்காது! பின்னாடிதான் எங்க வீடுங்கிறதால போரடிச்சா எகிறி குதிச்சு ஓடிடுவேன்!''

''அய்யய்யோ..''

''ஐயாதான் ஃபுட்பால் சாம்பியனாக்கும். கிரவுண்ட் பார்த்தியா எவ்வளவு சூப்பரா இருக்குன்னு! அவன் சொன்னாற் போல் கிரவுண்ட் பெரிசாகத்தான் இருந்தது. நெட்கட்டி விளையாடிக் கொண்டிருந்த சிலர் இவர்களை ஒரு முறை நிமிர்ந்து பார்த்தார்கள்.''

''நிலா இங்கே வாயேன். இந்த திண்ணைதான் எனக்கு பிடித்த இடம். இங்கே உட்கார்ந்துதான் படிப்பேன். சாப்பிடுவேன், அரட்டை அடிப்பேன். அப்புறம் இந்த புங்கை மரம். இதுவும் என் பேவரிட் கிளாஸ் இல்லாதபோது இதிலே ஏறிஉட்கார்ந்து இருந்தா சிலுசிலுன்னு வர்ற காத்துலே தனி சுகம்தான்.''

குட்டியாய் கட்டம் போட்ட டவுஸர் சட்டையில் சிறுவனாய் மரத்தின் மேல் ஆதவன் அமர்ந்திருப்பதைப் போல் கற்பனை செய்து பார்த்தாள், கலகலவென்று நகைத்தாள்.



''ஏய் என்னம்மா சிரிக்கிறே? இல்லை உங்களை டிரவுசர் சட்டையில் கற்பனைப் பண்ணிப் பார்த்தேன். சிரிப்பு வந்திட்டது.''

''ஆதி உங்க சின்ன வயசு போட்டோ இருக்கா நான் பார்க்கணுமே!''

''வேண்டாம் கிண்டல் பண்ணுவே!''

''ப்ளீஸ்... எனக்காக..!''

''சின்னம்மாவிடம் கூட ஒண்ணு இருக்கும். வாயேன் வாங்கித் தர்றேன்...'' பேசி சிரித்தபடியே காரில் ஏறினார்கள்.

## 14

**ஊ**ர் போய் சேரும்போது மதியம் ஆகிவிட்டிருந்தது. புழுதி படிந்த தெருக்களும், மேல் சட்டையின்றி துண்டை சுமந்த தோள்களோடு ஆங்காங்கே நின்ற மனிதர்களும், கார் சப்தத்தைக் கேட்டு ஓடிவந்த பொடிசுகளும் முற்றிலும் புதிய சூழலாய் உணர்ந்தாள் நிலா.

ஊர் பெரியவரின் வீடு என்பதால் கண்டுபிடிக்க ஒன்றும் அத்தனை சிரமமாய் இல்லை. அந்த ஊர் பிரசிடெண்ட் தான் சுப்பையா சித்தப்பா.

வாசலில் இறங்கும் போதே கையைப் பிடித்தபடி வரவேற்றார். வேட்டி சட்டையில் பளீரென்று இருந்தார். ''இதப்பாரு ஈஸ்வரி பிள்ளைங்க வந்திட்டாங்க.''

''வாங்க வாங்க'' என்று பின்கட்டு கொசுவச் சேலை இறுகக் கட்டியபடி மஞ்சள் பூசிய முகமாய் வந்தார். அந்த நாற்பது



வயது பெண்மணி. ''அம்மாவையும், அப்பாவையும் எதிர்பார்த்தோம் தம்பி..''

''உடம்புக்கு அத்தனை சுகமில்லை சின்னம்மா...''

''பரவாயில்லைப்பா இனிமே சின்னஞ்சிறுசுகள் நீங்கதானே வரணும். வாங்க கைகால் அலம்புங்க. ஏனுங்க இரண்டு இளநீர் கொண்டு வந்து தரச் சொல்லுங்க..''

முற்றத்தில் போடப்பட்டு இருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தனர். ஐந்து நிமிடங்களில் இளநீர் வர வெயிலுக்கு இதமாய் இருந்தது. நிலாவிற்கு அந்த சூழல் புதிதாய் இருந்தது. அவளைப் பொறுத்தவரையில நகரம் மட்டுமே கண்ணாரக் கண்டது.

''ஏன் சித்தப்பா? எப்படி கோவில் நம்ம பக்கம் தீர்ப்பாச்சு. போன முறை வந்தப்போ கூட கஷ்டமின்னு சொன்னீங்களே?''

''ஆமா தம்பி, இந்தக் கேஸுக்காகவே எத்தனையோ தடவை நடையா நடந்து போனாங்க நம்ம ஆளுங்க எல்லாம். எப்படியோ அந்த பட்டத்தரசியம்மன் துணையால நல்லபடியா நடத்திட்டது. பாருப்பா எல்லாரும் மூக்கிலே விரல் வைச்சிட்டாங்கல்லே?''

''ஏன் சண்டையா?''

''இந்த அம்மன் கோவிலைக் கட்டினது நம்ம ஜாதி ஆளுங்க. ஆனா வேற ஜாதி ஆளுங்களோட இடத்திலே கட்டியதால அவங்க உரிமை கொண்டாடினாங்க. இது கிட்டத்தட்ட 18 வருஷமா நடக்குது. எங்க சைடு பெரியவங்க எத்தனையோ முயற்சியெல்லாம் பண்ணாங்க. நல்லபடியா நமக்கு நடந்திட்டது.''



''ரொம்ப சந்தோஷம் சித்தப்பா. ஆமா வேல்முருகன், எங்கே ஆளையே காணோம்?''

''அவன் எங்கே தம்பி வீடு தங்குறான். படிப்பும் சரியா வரலை. வேளா வேளைக்கு சாப்பிட்டுட்டு ஊர் சுத்தறான். நீயாவது கொஞ்சம் புத்திமதி சொல்லுப்பா...''

''வரட்டும் சித்தப்பா பேசறேன். மதிய நேரம் சூடாய் மிளகு சாம்பார் சுட்ட அப்பளம், கத்தரிக்காய் வதக்கல் என பரிமாறப்பட்டது.''

''தம்பிக்கு கறி சமைச்சுப் போடணும்னுதான் ஆசை, ஆனா காப்பு கட்டியாச்சு. திருவிழாவுக்குப் பிறகு கறியெடுத்து சமைப்போம்..''

''பரவாயில்லை. எங்க இரண்டு பேருக்கு வெஜ் ரொம்ப இஷ்டம்.''

தூய்மையானநீர், தோட்டத்துக் கறிகாய்கள் என உணவு வெகு ருசியாய் இருந்தது. அதைவிட அந்த ஈஸ்வரி அம்மாளின் கவனிப்பும், கள்ளம் கபடமற்ற அவரின் பேச்சும் அன்பும் பார்த்தவுடனேயே கவர்ந்தது.

''கொஞ்ச நேரம் ஓய்வாக அமருங்கள். இல்லேன்னா காலாரத் தோட்டத்துப் பக்கம் நடந்து வாருங்கள். கண்ணுக்கு குளிர்ச்சியாய் இருக்கும்.''

''ஆமா தம்பி நாளைக்குத்தான் கோவில் கும்பாபிஷேகம். அதுக்குத் தேவையான ஏற்பாடுகளையெல்லாம் நான் பண்ணிட்டு வந்திடறேன்.''

''சுப்பையா கிளம்பியதும், தம்பி இந்த வலப்புறமாகவே போனியேங்கன்னா நம்ம வாய்க்கா வரப்பு வரும்.'' எல்லாமே உங்க நிலம்தான். புன்னகைத்தபடியே நடந்தார்கள்.

''ஆதவனோடு உரசியபடி நடந்தது இன்பமாய் இருந்தது. இருபுறமும் கூரைமேய்ந்த வீடுகள், குண்டும் குழியுமாய் தரைகள், வீடுகளிலிருந்து வியப்பாய் இவர்களை சிலர் எட்டிப் பார்த்தனர்.''

''யாருடி இவங்க?''

''பெரிய வீட்டுக்கு வந்து இருக்காளாம்?''

''எம்புட்டு பொருத்தமான ஜோடி பார்த்தியா? ஒவ்வொரு பேச்சுகளிலும் இவள் மனம் இளகி குளிர்ந்தது.''

''நீங்க இங்கே ரொம்ப நாள் இருந்தீங்களா ஆதி?''

''நல்ல கேள்வி கேட்ட போ. நான் பிறந்ததே இங்கேதான் நிலா. ஒரு ஐந்து வருடங்களுக்கு மேல் நினைவு தெரிந்து இந்த தெருக்களில் சுற்றி இருந்திருக்கிறேன்.

சுற்றிலும் பசுமை நிறைந்த தோட்டம், கண்களுக்கு குளிர்ச்சியாய் இருந்தது. வயலில் குனிந்து வேலை செய்து கொண்டிருந்தவர்களை கவனித்தபடியே சென்றனர். சோளக் கதிரு உயர உயர வளர்ந்து இருக்க, வரப்பு வழியே நடந்து கிணறுஒன்றை அடைந்தனர்.

''இதே கிணற்றில் நாங்கள் எத்தனை முறை நீச்சல் அடித்து விளையாடி இருப்போம் தெரியுமா?''

''ஆதி உள்ளே ஒரு பாம்பு..''

''அது தண்ணிப் பாம்பு. விஷம் இல்லை. அங்கே அதிகம் அலையும். பக்கத்திலே சூரியகாந்தி தோட்டம் இருக்கு வா போகலாம்..'' ஒத்தையடிப் பாதையென்பதால், அவன் தோள்களைப் பற்றியபடியே பின்னால் நகர்ந்தாள். அகன்ற முதுகு ஆசை கூட்டியது.



அவன் மேலிருந்து வந்த பெர்பூம் வாசனை மயக்கியது. தோளின் உயரத்திற்கு வளர்ந்து நின்றது சூரியகாந்தி பூக்கள். மஞ்சள் நிற இதழ்களின் நடுவில் குங்கும விதைகள் பிரிந்திருந்த இதழ்கள் கிளர்ச்சியை ஊட்டின.

மலர்ந்த முகமும், சூரியன் திரும்பும் இடமெல்லாம் பார்க்கும் அழகும் கண்ணைப் பறித்தன. சூரிய ஒளி அதன் அழகை இன்னும் மெருகேற்றுவது போல் இருந்தது.

''இந்த பூ, எத்தனை அழகு பார்த்தீங்களா? ஆதி!''

''உன்னை விடவா நிலா..!'' அவன் விழிகள் அவளைத் தைத்தன.

ஏற்கனவே மயங்கிய நிலையில் இருந்த மனது அவனின் பார்வையில் உருகி தரை தாழ்ந்தன.

நிலாவின் கைகளை மென்மையாகப் பற்றினான். நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். தாகமோடு தவித்தவர்கள் ஆரத் தழுவி அவள் கழுத்தில் இதழ் பதித்தான்.

''ஆதி ப்ளீஸ்..! வேண்டாம். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து என் மன உறுதியைக் கலைக்காதீர்கள். ஒருமுறை உங்கள் அணைப்பில் மயங்கிய நிலையில் நான் பட்ட வலியும் வேதனையுமே இன்னமும் தீரலை.''

''மறுபடியும் என்னால முடியாது ஆதி..!'' அவன் அணைப்பில் ஒரு விநாடி இருந்தபடியே, அவள் பேசியதில் விட்டு விட்டான் ஆதவன்.

''ஸாரிம்மா... ஏதோ உணர்வு வேகத்தில்..!'' ஆதவனின் குரல் உண்மையான வருத்தத் தொனி ஒலித்தது. மௌனம் சில நிமிடங்கள் நடனமாடிய பிறகு மேற்கொண்டு நடந்தனர்.



மதிய நேரம் என்பதால், அதுவரையில் வேலை செய்து கொண்டு இருந்தவர்கள் கஞ்சி கலயங்களில் இருந்த உணவை எடுத்து உண்ணத் தொடங்கி இருந்தனர்.

வியர்வை பெருக்கெடுத்தபடி கணவன் வந்தமர, பெண் தன் முந்தானைத் தலைப்பின் மூலம் கணவனின் வியர்வை யைத் துடைத்து தான் கொண்டு வந்த கலயத்தில் இருந்து சாதத்தைப் பிசைந்து அவன் கையில் உருட்டிப் போட, அவன் ஆவலாய் வாங்கி உண்டான். இவர்கள் இருவரின் பார்வையும் அவர்களின் மேலேயே நிலைத்தது.

''என்ன நிலா அப்படிப் பாக்குறே?''

''இல்லே ஆதி, இயந்திரமயமாகி விட்ட நகர வாழ்க்கை யிலே எதையோ பாதி வெந்ததை சமைச்சு தன் குடும்பத்தோடு உட்கார்ந்து நிம்மதியா ஒரு வாய் சாப்பிடக் கூட முடியாம வாழறாங்க. ஆனா இவங்க குடிக்கிறது பழங்கஞ்சியா இருந்தாலும் எத்தனை அன்போடும் பாசத்தோடும், அன்னி யோன்னியமாய் ம்ப்ச்... சிட்டி லைப் வேஸ்ட் ஆதி.''

''ஏதேது நீ சொல்றதைப் பார்த்தா இங்கேயே செட்டில் ஆயிடுவே போலிருக்கே!''

''ஸோ வாட்! இந்தக் காத்தும் அமைதியும் அன்பான மக்களும் எப்படிக் கிடைப்பாங்க?''

''அப்போ இங்கேயும் ஒரு ஹோட்டலை துவங்கிட லாமா?''

''வியாபார புத்தி போகுதா பாரு!''

நன்றாய் சுற்றி விட்டு வீட்டுக்கு வர கருப்பட்டி காபியோடு, அதிரசம், முறுக்கு, அடை போன்ற வகையறாக்கள் வரவேற்றன.



''அச்சச்சோ சாப்பிட்டதே வயிறு புல்லாயிடுச்சு. இதிலே இது வேறயா?''

''என்ன ஆதவா? உன்னை நல்லா கவனிக்க வேண் டாமா?''

''சரி சித்தப்பா நேரமாச்சு. நான் நிலாவோட ஹோட்டலில் போய் தங்கிவிட்டு நாளைக்கு இதேபோல் வந்திடறோம்.''

''என்னது ஹோட்டலா? நம்ம வீடு கடல் மாதிரி இருக்கும்போது, ஹோட்டல் எல்லாம் எதுக்கு தம்பி!''

''அது வந்து..!''

''ஏன்? தம்பி இங்கே தங்கிட உங்களுக்கு இஷ்ட மில்லையா? நம்ம ஊருக்கு வந்திட்டு நீங்க ஓட்டலில் தங்கினா என் மனசு கஷ்டப்படாதா?''

''ஆதவன் இங்கே தங்கிட உங்களுக்கு இஷ்ட மில்லையா?''

ஆதவன் நிலாவைப் பார்த்தான். ''நீ என்ன சொல்றே நிலா?''

''எனக்குக் கூட இங்கே தங்குவதுதான் பிடிக்குது. தனிமையாய் அங்கே இருப்பது விட பெரியவங்களோட இருக்கிறதே ரொம்ப நல்லது.''

''ஆனால் சில வசதிகள் இங்கே குறைவு நீ சிரமப்படுவே?''

''பிறக்கும் போதே யாரும் வசதிகளோடு பிறப்பதில்லையே எல்லாம் பழகிடும்.''

''உன் விருப்பம் சரி நான் காரில் போய் நம்ம உடைகளை எடுத்திட்டு ரூமை வெகேட் பண்ணிட்டு வந்திடறேன்..''

''நானும் வரேனே!''

''இரவு நேரம் திரும்ப லேட்டாகும். நீ போய் ரெஸ்ட் எடு. சின்னம்மா நிறைய கதைகள் சொல்லுவாங்க. கேட்டுக்கிட்டு இரு.'' அவன் கண் சிமிட்டியபடி சொல்ல, இவள் பெரியவர்களிடம் அமர்ந்தாள்.

''அக்கா எல்லா விஷயமும் சொன்னாங்கம்மா. எனக்கும் ரொம்ப சந்தோஷம். தோட்டத்தில் உள்ள பூக்களைப் பறித்து தொடுத்தபடியே பேசத் துவங்கினாள் ஈஸ்வரியம்மா.

''நானும் தூரத்து உறவுதான். ஆனால் எம்மேல அத்தனை அன்பு தாமரை அக்காவிற்கு தம்பியும் அப்படித்தான். வர முடியாட்டியும், அடிக்கடி போன் பண்ணி விசாரிப்பதும் உண்டு.''

''ஆதி தம்பி தங்கமான பையன்மா. ஆனா கொஞ்சம் பிடிவாதம் ஜாஸ்தி. இந்த முறை தனியா வந்த நீங்க அந்த பட்டத்தரசியம்மன் ஆசியால அடுத்த தடவை வரும்போது கணவன் மனைவியாத்தான் வரணும்.''

''சின்ன வயசிலேயே செய்யுற ஒவ்வொரு செயலிலும் ஒரு நேர்த்தி இருக்கும். பெரியவங்க கிட்டே மரியாதை, பணிவு, அன்பு அத்தனை நல்ல குணங்களும் உண்டு. எம் மகன் வேல் முருகனும் இவனும் ஒரே வயசுதான். ஆனா இவன் சரியில லைம்மா. பிள்ளைங்க பெத்தவங்க மனசை குளிர்விக்கணும். ஆனா இந்த பயலால... எல்லாத்துக்கும் ஒரு கொடுப்பினை வேணுமே!''



''தாமரையக்காவுக்கு நல்ல பிள்ளை பிறந்து இருக்கு, எனக்கு..!''

''ஏம்மா உங்க பிள்ளையைப் பற்றி நீங்களே...!''

''குறையா சொல்லலைம்மா.. ஆத்தாமை, நல்லா படிச்சு வரணுமின்னு இவரு எத்தனையோ செலவு செய்தாரு. பாவிப் பயலுக்கு படிப்புதான் வரலைன்னு விட்டா... பெரியவங்க சின்னவங்கன்னு மட்டு மரியாதையில்லாம நடக்கிறான்.''

''நானும் எத்தனையோ முறை சொல்லிட்டேன். திருந்தின பாட்டைக் காணோம். சரி வளர்ந்திட்டானே ஒருவேலை வெட்டிக்குப் போகாம கும்பலைச் சேர்த்திட்டு ஊர் சுத்தறான். நாங்களும் எவ்வளவோ கண்டிச்சுப் பார்த்திட்டோம். இனி கடவுள் விட்ட வழி.''

## 15

பெரியவளின் வெண்மையான மனம் ஏற்படுத்திய பதிலும் வெண்ணிலாவின் மனதைக் குளிர்வித்தாலும், இவையெல்லாம் ஆதவனை நோக்கி அவள் மனம் போவதையே குறித்தது.

ஹோட்டலில் அவனுடன் தனித்து தங்குவதை தவிர்க்கவே அவள் இந்த வீட்டில் தங்க ஒப்புக் கொண்டது. ஆதவனை மனதார ஏற்கவும் முடியாமல், விலக்கவும் முடியாமல் தான் படும் அவஸ்தை தன்னோ டேயே போகட்டும். அவன் கண் முன்னால் எந்த நெருடலும் தெரிந்து விடக் கூடாது என்பதில் தீவிரமாய் இருந்தாள்.

சரியாக உறங்கக் கூட முடியாமல் தனக்காக அவன் சிரமேற் கொள்வதும் இவளுக்குப் பிடிக்கவில்லை. தொடுத்திருந்த



பூவையெடுத்து இளையவளின் தலையில் சூட்டினாள். நித்ய மல்லியின் வாசம் நெஞ்சை நிறைத்தது. அதைவிடவும் நேசம் மிகுந்த ஆதவனின் நினைவும், பெட்டிகளைக் கொண்டு வரச் சென்ற இவன் இன்னமும் திரும்பாத பட்சத்தில் இருள் கவ்விய மொட்டை மாடியில் சிறு திண்ணையில் அமர்ந்து காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தாள் நிலா.

எங்கோ மெலிதாய் பழைய பாடல் ஒன்று கசிந்து வந்து கொண்டு இருந்தது. ''நினைக்கத் தெரிந்த மனமே..!'' யென்று, ஆதவனையேற்க எது தடையாய் இருக்கிறது என்று மனதிற்குள் யோசித்தாள். அவன் நடந்து கொண்ட முறை யெனினும், ஆயிரம் முறை ஆதி மன்னிப்பும் கேட்டு விட்டான். ஆனால் மனம் சமாதானம் அடையவில்லையே, சந்தேகம் எனும் பேயின் பிடியில் சிக்கி தாயின் வாழ்வே அழிந்து போனதை அணுஅணுவாய் கண்டவள் ஆயிற்றே!

ஆதவனுடன் தானும் அப்படியொரு வாழ்வை மேற்கொண்டு இருந்ததால் அந்த ஒவ்வொரு நாளும் தனக்கு நேரப் போகும் கசப்புத் துளிகளை விழுங்கிட மனம் வருமா?

இப்போது இல்லையெனினும், நாளை சந்தர்ப்ப சூழ்நிலை மாறும்போது ஆதவனின் வாயிலிருந்து ஏதேனும் ஒரு சொல் விழுந்தால் அதை தாங்கும் அளவிற்கு வலிமை இந்த மனதிற்கு இல்லையே. அதனால்தான் அவள் யாசித்தும் மறுக்கிறாள்.

வானில் படிந்திருந்த இருள் தற்போது அவள் மனதிற் குள்ளும்! அன்று மதியம் கூட ஆதவன் அவளை நெருங்கிய போது அந்த அணைப்பிற்கு மனம் ஏங்கிப் போய்தானே அவன் மார்பில் சரிந்தாள்.



ஆனால் அந்த இனிமையைத் தொடர்ந்து அனுபவிக்க விடாமல் ஏதோ ஒன்று தடுத்து விட்டதே! கடவுளே இந்த மன உளைச்சலில் இருந்து விலகிட வழியே இல்லையா?

''நீ இங்கேதான் இருக்கியா? நான் தோட்டத்தில் எல்லாம் போய் தேடிட்டு வந்தேன்'' மென் சூழலைக் கிழித்தாற் போல் வெகு முரடானக் குரலைக் கேட்டுத் திரும்பினாள் நிலா.

வேட்டி சட்டை, கழுத்தில் புலி நகம், உடலில் ஆங்காங்கே சில நகைகள், நீளமாய் முறுக்கி விடப்பட்ட மீசை, கிருதா என்று அவனிடம் சற்று அதிகப்படியாகவே கிராமத்தின் நெடி வீசியது.

''நான்தான் வேல்முருகன். சுப்பையாவின் மகன்.''

''வணக்கம்'' என்றாள்.

''அம்மா சொன்னபோது, நான் நம்பலை. ஆனாலும் ரொம்பவும் அழகுதான். நீ இருட்டிலும்..'' அவன் பார்வை பதிந்த இடங்கள் புரிந்தன அவளுக்கு!

அவளருகில் இருந்த சிறு திண்டின் ஓரம் பட்டென்று அமர்ந்தான் வேல்முருகன். இவளோ பதறியபடி எழ அந்த வேகத்தில் உடல் தடுமாற சமாளித்து நின்றாள்.

''நான் கீழே போறேன். ஆதவன் வருவார்.''

''வரட்டுமே! இப்போது என்ன அவசரம். உட்காரு. கொஞ்ச நேரம் பேசுவோம்'' என்று அவள் கைப்பற்றி இழுக்க, அவன் விரல்களின் அழுத்தமும் அசிங்கமான இளிப்பும் இவளை மேலும் பயமுறுத்தியது.

''ப்ளீஸ் வேல்முருகன் முதல்ல கையை விடுங்க'' அவனிடம் இருந்து விலக முற்படும் நேரம் அங்கே ஆதவன்

வந்து நின்றான். அந்தக் காட்சியைக் கண்டவுடன் அவன் முகம் கறுத்து பின் சகஜமானான். நிலாவிற்கும் ஒரு மாதிரியாகத்தான் இருந்தது.

''ட்ரஸ் எல்லாம்..!''

''கொண்டு வந்திட்டேன்'' என்றவன் அவளிடம் இருந்து பார்வையைத் திருப்பி ''நீ எப்போ வந்தே வேல்முருகா?''

''இப்போதான்.. நீ எப்படியிருக்கே?''

''ம்.. நிலா சின்னம்மா தனியா வேலை செய்யறாங்க.. உணவு எடுத்து வைக்க உதவி பண்ணு..''

'அங்கிருந்து நகர கிடைத்த அந்த வாய்ப்பைத் தன்னைக் காத்துக் கொள்ளவே என்றெண்ணி விரைந்தாள் நிலா.

''ஏன் அவளைப் போகச் சொன்னே? என்கிட்டே ரொம்ப நல்லா பேசிட்டிருந்தா?''

''ஏன் என்கிட்டேயெல்லாம் பேச மாட்டியா முருகா?''

''அப்படியெல்லாம் இல்லையே. வா கீழே போகலாம்..''

வேல்முருகா நீ இன்னமும் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வதாக சின்னம்மாவும் சித்தப்பாவும் ரொம்பவும் கவலைப்படறாங்க. அவங்களுக்காகவாவது உன் போக்கை மாற்றிக் கொள்ளக் கூடாதா?''

''என்ன மாற்றிக் கொள்வது? ஆதவா, இவருக்கு நான் ஒரே பிள்ளை. நாலு தலைமுறைக்கு சொத்து இருக்கு. ஏதோ சின்னப் பையன் கொஞ்ச நாளைக்கு ஆசையா செலவழிச்சிட்டுப் போறான்னு விடாம, கிழவன் போகும் போது எல்லாத்தையும் தலையிலே தூக்கி வைச்சிட்டா போகப் போறான்..''



''மரியாதையா பேசு வேல்முருகா. அவர் உன்னைப் பெற்றவர். நீ கெட்டுப் போகக் கூடாதுன்னுதானே திட்டறார்..''

''கெட்டுப் போக நானென்ன பலகாரமா?'' ஏதோ பெரிய ஜோக்கை சொல்லிவிட்டதைப் போல் அவனே சிரித்துக் கொள்ள...

ஆதவனுக்குப் புரிந்து போனது. இது வாழை மட்டை. எத்தனை முயன்றாலும் எரியாது. இவனிடம் பேசி நம் நேரத்தை ஏன் வீணடிக்க வேண்டும் என்ற நினைப்பில் கீழிறங்க இவனைத் தள்ளிக் கொண்டு இறங்கினான் அவன்.

நேராக நிலாவிடம்தான் போய் நிற்பான் என்ற ஊகம் சரியாய் போனது ஆதவனுக்கு!

அடுத்து வந்த மறுநாளிலும் வேல்முருகன் நிலாவின் பின்னாலேயே அட்டை போல் ஒட்டியிருந்தான். சிறு வயது முதலே பழகியிருந்ததால் அவனின் குணத்தை ஆதவன் நன்கு அறிந்திருந்தான். நிலாவையே அவன் சுற்றிச் சுற்றி வந்ததை தவிர்க்க எண்ணிய போதும், நிலாவிடம் ஏதும் பேச முடியவில்லை. தாயுடனோ அல்லது ஆதியுடனோ அவள் அருகிலேயே இருந்ததால், அந்த வாய்ப்பு தட்டிப் போனது.

வேல்முருகனின் குணத்தைப் பற்றி நிலாவிடம் சொல்லி எச்சரிக்கலாம் என்றாலும், அவள் ஏதும் தப்பிதமாக எண்ணிக் கொண்டால், இந்த இயல்பான பேச்சும் கூட இல்லாமல் போய்விடுமே! என்ற பயமும் ஆதவனை அலைக்கழித்தது.

நிலாவிற்கும் அதே நிலைதான். குறும்பான பேச்சும், சிரித்த விழிகளுமாய் வளைய வரும் ஆதியின் முகம் இப்போது பொலிவிழந்து இருக்கிறதே. என்ன காரணமாய் இருக்கும்



என்று யோசித்தாள். ஒருவேளை நேற்று கோவிலில் வேல் முருகன் சற்று அதிகப்படியாய் உரிமை எடுத்துக் கொண்டது பிடிக்கவில்லையோ?

ஆனால் அதில் இவளுடைய தவறு ஏதும் இல்லையே? எத்தனையோ ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும் பின்னாலேயே சுற்றிவரும் அவனைத் தவிர்ப்பது அத்தனை சுலபமாய் இல்லை.

திருவிழாவிற்கு கிளம்பிய இவர்களுடன் சம்பந்தமேயில் லாமல் வேல்முருகனும் ஒட்டிக் கொண்டான். ''சித்தப்பாவும் டேய் நம்ம டிராக்டரில் தான் இடம் இருக்கே. அவங்க வண்டியிலே ஏன் போறே? சின்னஞ்சிறுசுங்க ஒண்ணா வரட்டுமே!''

''நான் மட்டும் என்ன கிழவனா? வயது 27 ஆச்சு. கல்யாணம் பண்ணியிருந்தா இந்நேரம் உன்னை மாதிரி பிள்ளையை பெத்து போட்டு இருப்பேன்.''

''ஆமா நீ கெட்ட கேட்டுக்கு கல்யாணம் இல்லேன்னுதான் அழுவுது.''

''விடுங்க நாளும் கிழமையுமா என்ன வம்பு? ஈஸ்வரி யம்மாள் தடுத்து கணவருடன் கிளம்ப, மூவரும் காரில் புறப்பட்டனர்.

வழி நெடுகிலும் வாய் மூடாமல் தொண தொணத்தபடியே வந்தான் வேல்முருகன். பாதி நேரம் கவனித்தும், பாதி நேரம் கண்களை மூடியபடியும் வந்தாள் நிலா. ஆதவன் வாயே திறக்கவில்லை.

'திருவிழா கோலாகலமாய் நடந்தது. வீதியெங்கிலும் பந்தலிட்டு, பெண்கள் அனைவரும் வரிசையாய் குலவை



யிட்டு, பொங்கல் வைத்தனர். மஞ்சள் சிவப்பு என, நகையும் நட்டுமாய் பின் கொசுவப் புடவையில் பெண்கள் வரிசையாய் பொங்கலிட்டனர்.

''சிறுவர்கள் வாணவேடிக்கை வேட்டு என அவ்விடத் தையே இரண்டு பண்ணியிருக்க கரகாட்டம், ஒயிலாட்டம் போன்ற கிராமிய நடனங்களும் நடைபெற்றன.

பித்தளைப் பானையில், 'மஞ்சளைப் பூசி குங்குமம் வைத்து, நீரை நிரப்பி கல் அடுப்பின் மேல் வைத்தார் ஈஸ்வரி.

''நான் செய்யறேன் அத்தை.''

''வேண்டாம்மா இது கல் அடுப்பு. புகையும் கரியுமா இருக்கும். நீ போய் சாமி கும்பிடு இதோ சீக்கிரம் தயார் ஆயிடும்...'' மஞ்சள் கலர் மைசூர் சில்க் புடவையில் நிலா இருந்தாள்.

கூட்டம் மிகுதி ஆகையால் பிரகார நெருக்கடியால் ஆதவனும், வெண்ணிலாவும் இணக்கமாய் நின்றிருந்தார்கள். சில நேரம் தடுமாறும் போதும் அவனே அவளை அருகில் நிறுத்திக் கொண்டான். கற்பூர தீபராதனையில் அம்மனின் முகம் பொன்னிறமாய் மின்னியது.

தன் மனக் குறைகளையெல்லாம் கூறி மனமுருக வேண்டிக் கொண்டனர். படையலுக்குப் பிறகு முதல் மரியாதை ஆதவனுக்குச் செய்யப்பட்டது. இறைவனின் கழுத்தில் இருந்த பூமாலையை இருவரின் கழுத்தில் போட, இறைவனின் சன்னிதியில் அவ்வாறு நின்றது நிறைய மன மாற்றங்களை உண்டு பண்ணியது நிலாவிற்கு! மாலையும் கழுத்துமாய் அவர்கள் தங்களின் குடிலில் அமர்ந்தனர் மனமும் உடலும் பரவசமாய் இருந்தது.

ஆனால் அந்த அமைதியைக் கெடுக்க வேல்முருகன் அங்கு வந்தான். ''என்ன நிலா இங்கேயே உட்கார்ந்திட்டே வெளியே வாண வேடிக்கையெல்லாம் நடக்குது. வா போய் பார்க்கலாம்.''

''இல்லே நான் வரலே!''

''வேல்முருகா நீ போய் சித்தப்பாவிற்கு ஏதாவது உதவி செய் நிலாவும், நானும் எங்கேயும் போய்விட மாட்டோம்'' ஆதவன் சற்று சுள்ளென்று கூறவும் ஒரு முறைப்போடு வெளியேறினான் வேல்முருகன்.

''நிலா, அமைதியாய் இருந்தாள். அம்மா போன் பண்ணினாங்க நிலா நீ பேசினாயா?''

''ம்... நாம எப்போ கிளம்புவோம் ஆதி.''

''ஏன்? என்னுடன் இருப்பது போரடிக்குதா?''

''அத்தை மாமாவைப் பார்க்கணும் போல இருக்கு.''

ஈஸ்வரியம்மாவின் குரல் கேட்டு வெளியே வந்தனர். ''சாப்பிட வாங்க இரண்டு பேரும்'' அதன் பிறகு அன்றைய இரவும் கோவிலேயே கழிந்தது. அகன்ற கூரையாய் வானம் இருள் போர்வையைப் போர்த்தி ஆங்காங்கே புள்ளிகளாய் நட்சத்திரப் பொட்டு, வானில் ஒற்றையாய் முழுநிலா.

உறக்கம் வரவில்லை. மக்கள் அனைவரும் ஒவ்வொரு குழுவாய் படுத்திருக்க இவள் ஈஸ்வரியம்மாவோடு படுத்திருந்தாள். ஆதவன் இவர்களுக்கு சற்று தள்ளி ஒரு திண்டில் படுத்திருந்தான்.

அவனும் இவளையே பார்த்தபடி, நிலா மென்மையாய்ச் சிரித்தாள்.



விழிகளினாலேயே இருவரும் பேசிக் கொண்டனர்.

காலையில்தான், ஆதவன் அன்று கூறிய சில அசௌகரியங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. காலைக் கடன்களை முடிக்க, குளிக்கவென்று தனியறைகள் இல்லை. பம்பு செட்டில்தான் குளித்தாக வேண்டும்.

மார்பு வரை தூக்கி கட்டிய பாவாடையோடு குளித்துக் கொண்டிருந்த பெண்களும், அவர்களின் இடதுபுறம் துண்டோடு குளிக்கும் ஆண்களும் முன்னால் நடந்து சென்ற ஆதியின் சட்டையைப் பற்றி இழுத்தாள்.

''ஆதி!''

''என்னம்மா?''

''ஆதி.. நானும் இப்படித்தான் குளிக்க வேண்டுமா?'' என்றாள்.

''ஆமாம்... அதைக் காணவே நான் தவமிருக்கிறேன்'' கண்களில் விஷமப் புன்னகையோடு அவன் கூறிட, இவள் ஆதவனின் விலாவில் இடித்தாள்.

அவன் சிரிப்புடன், ''அதனால்தான் ஹோட்டலில் இருந்து கிளம்பி வரலாம் என்றேன். நீதான் பரவாயில்லையென்றாய்..''

''ஆதி... ஆனா இப்படிக் குளித்து எனக்கு பழக்கமில்லையே..''

''பழசையெல்லாம் மறக்கக் கூடாது நிலா..''

''என்னது?'' யோசித்தவள் அவன் குழந்தைப் பருவத்தைப் பற்றி பேசியதை உணர்ந்தவள். கிண்டல் பண்ணாதீங்க ஆதி ப்ளீஸ் என்னால இப்படி குளிக்க முடியாது.''



''டோன்ட் வொர்ரி சித்தப்பாவிடம் சொல்லி அருகே உள்ள வீட்டில் குளிக்க ஏற்பாடு செய்து இருக்கிறேன்.. போ..!''

''தேங்க்யூ.. ஆதி!''

''அவ்வளவுதானா..'' ஏக்கமாய் பார்க்க.

வேறென்ன வேணுமாம். சிணுங்கலோடு கேட்டபடியே நகர்ந்தாள். குளித்து உடை உடுத்தியபடி வெளியே வந்தவளை வேல்முருகன் சூழ்ந்து கொண்டான் தன் பட்டாளங்களோடு!

''இதுதான் நிலா..''

''வானத்திலே இருக்குமே அதா...''

''பூமியிலே இருக்குறதுடா மச்சான் என் முறைப் பொண்ணு..''

''சூப்பர்டா!'' அசிங்கமானதொரு இளிப்போடு பார்த்தவர்களை கடந்து ஆதியின் முகம் தெரிந்ததும் அவர்களைத் தள்ளி விட்டு நகர,

வேல்முருகன் அவள் தோளைப் பற்றி நிறுத்தினான். ''ஏய் என்ன இது கையெடு முதல்ல!''

''ஏன் கண்ணு. நானும் உனக்கு மாமன்தானே. தொடலாம் தப்பேயில்லை.''

நிலா ஆதவனின் குரலில் உடனேயே விடுவித்தான் வேல்முருகன். அர்ச்சகரிடம் கோவில் பணிக்கு பணம் தரணும். நீயும் அருகில் இருந்தால் நலம். வாயென்று அவளைக் கூட்டிப் போக வேல்முருகன் முகம் கன்றியது.

''எவன்டா இவன் உன் ஆளைத் தள்ளிக்கிட்டுப் போறது?''

''என் பெரியம்மா மகன்.''



''அவளை உரிமையா கூட்டிட்டு போறான். நீயும் சும்மா இருக்கே.''

வேல்முருகன் பண்ணையாரின் மகன் என்பதால் அவன் செய்யும் அடாவடித்தனங்களை சுப்பையாவிற்காக ஊர் மக்கள் பொறுத்துக் கொண்டனர். படிப்பும் இல்லை. ஒழுங்காக எந்தவொரு வேலையும் செய்யாமல் நண்பர்கள் என்ற பெயரில் சில கைத்தடிகளோடு அவன் குட்டி ராஜாங்களே நடத்தி வந்தான்.

எந்தவொரு பெண்ணையும் அனுபவித்து வரும் அவனுக்கு அழகாய் பசுவைப் போல் அமைதியாய் இருந்த நிலாவிடமும் எண்ணம் சென்றது. இவளை எப்படியும் அடைந்தே தீர வேண்டுமென்று.

ஆனால் ஆதவன் கூடவே இருப்பதால் இவனால் ஏதும் செய்ய இயலவில்லை. எனவே தகுந்த நேரம் பார்த்து கண் கொத்திப் பாம்பாய் சுற்றினான்.

ஆதவனின் பாராமுகம் நிலாவிற்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியது. மாடியில் தனிமையில் இருந்தவனிடம் வந்து நின்றாள்.

''ஆதி...!''

''ம்..!''

''ஏன் டல்லாயிருக்கீங்க?''

''தொழில் ஞாபகம்..''

''எனக்கு போரடிக்குது ஆதி? எங்கேயாவது வெளியே கூட்டிட்டு போறீங்களா?''

''அவசியம் போகணுமா?''

''எம் மேல கோபமா ஆதி?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லையே. சித்தப்பா பண்ணை வீடு வரை போகணுமின்னு சொன்னார்.''

''அப்படியா? சரி நான் அத்தையிடம் பேசிக் கொண்டு இருக்கிறேன்.''

சொன்னபடியே ஆதவன் எங்கோ கிளம்பிட, ஈஸ்வரியம் மாளும் தோட்டக் கூலி கொடுத்திட்டு வந்திடறேன் என்று கிளம்பிட இவள் மட்டும் தனிமையாய். அதுவே பயமேற் படுத்தும் விதமாக அமைந்து இருந்தது.

நேற்றைய தினம் பரணில் இருந்து ஈஸ்வரியம்மாள் எடுத்துத் தந்த ஆதவனின் குழந்தை பருவ படத்தைப் பார்த்தபடியே நேரத்தைக் கடத்தினாள்.

நீல நிற சட்டையும், அரைக்கால் டவுஸரோடு கருகரு வென்ற கேசமுமாய், நின்றிருந்த ஆதவனைக் கண்டதும் அவளையும் அறியாமல் முறுவல் பூத்தது.

## 16

**வா**ழ்வின் ஒவ்வொரு வாசலும் இன்பத் தைத் தருவதில்லை. கடந்து வந்த பாதையின் கசப்பான நினைவுகளை மறக்கத்தான் முயல்கிறேன். விரக்தியும், வேதனையும் மனதைப் போட்டு வதைக்கின்றன. கண்ணீரின் சுவடுகள் கன்னப் பாதையில்!

கவலைகளின் சுவடுகள் இதயப் பாதையில்! நாட்கள் நகர்ந்தாலும் நினைவின் ஓரம் நெஞ்சைப் பிழிவதைப் போல்!



என் மனமெங்கும் இன்பத்தினை விதைக்கத்தான் உனை நினைத்தேன்.

வெற்றுப் பக்கம் போல் இருந்த மனம் ஒரு முழு நீள ஓவியமாய் உன் முகத்தை நிறைத்திருந்தது. மனதை அழுத்திய சுமைகள் உனைக் கண்டதும் சற்றே மறைந்தது. நான் உனைக் காண துடிக்கிறேன்.

நீ ஒரு புரியாத ஓவியம். நேசிப்பினை வழிகள் சொல்கிறது... வார்த்தைகள் வெறுப்பை கொடுக்கிறது. தவிப்பாய் காத்திருக்கிறாய். அருகில் வந்ததும் அனலாய் திரும்புகிறாய்.

உன் மனதில் எழும் எண்ணங்களை என்னால் உணரவே முடியவில்லை. ஆசையாய், காதலாய் வருடிய விழிகளே! உனக்கு என்ன ஆனது? இனிய கற்பனை இதயத்திற்குள் விதைத்தவனே. மீண்டும் உன் கதவடைப்பினை தாங்கும் சக்தி இல்லை என்னிடம்.

எத்தனை முத்தங்கள் உயிர் பூட்டைத் திறந்து என்னை முழுவதுமாய் எடுத்துக் கொள்ள நீ தந்த பரிசுகள்.

எண்ணற்ற இன்பக் கனவுகளில் நீந்தி திளைத்தவளை ''அம்மா அம்மா'' எனும் கூக்குரலோடு வேல்முருகன் ஓடி வந்தான்.

இவளும் அதே பதற்றம் தொற்றியபடியே ''என்னாச்சு வேல்முருகன்? அத்தை இல்லையே? காட்டுக்கு போறேன் னாங்க..''

''ஆதவன்..!'' அவனுக்கு பேச இயலாமல் மூச்சு வாங்கியது.



''ஆதியா..! அதுக்கு என்ன? எங்கேயோ வெளியே போனார்.''

''அவனைப் பாம்பு கடிச்சிடுச்சு. பண்ணை வீட்டில் இருக்கான். உன்னைப் பார்க்கணுமாம்..!''

நாகம் இவளையேத் தீண்டியதைப் போல் பதறி ஓடினாள் நிலா. வேல்முருகன் பின்னாலேயே, அவனால் என்ன விளைவுகள் தொடரப் போகும் என்பதை உணராமலேயே!

அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. ஆதி... ஆதியென்று மனம் அலறியது. சிந்திக்கும் யோசனையை அறவே இழந்து விட்டாள்.

வேல் முருகனின் திட்டம் நல்லபடியாய் நிறைவேறியதைக் கண்டு மகிழ்ந்தபடியே வண்டியை விரைவாகச் செலுத்தினான். பண்ணை வீட்டின் முன் இறங்கியதும் பரபரவென்று ஓடினாள் நிலா. வீட்டினுள் நுழையவும், முதல் வேலையாய் அறைக் கதவைத் தாளிட்டான் வேல்முருகன்..''

நான்கு புறமும் விழிகளைப் பாய்ச்சியதும் ''ஆதி ஆதியெங்கே?'' கத்தினாள்.

''அவனுக்கென்ன? கல்லு மாதிரி இருக்கான். சீக்கு என்றால் அது எனக்குத்தான், உன்னைப் பார்த்ததில் இருந்து.''

''ஆதியை பாம்பு கடிச்சதுன்னு..''

''பாம்பும் கடிக்கலை, பல்லியும் கடிக்கலை.''

நிலாவிற்கு ஒருவழியாய் நிலைமையின் தீவிரம் புரிய ஆரம்பித்தது. இவன் தன்னிடம் பொய் சொல்லி ஏமாற்றி இருக்கிறான். புடவையை இழுத்துப் போர்த்தியபடி, ''நீங்க



செய்யறது ரொம்பவும் தப்பு வேல்முருகன் இது ஆதிக்கு தெரிஞ்சா!''

''வளவளன்னு பேசாதே கண்ணு. ஆதி ரொம்ப டீசண்ட். நா கொஞ்சம் கல்ஜீதான். எதிலேயும் நிரந்தரமா நினைச்சு திருப்திப்படறவன் நானில்லை. ஒரு தடவை இருந்தா கூடப் போதும். உன் மேல உள்ள ஆசை அடங்கிடும். அப்புறம் நீ ஆதியையே கல்யாணம் பண்ணிக்கோ!''

''என்ன பேசறே நீ. உளறாதே நான் உன் அண்ணி.''

''முறையெல்லாம் எனக்குத் தேவையில்லை வா..''

''இது பாவம் வேல்முருகன்..''

''இத்தனை வருஷமா இழுத்த கேஸ் இப்போ நடந்து ஏன் வெற்றி பெறுவானேன். நீ இங்கே வருவானேன். எல்லாம் கடவுளின் கிருபை வா..!'' அவன் கண்களில் வெறி மின்னியது. இப்போதைக்கு உன்னைக் காப்பாற்றவும் ஆள் இல்லை. நாம் இங்கே இருப்பது ஆதிக்குத் தெரிய வாய்ப்பில்லை. நேரம் கடத்தி பாடம் எடுக்காமல் என் அருகே வா.!''

''எனக்குத் தெரிந்து விட்டது வேல்முருகன். நிலாவை விடாமல் போனால் தம்பி என்று கூட பார்க்க மாட்டேன். சுட்டு விடுவேன்'' என்று செருகி இருந்த துப்பாக்கியை காண்பித்த படி கதவை உடைத்து வந்து இருந்தான் ஆதவன்.

''சுட்டு விடுவாயா?''

''நான் சொன்னால் செய்வேன் என்று உனக்கேத் தெரியும். மறந்து போய் இருந்தால், உன் வலது பக்க நெற்றியில் உள்ள தழும்பைத் தடவிப் பார். நினைவிற்கு வரும்.''

பதினான்கு வயதில் ஒருமுறை ஆதவன் ஊருக்கு வந்திருந்தபோது, ஸ்கூல் வாத்தியார் மகளிடம் தவறாக நடக்க முயன்ற வேல்முருகனை அடித்து துவைத்து எடுத்தான் ஆதவன். அதில் ஏற்பட்ட தழும்புதான் இது.

யாரோ ஒரு பெண்ணிற்காக மண்டையை உடைத்தவன். இவளோ அவனை நேசிப்பவள் சுட்டாலும் சுட்டு விடுவான் என்று அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

அதன் பிறகுதான் நிலாவின் பக்கம் திரும்பினான். பயத்தில் மூர்ச்சையாகிப் போயிருந்த அவள் மயக்கத்தை தெளிவித்து மடியில் படுக்க வைத்து கலைந்த முடிக் கற்றைகளை ஒதுக்கிவிட ஐந்து நிமிட இடைவெளியில் கண் விழித்தாள். ''ஆதீ..!'' பயம் கொண்டு உடல் நடுங்கிப் போய் அவனைக் கட்டி அணைத்தாள்.

''ஒண்ணுமில்லை பயப்படாதே. நான் தான் வந்திட்டேனே..''

''நீங்க...'' அவள் இழுக்கவும்.

ஆதவன் மனமோ முற்றிலும் தவறாய் கணக்கிட்டுக் கொண்டு, ''இல்லை நிலா, உனக்கு சூரிய காந்திப் பூக்கள் என்றால் மிகவும் பிடிக்கும் என்பாயே அதற்காக விதைகளும், அதை வளர்க்கும் பக்குவம் பற்றியும் நானும் பண்ணைத் தோட்ட மேலாளரும் பேசியபடி சென்றோம். பண்ணை வீட்டுக்கு போகும் வழியில் வேல்முருகனோடு நீ..

அழுத விழிகளோடு பார்த்தேன். சத்தியமாய் உனை உளவு பார்க்கும் நோக்கத்தோடு நான் வரவில்லை. என்னவோ ஏதோவென்று பயந்து போய்தான் வந்தேன். அந்த பாவி உன்னை...''



நிலா அவன் ஆவேசமாய் பேசியதையும், அதன் பொருளையும் உணர்ந்தவள் போல் பேச்சிழந்து நிற்க, ''இவனோ தயவு செய்து என்னை நம்பும்மா.. நான் உன்னை சந்தேகித்துப் பின் தொடரவில்லை..''

''வேல்முருகன் அத்தனை நல்லவன் இல்லை. உன்னிடம் முன்பே சொன்னால் நான் உன்னை சந்தேகிக்கிறேன் என்று கோபிப்பாய். நம்பவில்லை என்று வருந்துவாய் அதனால் தான்...'' கெஞ்சுதலும், மன்றாடுதலுமாய் அவன் குரல் குழைந்தோடியது.

நிலாவினால் ஏதும் பேச முடியவில்லை. ஏதோவொன்று தொண்டையை அடைத்தது. சில விஷயங்கள் தெளிவாய்ப் புரிந்தும் போனது. இரண்டு முறையும் என் நலனைக் கருத்தில் கொண்டு அவன் செய்த நன்மையை மறந்து தவறாய்ப் புரிந்து கொண்டு எத்தனை வேதனைப்படுத்தியிருப்பேன்.

உண்மையில் யோசித்தால் அன்பிற்கும், காதலுக்கும் ஆதாரமான நம்பிக்கையை நானல்லவா நசுக்கி விட்டேன். அந்நிலை தோன்றியவுடன் ஆதவனை நிமிர்ந்து பார்க்கவும் தோன்றவில்லை அவளிற்கு. வெட்கமாய் இருந்தது. எனவே ஏதும் பேசாமல் மௌனமாகவே பின் தொடர்ந்தாள்.

அங்கிருந்து வந்தவர்கள், மறுநாள் காலையிலே கிளம்பியும் விட்டார்கள். தடுத்த பெரியோர்களிடம், ''இல்லே சித்தப்பா, அம்மாவுக்கும், அப்பாவுக்கும் ஏற்கனவே உடம்பு சரியில்லை. பாவம் நாங்களும் இல்லாமல் அவங்க கஷ்டப்படுவாங்க. அதுதான் திருவிழா நல்லபடியா முடிந்து விட்டதே. இனி நேரம் கிடைக்கும் சமயம் கட்டாயம் வருகிறோம்..''



ஏற்ற இறக்கத்தோடு தெளிவான குரலில் அவன் பேசிடவும் பெரியவர்களுக்கு மறுக்கத் தோன்றவில்லை. கிளம்பும் தருணம், ஈஸ்வரியம்மாள் பட்டுப் புடவை, வேஷ்டி என சகல மரியாதையோடு குங்குமம் கொடுத்து இளையவர்கள் இருவரும் காலில் விழுந்து வணங்கிவிட்டு பின் பெற்றுக் கொண்டனர்.

''அடுத்த முறை இரண்டு பேரையும் கணவன் மனைவியைப் போல்தான் பார்க்கணும். நாளைக்குத்தான் தேர். அதைத்தான் பார்க்காமப் போறீங்க!'' என்றாள் ஈஸ்வரி அம்மாள்.

ஆதவன் நிலாவின் முகத்தைப் பார்த்தான். எவ்வித உணர்வுகளையும் வெளியே தெரியாமல் இறுகிப் போய் இருந்தது. வரும்போது எத்தனை இலகுவாய் மன நிம்மதியோடு வந்தார்களோ அது அத்தனையும் கானல் நீராய் போய்விட்டது. பாறையாய் இறுகிய முகத்தோடு வந்தாள் நிலா. ஆதவனாக ஏதாவது கேட்டால் மட்டும் ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னாள்.

அவன் நிலைமைதான் இறுதலைக் கொள்ளி எறும்பெனத் தவித்தது. தனிமையில் அவளுக்கு தன்னைப் புரிய வைத்து எப்படியாவது மனம் மாற்றிடலாம் என்ற நம்பிக்கையோடு கிளம்பியவன் ஜாண் ஏறினால் முழம் சறுக்குகிறது என்ற கதையாய் இப்படி உள்ளதும் போய் விட்டதே என குமைந்தான்.

வீட்டினுள் நிலைமையே தலைகீழாய் மாறியிருப்பதை உணராமல் இருவரும் கதவைத் தட்ட திறந்த ஒரு இளம் பெண், ஆளை... ஆனால், அதை மேம்படுத்தும் பொருட்டு நிறைய செலவழிப்பாள் போலும். முகத்தில் மேக்கப்



வழிந்தோடியது. அதே போலவே அவள் உடையும் இளமையை வெளிச்சம் போட்டுக் காட்டியதைப் போல் கண்கள் கூசின. யாரிவள் மேலேறிய புருவத்துடன் ''நீங்க?''

''நான்தான் கீது அத்தான்.'' என்றாள் புதியவள்.

''அத்தானா..!'' இவன் புரியாமல் விழிக்கவும் பின்னால் வந்த நிலாவின் நிலைமையும் அதுவாகவே இருந்தது.

''எல்லாத்தையும் வெளியே நின்று பேசணுமா.. முதல்ல உள்ளே வாங்க...'' அவன் கையைப் பற்றி உள்ளே இழுத்தாள் வெகு உரிமையோடு. ''மம்மி.. ஆன்ட்டி... இங்கே பாருங்களேன் யார் வந்திருக்காங்கன்னு?''

ஏற்கனவே இருந்த மனநிலையில் இழுத்துப் பிடித்த பொறுமையை அதற்கு மேல் கட்டுப்படுத்த முடியாமல் 'அம்மா'வென்று இரைந்தான். அவன் வீட்டிலேயே அவனை விருந்தாளியாய் வரவேற்கும் இந்த அதிகப்பிரசங்கி யார்?

வெளியே வந்த தாமரையம்மாள் மகனையும், நிலாவையும் கண்டதும் புன்னகையோடு ''எப்போம்மா வந்தீங்க? பிரயாணம் எல்லாம் சௌகரியமாய் இருந்ததா? கோவில் விசேஷம், சுப்பையா, ஈஸ்வரி.. எல்லாம்?''

''அதெல்லாம் இருக்கட்டும், அம்மா இவள் யார்?'' கதவைத் திறந்து விட்டு தன்னிடம் உரிமை கொண்டாடியவளை நோக்கி கேட்டான்.

ஆனால் தாயிற்கு பதில் ஹாலில் அமர்ந்திருந்த சுமித்ராவும் வாய் திறந்தாள். ''இவதான் உங்க மாமா பொண்ணு கீதா. நான் உன் அத்தை சுமித்ரா. போக வர இருந்தாத்தானே உறவுகள் எல்லாம் தெரியும்..''

''அதற்குள் தாமரை நீ வாடா தம்பி. நான் சொல்றேன்.'' தாமரை மகனைத் தனியாய் அழைத்துச் சென்றார். ''என்ன விஷயமின்னு தெரியலைடா, ஆதவா. வந்து மூணு நாளாவது இத்தனை நாள் வராதவங்க அத்தை அண்ணின்னு உரிமை கொண்டாடிட்டு வந்து நிக்குறாங்க..''

''இதெல்லாம் நீங்களா இழுத்துக்காதீங்கம்மா! பேசாம போகச் சொல்லிடுங்க! உங்களுக்குத் தயக்கமா இருந்தா நானே சொல்லிடறேன்.''

''அவசரப்படாதேடா, தம்பி இன்னும் இரண்டு நாள் பொறுமையா இரு. விரோதியா இருந்தாலும் வீடு தேடி வந்தவங்களைப் போகச் சொல்லக் கூடாது. நம்ம வீட்டுலே நல்ல காரியம் வச்சிருக்கும்போது எதுக்கு வீண் பிரச்சனை?''

''உங்க இஷ்டம் அம்மா... ஆனா எனக்குச் சுத்தமாப் பிடிக்கலை. பசிக்குது ஏதாவது டிபன் ரெடி பண்ணுங்க, நான் குளிச்சிட்டு வந்திடறேன்..'' அவன் நகர தாமரையம்மாள், 'அச்சச்சோ, இவர்களிடம் நிலாவைத் தனியா விட்டுட்டு வந்திட்டேனே' என்று அங்கு விரைந்தார். அதற்கு ஏற்றாற் போல் தாயும், மகளும் நிலாவை வறுத்து எடுத்துக் கொண்டிருந்தனர்.

''நீதான் அந்த மூத்த தாரத்துப் பொண்ணா? உங்கப்பா கதைகதையாய் சொல்லியிருக்கார் உங்கம்மாவைப் பத்தி! அவளுக்கு மரியாதையா நடக்கவே தெரியாது சுமின்னு!''

''ஆமாம்மா இவ ஏன் இங்கே வந்தா? எனக்கு புருஷன் வேண்டான்னு விட்டுட்டு போனவதானே இவளோட அம்மா இப்போ நீ மட்டும் வந்து ஏன் ஒட்டிக்கிட்டே பணம் இருக்குன்னுதானே!''



''இங்கே பாருங்க, என்னைப் பத்தியும், எங்கம்மாவைப் பற்றியும் உங்களுக்கு என்ன தெரியும்? வயசிலே பெரிய வங்களா இருக்கீங்க. பேசும் போது யோசிச்சுப் பேசுங்க.''

''எத்தனை திமிறா பேசறா? பார்த்தியாம்மா? அவ்வளவு திமிர்!''

''தாயைப் போல பிள்ளை!''

''உண்மைதான். நீங்க இத்தனை பேசியும் நான் எதிர்த்து ஒரு தரக்குறைவா பேசாத போதே நீங்க தெரிஞ்சிக்கணும். எங்கம்மாவின் வளர்ப்பு எப்படின்னு!''

''ஏய் என்ன மம்மியை எதிர்த்துப் பேசறே? ஒண்ணு மில்லாதவளுக்கு இத்தனை திமிரா?''

அவள் பதில் பேசும் முன், தாமரை அம்மாள் வந்துவிட, ''இந்தாங்க அத்தை பிரசாதம்'' என்று தந்தவளை,

''நீயே போய் உன் கையால பூஜையறையில் வைத்திடும்மா.. வா..'' கூடவே அவரும் சென்று விட்டார்.

''என்ன மம்மி இவளுக்கு சுரணையே இல்லையா? இத்தனை பேசறோம் குறைந்த பட்சம் சண்டையாவது போட்டு இருக்கணும். ஆனா எருமை மாட்டு மேல மழை பெய்தா மாதிரி அவ பாட்டுக்கு போறாளே? இவளைக் கிளப்பறது ரொம்பவும் கஷ்டம் போலயிருக்கே?''

''இப்பத்தானே நம்ம கண்ணுலே மாட்டி இருக்கா. பார்த்துக்கலாம்'' சுமித்ரா முடிவோடு கூறினாள்.

''அத்தே?''

''இவங்கதான் அப்பாவோட...!''



''ஆமாம்மா.. நீ அவகிட்டே ரொம்பவும் பேச்சு கொடுக்காதே..''

''நான் ஒண்ணு சொன்னா நீங்க என்னை தவறா நினைக்கக் கூடாது...''

''சொல்லும்மா!''

''வந்தவங்க, தேவையில்லாம என்கிட்டே வம்புக்கு வர்றா மாதிரி தெரியுது. அம்மாவைப் பத்தி வாய்க்கு வந்தபடி பேசறாங்க.''

''சுமித்ராவோட குணமே அப்படித்தாம்மா! யார் மனசு புண்பட்டாலும் அவ கவலைப்படவே மாட்டா..''

'ஏற்கனவே இருக்கிற குழப்பத்திலே மனசு நிம்மதி இல்லாமத் தவிக்கிறேன். மேற்கொண்டு இவங்களுடைய ஜாடை மாடையான பேச்சைக் கேட்க வேண்டாம்.'

'சுமித்ராவோட பேச்சு அப்படித்தான் சுளீரென்று இருக்கும். துஷ்டனைக் கண்டால் தூர விலகிடுன்னு சொல்ற மாதிரி, நீ சொல்றதும் ஒரு வகையில் சரிதான். ஆனா ஆதவன் என்ன சொல்வான்னு தெரியலையே!'

''அவர்கிட்டே நான் சொல்லிக்கிறேன்.''

''நீ சொன்னா சரியாத்தான் இருக்கும்.''

''அம்மா'' ஆதவன் குரல் கேட்டு இரண்டு பெண்களும் வெளியே வர டைனிங் டேபிளில் அமர்ந்து இருந்த ஆதவனுக்கு பரிமாறப் போனவளைத் தடுத்து தாயை அழைத்து வந்திருக்கிறான் மகன்.

''உனக்கு எதுக்கு கீதா இந்த வேலையெல்லாம்... ஆதவனுக்கு யார் பரிமாறினாலும் பிடிக்காது.''



''அதென்ன அண்ணி இப்படி சொல்லிட்டீங்க. இன்னும் எத்தனை நாளைக்கு நீங்களே பரிமாறுவீங்க? அத்தானுக்கு செய்ய வேண்டியவ கீதா.'' சுமித்ராவின் பேச்சில் ஏதோ ஒரு பொடி இருந்தது. ஆனால் அவரோ அதை கவனியாமல் ''நீயும் உட்காரு நிலா!''

''இல்லேத்தே! முதல்ல நீங்கதான் சாப்பிடணும். நீங்க வேளா வேளைக்கு சரிவரச் சாப்பிடறதில்லைன்னு லீலாம்மா சொன்னாங்க'' அத்தையின் தோளைப் பிடித்து அமர வைத்து ஹாட் பேக்கில் கையை வைக்கப் போக,

''என்ன கீதாயிது? அத்தை சாப்பிடலையாமே? நீ கவனிக்கலையா போ..'' மகளைத் தள்ளிவிட அவளோ ஒரு படி மேலேயே போய் நிலாவை ஒதுக்கி தானே பரிமாறினாள். இவளுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

''நிலா..!'' என்று ஆதவன் அழைத்தபோதும்.

''யார் பரிமாறினால் என்ன சாப்பிடுவதுதானே முக்கியம். உடல் கசகசக்கிறது. நான் குளித்துவிட்டு வருகிறேன்'' என்று அறைக்குள் ஓடிவிட்டாள்.

ஆதவனின் பார்வை அவளைத் தொடர்வதைப் பொறுக்க முடியாமல் கீதா, மேலும் இரண்டு தோசைகளைத் தட்டி விடுவதும், இழைவதுமாய் இருக்க, ஒருவித வெறுப்போடு இரண்டு வில்லைகளை உண்டுவிட்டு எழுந்து விட்டான் ஆதவன். தாமரை அம்மாளிற்குத்தான் சங்கடமாகப் போய் விட்டது. பிள்ளையால் ஒருவாய் நிம்மதியாய் சாப்பிடக் கூட முடியாமல் போய்விட்டதேயென்று!

17

மூன்று நான்கு நாட்களாக கவனிக்காமல் வேலை அதிகமாய் இருந்தது. வருண், லாவண்யாவின் வேலைப் பளுவில் எந்த குறையும் சொல்ல முடியவில்லை. ஆயினும், ஒரு நல்ல நிர்வாகியின் பணி பிறரிடம் வேலையை ஒப்புவிப்பது இல்லையே. ஹோட்டல், சைட் என இரண்டு இடத்திலும் கண்காணித்து விட்டு வருவதற்கு இரவு நேரம் தாண்டித்தான் போய்விட்டது. நிலாவும் வரவில்லை. ஒருமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, உடம்பு நலமில்லை என்று மேற்கொண்டு பேச்சை வளர்க்காமல் வைத்துவிட்டாள்.

தீம் பார்க்கின் வேலையும் முற்றிலும் முடிந்து விட்டது. நிலா சொன்னதைப் போல அந்த அழகான பூங்கா, வேலையும் ரம்மியமாய் முடிந்து போனது. இன்னும் பவுண்டேஷனும், லைட்டிங் ஒர்க்ஸும் முடிந்தால், சுற்றிலும் மண்புதர்கள். நடுவில் சிறிய குளம், அதில் அல்லி மலர்களும், தாமரை மலர்களும் வைக்கப்பட்டு இருந்தது.

அழகிற்கென செயற்கை மரங்கள் அதை சுற்றி விளக்கு சரங்கள் என கிட்டத்தட்ட இந்திர லோகமாய் காட்சி அளித்தது அவ்விடம்.

எல்லாம் நல்ல படியாய் நடந்திருந்தால் இதே கனவுப் பூங்காவில் இந்த குளக்கரையில் நிலாவின் மடியில் தலைவைத்து படுத்துக் கொண்டு நிறைய பேச வேண்டும். அவனின் எண்ணங்கள் எல்லாம் நிறைவேறத்தான் எத்தனை தடைக் கற்கள்.

அதிலும் இப்போது புதிய தொல்லை அத்தை மகள் வடிவில் வந்திருக்கும் கீதா. நிலாவை எத்தனை கஷ்டப்



படுத்தி விட்டாள். ஏற்கனவே மனம் நொந்து போய் இருக்கும் அவளை போய்.. நேரம் பார்த்தான்.

என்னவோ நிலாவை உடனே பார்த்தே தீர வேண்டும் போல் இருந்தது. காரை கிளப்பி வீட்டுக்கு வந்தான். நிலாவின் அறையில் இரவு விளக்கு ஒளிர்ந்திருக்க, உடம்புக்கு வேறு முடியவில்லை என்றாளே, யோசனையோடு அறை வாசலில் நின்றான். திறந்திருந்த கதவுக்கு அப்பால் அரையிருட்டில் போர்வை போர்த்தியபடி படுத்திருந்தவளிடம், நெருங்கி னான்.

''என்ன நிலா அதுக்குள்ளே தூங்கிட்டியா?'' பதிலுக்கு எந்தக் குரலும் வராமலும் போக, மெல்ல அருகே அமர்ந்தவன். அவள் தோளைத் தொட்டான். அடுத்த விநாடி பட்டென்று முன்புறமாய் இழுக்கப்பட்டு அவளின் மேல் புறமாய் சரிந்தபோதுதான் அது நிலா இல்லையென்று உறைத்தது.

''ஏய்! விடு என்னை!'' திமிறினான்.

''முடியவே முடியாது!''

''கீதா விடு இதென்ன அநியாயம். அசிங்கமாய் உனக்கு வெட்கமா இல்லை.''

''என் அத்தானை நான் அணைப்பது அசிங்கமா. கல்யாணத்திற்கு பிறகு இது நடப்பதுதானே?''

''அவளைப் பிடித்து தள்ளிவிட்டு கல்யாணமா யாருக்கு?''

''நமக்குத்தான் ஆதவ்... உங்களை முதன் முதலில் தாஜில் ஒரு மீட்டிங்கில் சந்தித்தபோது நான் என்னை..''



''ஸாரி கீதா.. நான் நிலாவை விரும்புகிறேன்..''

''அவளையா? ஆதவ்!'' குழைவாய் கொஞ்சலுடன், ''நிலாவை விட நான் எந்த விதத்தில் குறைந்து விட்டேன் ஆதவ்.'' டூபீஸ் நைட்டியின் மேல் கோட்டை கழற்றியபடி அவள் கேட்க,

''ச்சீ..!'' என்று அருவெறுப்போடு விலகினான் ஆதவன். ஆனால், அவளோ, ''ஆதவ்'' என்று பாய்ந்து இறுக்கமாய் அணைத்தாள் கீதா.

''பூ.. இடியட்.. ஒரு முறை சொன்னால் புரியாதா உனக்கு..''

''ஸாரி டார்லிங் இன்னும் முத்தம் தரவில்லையென்ற கோபமா?''

அதற்குள் ஆதவனைப் பார்க்க வந்த நிலா இவர்களின் நெருக்கத்தைக் கண்டவுடன், கற்சிலையாய் நின்றாள். சம்மட்டியால் அறைந்தது போல் இருந்தது.

திகைத்து நிற்கும் போது கீதாவின் பார்வையில் நிலா படவும், ''ஏ ஸ்டுபிட்.. உனக்கு அறிவே கிடையாதா? கல்யாணமாகப் போறவங்க கொஞ்சம் அப்படியிப்படின்னு இருப்பாங்கன்னு தெரிய வேண்டாம்.''

''ஏய்..''

''யூ டோண்ட் வொர்ரி டியர். இவளை நானே அவாய்ட் பண்ணிடறேன்.''

அதற்கு மேல் அங்கே நிற்கப் பிடிக்காமல் ஓடியே விட்டாள் நிலா.



''நீயும் ஒரு பெண்ணா?''

''இந்நேரம் நீ ஆம்பிளையா இருந்திருந்தா உனக்குப் புரிந்திருக்கும்.''

''ச்சீ...'' வெறுப்போடு வெளியேறினான். கீதா தன் திட்டத்தின் முதல்படி வெற்றியடைந்ததை எண்ணி மகிழ்ந்தாள்.

நிலாவைப் போய்ப் பார்க்கவும் மனம் வரவில்லை. எந்த முகத்தோடு அவளைப் போய் பார்ப்பான். எப்படி தன் நிலைமையைப் புரிய வைப்பான். தன் மேல் எந்த தவறும் இல்லை என்று! 'ஆனால் இது நிலாவின் அறைதானே? இவளெப்படி இங்கே? அப்படியென்றால் நிலா எங்கே? நிலைமை சீராகும் என்று பார்த்தால், மேலும் மேலும் இடியாப்பச் சிக்கலாய் விரிந்து கொண்டே போகிறதே?'

'இதை எப்படிச் சமாளிக்கப் போகிறேன். நிலா என் கண்ணம்மா உன் மனம் எத்தனை வேதனைப்பட்டு இருக்கும். கடவுளே!' ஆதவன் தவிப்போடு இருக்கையில்.

அங்கே...

நிலாவோ அழுகையில் கரைந்தே போய்விடுவாள் போல இருந்தது. ஆதவனின் அணைப்பில் வேறொரு பெண்ணைக் கண்டதும், அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. அந்தக் கணமே இறந்து விடலாம் போல் இருந்தது.

இத்தனை நாட்களாக மூடி மூடி வைத்த காதல் இன்று வெளியேறி விட்டது.

நான் உங்களைப் புரிந்து கொண்டு உங்களுடன் சேர முயலும் நேரம் இப்படி மனம் மாறி விட்டீர்களே ஆதி? என்று

கதற வேண்டும் போல் இருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அறைக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்க, கதவைத் திறந்தவளைத் தள்ளிக் கொண்டு கீதாவும், சுமித்ராவும் உள்ளே வந்தனர்.

''ஏண்டி! உனக்கெல்லாம் அறிவே கிடையாதா? எம்பொண்ணும், மாப்பிள்ளையும் தனியா இருக்கும்போது போனீயாமே!''

''ஆமா மம்மி எனக்கும், அவருக்கும் ரொம்பவே தர்ம சங்கடமாய்ப் போச்சு. இதுதான் இவ அம்மா வளர்க்கிற லட்சணம் போல.''

இத்தனை நாள் அடக்கி வைத்த கோபமும், ஆதங்கமும் வெளிப்பட்டது. ''அம்மாவைப் பற்றி பேச உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கு?''

''அவ சரியில்லைன்னுதானே உன் அப்பன் என்கிட்டே வந்தான். நல்லவளா இருந்தா புருஷன் கூட வாழ்ந்து இருப்பாளே, எங்கேயோ பிறந்து எப்படியோ வளர்ந்தவ பெரிய இடமா பார்த்து உறவைச் சொல்லி வளைச்சுப் போடலான்னு முடிவா..!''

''உங்க அசிங்கமான பேச்சை நிறுத்துங்க. நான் இங்கே யாரையும் வளைச்சிப் போட வரலை..''

''உண்மையைச் சொன்னா உடம்பு எரியத்தானே செய்யும்? அத்தனை ரோஷம் உள்ளவ இந்த வீட்டை விட்டு உடனே கிளம்ப வேண்டியதுதானே!''

''நானா? நான் ஏன் போகணும்? அதை சொல்ல நீங்க யாரு?''



''ஏனா? ஆதவனும், கீதுவும் இருந்த நிலைமையைப் பார்த்தாய் அல்லவா? மறக்கக் கூடிய நிலையா அது? அதையெண்ணித்தானே இவள் அரற்றுகிறாள்.''

''கூடிய விரைவில் திருமணம் பற்றிப் பேசப் போகிறோம். ஆனால் முடிவில் உன்னைச் சந்தித்ததில் அவர் சற்று தடுமாறித்தான் போய் இருக்கிறார். பிறகு அவரின் நாட்டம் அதுவும் வந்த இரண்டே நாளில் என் மேல் தாவி உள்ளது என்றால் புரிந்து தொலையேன்.''

''நல்லது உனக்கும் ஆதிக்கும் திருமணம் நடந்தால் எனக்கென்ன? பரவாயில்லை.. நான் அத்தையுடன்..!''

''நிறுத்துடி! யதார்த்தமா யோசி நிலா. சீர்சனத்தியும், குடும்ப கௌரவமா வர்ற ஒரு மருமகளை தாமரை விரும்புவாளா இல்லை. கேட்பாரற்ற அநாதையான உன்னை அவள் ஏற்க முன்வருவாளா? ஏதோ வந்ததற்கு உறவுன்னு இத்தனை நாள் இருந்து விதவிதமா சாப்பிட்டே? கார் பங்களான்னு வசதியெல்லாம் அனுபவிச்சிட்டே..!

ஏற்கனவே உனக்குத் தெரியாம வாக்கு கொடுத்திட்டோமேன்னு தயங்குறா அண்ணி. இன்னமும் கண் முன்னாடியே இருந்து அவளை கஷ்டப்படுத்தப் போறியா?''

விக்கித்து நின்றாள் நிலா.

''வேண்டுமானால் கொஞ்சம் பணம் தருகிறோம்... வாங்கிக் கொண்டு கூடிய சீக்கிரம் கிளம்புற வழியைப் பார்!''

''ஆமாம், நந்தியாய் இருந்து என் வாழ்வில் குறுக்கே வராதே. நல்ல மாட்டிற்கு ஒரு சூடு.. புரியும் என்று நினைக்கிறேன்..''



''விடு கீது மறுத்து நமக்குப் பிரச்சனை பண்ணினால் இவளையெப்படி வழிக்கு கொண்டு வர்றதுன்னு எனக்குத் தெரியும். சுமித்ரா ஜாக்கிரதை'' என்று விரலை நீட்டி எச்சரித்தபடியே சென்றாள்.

நிற்க நிழலும், அன்பான உறவுகளும், இவையெல்லாவற்றிற்கும் மேலாக இழந்து போன காதலும் கிடைத்தது என்று மகிழ்ந்தாளே அந்த எண்ணம் சிதைந்தே போய் விட்டதே. ஆதி கண்களில் காதலோடு நீங்க யாசித்த நேரம் எல்லாம் உங்களை உதறித் தள்ளியதால் எனக்கு இந்த தண்டனையா?

வேல்முருகனிடம் இருந்து என்னைக் காப்பற்றிய போதே நான் உங்களை சேர்ந்து விடத் தயாராய் இருந்தேனே. அதையேன் உணராமல் போனீர்கள்.

இவள் மனம் இனி மாறவே மாறாது என்று முடிவு செய்து விட்டீர்களா? ஏதுமில்லை யென்னிடம். அந்தஸ்து, குடும்பம், பணம் என்று எனில் என்னை ஏற்க உங்களுக்கு எப்படி மனம் வரும். இன்னும் இருந்து உங்களை இன்னொருத்திக்கு தாரை வார்க்க நான் தயாராக இல்லை.

வேண்டாம் ஆதி. இதுவரையில் எப்படி உங்கள் நினைவுகளோடு வாழ்ந்தேனோ, அதே நிலை எனக்குப் போதும். நான் போகிறேன். உங்கள் காதலை எடுத்துக் கொண்டு, தேவையான சில பொருட்களோடு, ஈஸ்வரியம் மாளிடம் இருந்து பெற்று வந்த 'சிறு வயது ஆதியின் புகைப்படத்தையும் எடுத்துக் கொண்டு அழுதபடியே ஓடினாள், முடிவுக்கு வந்தவளின் கால்கள் இலக்கின்றிச் சென்றன.



## 18

''ஏம்மா! இப்படி நேரடியாகவே போய் அவளை கிளப்பிட்டு வந்து இருக்கோமே! போவாளா. முதலில் நாம் சொன்னதை அவள் நம்பியிருப்பாளா?''

''ஏன் நம்பாமல்?''

''காலையில் நேராய் வந்து ஆதவ், அத்தையிடம் கேட்டு விட்டால்..''

''அதெல்லாம் மாட்டாள். வந்து அசிங்கப்படும் தைரியம் அவளுக்கு இல்லை. நீயும், அவனும் ஒரே அறையில் இருந்ததைப் பார்த்தே பொறி கலங்கிப் போய் இருக்கிறாள்! போதாக் குறைக்கு நான் வேற குழப்பி விட்டு வந்து இருக்கேன். கண்டிப்பா யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் போயிடுவா பாரு! நீ ஆதவனை உன் வழிக்கு கொண்டுவா!''

''மகளே, உன் சமத்து'' சுமித்ரா சிரித்தபடியே, அடுத்து தாமரையிடம் எப்படி இந்தப் பேச்சை ஆரம்பிப்பது என்று யோசனையோடு உறங்கச் சென்றாள்.

கணவர் இருக்கும் போதும் சரி, இறந்த பிறகும் சரி, உறவுகளை ஒரு பொருட்டாகவே சுமித்ரா மதித்தது இல்லை. தமையன் இருந்த போதும் என்றாவது ஒருநாள் தாமரை அங்கு சென்றால் பெயருக்கு வா என்பதோடு சரி, மற்றபடி வேறு எந்த பேச்சும் வைத்துக் கொள்ள மாட்டாள்.

அப்போதுதான் ஏதோ பெரிய வேலை இருப்பவளைப் போல் நடந்து கொள்வாள். கணவரை கைக்குள் அடக்கி வைத்து இருந்தாள். கணவரை சம்பாதிக்கும் இயந்திரமாகத்

தான் அவள் பயன்படுத்தி வந்தாள். அவர் இறந்த பிறகு பிஸினஸும் படுத்தது.

கையில் இருந்த பணமும் அவர்களின் ஆடம்பரத்தில் கரைய ஆரம்பித்தது. சில்லரைக் கடனில் துவங்கி மறுபடியும் இவர்களின் ஆடம்பரத் தேவைகளுக்கு என அதிகமாய் பணம் தேவைப்பட கடனும் அதிகமாகியது. சொத்துக்கள் பாதிக்கு மேல் அடமானத்தில் மூழ்கிப் போக, இருப்பதை யாவது காப்பாற்றிக் கொள்வதற்கு ஒரு வழியை உத்தேசிக்க முடிவு செய்தாள்.

தன் வழி வீட்டு உறவுகள் எல்லாம் இவளை விடவும் விடாக்கண்டர்களாய் இருந்ததில் வேறு வழியின்றி இறுதியில் தன் அண்ணியைத் தேடிச் செல்ல முடிவு செய்தாள். மகளிடமும் அதையே கூறிட,

''என்ன மம்மி அவன் எப்படி இருப்பானோ? எனக்கு பிடிக்கணுமே..''

''அவனுக்கு என்னடி தொழில்ல புலி. எல்லாமே அவன் கண்ட்ரோல். பெரிய புளியங் கொம்பு.''

நிலைமை மீறிவிட்டது. இனி தாமரையிடமே போகலாம் என்ற போதும் கூட, ஒத்துவராத கீதா ஆதவனின் புகைப் படத்தைக் கண்டதும் மனம் மாறி சம்மதித்தாள்.

''பார்த்தியா போட்டோவைக் கண்டதும் மயங்கிட்டே..''

''நீங்க சொன்னா நம்ப மாட்டீங்க மம்மி. நான் இவனைத்தான் தேடிக்கிட்டு இருக்கேன்..''



''என்னடி சொல்றே?''

''போன முறை ரவியோட பர்த்டே பார்ட்டிக்கு போனப்ப தாஜில் இவனைப் பார்த்தேன். அப்போதிலிருந்து தேடுகிறேன். மீட் பண்ண முயற்சி பண்ணி ஏமாந்தும் போனேன். நீ கிரேட் மம்மி..''

கீதாவிற்கு பெண் நண்பர்களை விடவும், ஆண் நண்பர்கள் தான் அதிகம்.

டிஸ்கோதே, கிளப், ஓட்டல் என்று அலைவதுதான் அவள் வழக்கம். இவள் பார்வைக்காக ஏங்கும் ஆண்களை மயக்கி விடுவதே பொழுதுபோக்கு. அப்படி ஒருவன்தான் ரவி. அவனுடைய பிறந்த நாள் விழாவிற்கு சென்றபோதுதான் ஆதவனைக் கண்டாள்.

அவனின் கம்பீரமும், அழகும் ஈர்த்தன. ரவி வேறு அவனைப் பற்றி ஓவராகப் புகழ்ந்தது வேறு மயக்கத்தை ஏற்படுத்திட இவளாய்ப் போய் பேச முயன்ற போதும், வெறும் ஹலோவோடு நிறுத்திக் கொண்டான்.

அதுவே இவளுக்கு பெருத்த அவமானமாய் போய் விட்டது. தோழி அனிதாவும், ''அவன் எந்தப் பெண்ணிடமும் பேச மாட்டான். சரியான சாமியார்..'' என்றாள்.

''இந்த கீதாவிற்கு அடிமை ஆகாத ஆண்களே இல்லையடி!''

''முயன்றால் மண்ணைக் கவ்வுவது உறுதி. ஆல் தி பெஸ்ட் மை டியர் பிரண்ட்..''



''ஏம்மா.. இத்தனை நாள் பேசாமல் கூட இருந்திருக் கிறோம். திடீரென்று போய் நின்னால்..''

''நீயேண்டி கவலைப்படறே. தாமரை ரொம்பவும் இளகின சுபாவம். கண்லே தண்ணியோட நின்னா மாறிடுவா. என்ன அந்த ஆளுதான் பிரச்சனை பண்ணுவார். ஆதவனை வளைச்சுப் போட்டுட்டா சமாளிச்சிடலாம். அதற்கு மேல் காலம் தாழ்த்தாமல் கிளம்பியும் விட்டனர்.

''இதோ பார் கீதா, இனிமே இந்த லோக்கல் காண்டாக்ட்ஸ் எல்லாம் வைக்காதே!''

''ஆதவன் பெரிய இடம். நாம் நினைத்தது நடக்கும் வரையில் பொறுமை..''

ஏராளமான மனக்கோட்டைகளோடு இங்கே வந்து பார்த்தால், நிலைமை வேறாய் இருந்தது. எதிர்பார்த்ததை விடவும் ஆதவன் வசதியாய் இருந்தாலும், மூத்த தாரத்து பொண்ணான நிலாவும், அவனும் ஒன்றாக வந்து இறங்கியதைப் பார்த்ததுமே வயிற்றில் அமிலம் சுரந்தது போல் இருந்தது.

தான் வந்த நோக்கத்தை தாமரையிடம் ஜாடை மாடையாய் சொல்லிய போதும், அவரோ பிடி கொடுக்காமல் பேசியதோடு, நிலாவின் புராணமே பாடியது வேறு எரிச்சலைக் கிளப்பியது.

எப்படியோ ஒரு சின்ன நூலளவு இடைவெளி பெரிசாகி விட்டது. இனிமேல், நிலாவை ஒட்டவே விடக் கூடாது



நாளைக்கே இரண்டில் ஒன்று கேட்டுவிட வேண்டியதுதான். கனவு கண்டபடியே உறங்கிப் போனாள் சுமித்ரா.

உறக்கம் தொலைத்த விழிகளும், உறங்கிக் களைத்த விழிகளும் ஆவலாய் விடியலை எதிர்நோக்கித் தயார் ஆயின.

அத்தனை அதிகாலையில் வருணிடம் இருந்து அழைப்பு வரும் என்று ஆதவன் எதிர்பார்க்கவில்லை.

''சொல்லுங்க வருண் சைட்டில் ஏதும் பிரச்சனையா?''

''நத்திங் ஸார். மேடமை அதிகாலையிலே கையில் பெட்டியோட பஸ் ஸ்டாண்டில் பார்த்தேன். ரொம்பவும் டிஸ்டர்ப்டா இருந்தாங்க. என்ன ஏதுன்னு விசாரிச்சேன். நான் யார் கூடவும் பேசத் தயாரில்லை வருண்.. எப்பவும் போல் நான் என்னை அநாதையா உணர்றேன்..''

''மேடம்..''

''ப்ளீஸ் வருண். என்னைப் பற்றி யாருக்கும் எந்த தகவலும் தர வேண்டாமின்னு அழுதிட்டாங்க..''

''வேறென்ன சொன்னா?''

''உங்க வீட்டுக்கு வந்த கீதாவுக்கும், கல்யாணம் அது இதுன்னு உளர்றாங்க. எனக்கு என்னவோ மேடம் ரொம்பவும் டிஸ்டர்ப்டா இருக்காங்கன்னு தோணுது. பேசிகிட்டே இருக்கும் போதே மயக்கமாயிட்டாங்க..''

''அப்புறம்?''

''டோண்ட் வொர்ரி ஸார். லாவண்யாவோட வீட்டிலே தங்க வைச்சிருக்கேன். ஹெவி டெம்பரேச்சர் வேற. உங்க பேரையே சொல்லிட்டு புலம்பறாங்க.. நீங்க வந்தா ரொம்ப பேவரா இருக்கும்..''

''இன்னும் அரை மணி நேரத்தில் அங்கிருப்பேன். தொலைபேசி இணைப்பைத் துண்டித்து விட்டு தவிப்போடு படியிறங்கியவன் எதிர்ப்பட்ட தாயிடம் விரைந்தான்.

''ஹாலில் டி.வி.யைப் பாத்துக் கொண்டே காபியை ருசித்துக் கொண்டு இருந்த சுமித்ராவும், கீதாவும் அவன் வந்து நின்ற வேகம் கண்டு விஷயம் இவ்வாறு தான் இருக்கும் என்று ஊகித்துக் கொண்டனர்.

''அம்மா...''

''வா தம்பி காபி தரட்டுமா?''

''நிலா எங்கேன்னு தெரியுமா?''

''அவ ரெண்டு மூணு நாளைக்கு நம்ம அவுட் ஹவுஸில் தங்கிறதா சொன்னா ஏம்பா?''

''அவுட் ஹவுஸில் தங்குறதா சொன்னா இருக்காளா, இல்லையான்னு கூடப் பார்க்க மாட்டியா?''

''அவ எங்கே போகப் போறா? நீயேன் இத்தனை பதட்டமா இருக்கே?''

''அம்மா நிலா வீட்டை விட்டு போக முடிவு பண்ணி இப்போ உடம்பு முடியாம லாவண்யாவோட வீட்டில் இருக்காளாம்.''



''என்னப்பா சொல்றே? இந்தப் பொண்ணு ஏன் வீட்டை விட்டு..''

''இங்கே என்னமோ நடந்திருக்கும்மா.. யாரோ அவளை பேசியிருக்கணும்.'' விழிகளை இவர்களின் புறம் திரும்பினான்.

அவர்களோ தங்களுக்கு இதில் ஏதும் சம்பந்தமே இல்லையென்பது போல் நின்றிருக்க..

கவலையோடு நின்றிருந்த தாமரை திடுமென நினைவு வந்தவராய் மகனிடம் திரும்பினார்.

''ஆதவா நேற்று நிலா சாப்பிட வரலையேன்னு பார்க்கப் போனேன். சுமித்ராவும், கீதாவும் அவ ரூம் பக்கமா போனதைப் பார்த்தேன். அப்போ அப்பா வந்திட்டதால் ஏதும் கேட்கலை!''

''ஏன் சுமித்ரா நிலாவை நீ ஏதாவது?''

''ஏன் அண்ணி கடைசியிலே எம் மேலே பழியைப் போடறீங்க? அவ எங்கே போனாளோ நான் கண்டேனா? சொல்லாம கொள்ளாம ஓடிப் போறது அவளுக்கு ஒண்ணும் புதுசு இல்லையே! அன்னைக்கு அவ அம்மா செய்ததை இன்னைக்கு பொண்ணு செய்திருக்கா..''

''இன்னொரு முறை நிலாவைப் பத்தித் தப்பா பேசினா, நான் மனுஷனா இருக்க மாட்டேன்..''

''ஆதவா இவளோட வாய்க்குப் பயந்து தான் நிலாவை தனியா இருக்கச் சொன்னேன்.. ஆனா இப்போ அதுவே..''



''வருத்தப்படாதீங்கம்மா. அவ லாவண்யாவின் வீட்டிலே தான் இருக்கா, நான் போய் அவளைப் பார்க்கிறேன்.'' ஆதவன் நகர அவனை தடுப்பது போல் வழிமறித்து நின்றாள் கீதா.

''எனக்கொரு பதில் சொல்லுங்க ஆதவ்.''

பதிலா..! ''நான் என்ன பள்ளிக் கூட மாணவனா?'' ஆதவன் ஏளனமாய் கேட்டான்.

''ஆதவ் நான் உங்களை நேசிக்கிறது உங்களுக்கே தெரியும். நேற்று நடந்ததையும் யோசித்து... போனவளையே நினைச்சு என்ன பிரயோசனம்.. அவளோட நிலைமையை எடுத்துச் சொன்னதும் புரிஞ்சிக்கிட்டு போயிட்டா.. நீங்க ஏன் தொங்குறீங்க?''

''பார்த்தீங்களாம்மா... முதல்ல மறுத்தவங்க, இப்போ அவங்க வாயாலேயே உண்மையை ஒப்புக்கிட்டதை? சொல்லு என்ன சொல்லி அவள் மனதைப் புண்படுத்தினாய்?'' கீதாவின் புஜத்தைப் பற்றிக் கேட்டான்.

''நம்ம இரண்டு பேருக்கும் கல்யாணமின்னு சொன்னேன். ஆதவ், டியர் அவளை விட நான்தான் எல்லாவிதத்திலும். உங்களுக்குப் பொருத்தம்.. போனவளை விட்டுத் தள்ளுங்க..'' கொஞ்சலோடு நெருங்கியவளை பளாரென்று பொறி கலங்க அறைந்தான் ஆதவன்.

''ஏய்! என்னை என்னன்னு நினைச்சே? நீ வான்னு சொன்ன உடனே உம்பின்னாடி வர நானென்ன நாய்க்குட்டியா? நிலாவோட பண்பும், பொறுமையும் உனக்கு சுட்டுப்



போட்டாலும் வராது. நேற்றே நீ அடிவாங்க வேண்டியது நிலாவால் தப்பிச்சிட்டே!''

''என்ன ஆதவன் இப்படியெல்லாம் பேசுறான். நீங்க சும்மா இருக்கீங்களே அண்ணி! நாங்க ஒண்ணும் சோத்துக்கு வழி இல்லாம இங்கே வரலை. ஏதோ சொந்தம் விட்டு போகக் கூடாதுன்னு உம்பையனுக்கு எம் மகளைக் கொடுக்க வந்தா பிச்சைக்காரர்களை விரட்டுற மாதிரி விரட்டுறானே?''

''நான் பேசும் போது அங்கேயென்ன எகிற்றீங்க?''

''ஆதவ் நீங்க எனக்குத்தான்'' கீதா அவனைப் பற்றி இழுக்க பளாரென்று அறைந்தான் ஆதவன்.

''உங்க உறவு இங்கே யாருக்கும் தேவையில்லை. நான் திரும்ப வரும்பேது, நீங்க இரண்டு பேரும் இங்கே இருக்கக் கூடாது. மீறி இருந்தா நான் என்ன செய்வேன் தெரியுமா? என் பேமிலிக்குள்ளே பிரச்சனையை ஏற்படுத்துறாங்கன்னு சொல்லி போலீஸ் கம்ப்ளெய்ண்ட் பண்ணிடுவேன்...'' ஆதவன் கோபமாய் வெளியேறிட,

அடிபட்ட வேகத்தில் அரண்டு பின் வாங்கினர் தாயும், மகளும். நடந்த விஷயத்தை கணவரிடம் தெரிவிக்க தாமரை அம்மாளும் கிளம்பிட இவர்களும் தம் பெட்டிகளைத் தேடிப் போயினர். குட்டு வெளிப்பட்டு விட்டது.

இனிமேல் எதைப் பேசினாலும் காரியம் ஆகப் போவதில்லை என்ற முடிவுடன் கிளம்பினர்.

''என்ன மம்மி இது பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கா போய்விட்டதே! அவளை இந்த வீட்டை விட்டு கிளப்பிட்டா

நம்ம ரூட் கிளியர் ஆயிடுன்னு பார்த்தா இப்போ முதலுக்கே மோசம் வந்திடுச்சே!''

''அடி விடுடி இவன் ஒருத்தன் தான் பெரிய ஆளாயென்ன? இந்த பைனான்சியர் பையன் ரகுதானே! உன் பின்னாடியே அலைவானே அவனைப் பார்க்கலாம், வா..'' தாயும் மகளும் கிளம்பினார்கள்.

## 19

லாவண்யாவின் வீட்டில் நுழைந்து நிலாவைக் காணும் வரையில், ஆதவனுக்கு ஒரு மனமாய் இல்லை, கண்களை மூடியபடி படுத்திருந்த நிலாவைக் கண்டதும் மனம் இளகியது.

சில கணம் தாமதித்து பின், ''நிலா..'' என்றான் மென்மையாய்.

''ஆதி..!''

''இப்போ எப்படியிருக்கு நிலா?'' மெல்ல அவளை எழுப்பி அமர வைத்தான். கண்ணீரோடு முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''நிலா..!'' ஒற்றை விரல் கொண்டு முகத்தைத் திருப்பினான். லாவண்யா கொண்டு வந்து தந்த ஆரஞ்சு பழச்சாற்றை பருக வைத்தான். ''முதல்ல குடி... அப்புறம் பேசலாம்!''

மறுபேச்சின்றி குடித்தாள். ''உனக்கென்ன பெரிய தியாகின்னு நினைப்பா? எவளோ ஒருத்தி வந்து நான்தான் ஆதவனைக் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொன்னா சம்பந்தப்பட்ட என்னைக் கேட்க மாட்டியா? இனியும் என்னால பொறுமையா இருக்க முடியாது நிலா. இன்னமும் நாள் கடத்தினா எங்கே நீ எனக்குக் கிடைக்காமலே போயிடுவியோன்னு பயமாயிருக்கு.''



''நான் இத்தனை நாள் காத்து இருந்ததே உன் மனசு மாறுமின்னுதான். ஆனா இப்படி ஒரேயடியாய் என்னை விட்டுட்டுப் போவேன்னு நான் எதிர்பார்க்கலை. இத்தனை நாள் என் கூடவே இருந்த போதும் எம் மேல் உனக்கு நம்பிக்கை பிறக்கவே இல்லையா நிலா?''

''ஆதி ப்ளீஸ்..! என்கிட்டே எந்த விளக்கமும் கேட்காதீங்க!'' அவள் அழத் தொடங்கினாள்.

ஒரு வழியாய் அவள் அழுது முடியும் வரை காத்திருந்தவன் மீண்டும் ஆரம்பித்தான்.

''உன் மனசிற்கு போட்டு இருக்கிற முகமூடியை முதலில் கழட்டு ப்ளீஸ். நம்ம வாழ்க்கையோட சந்தோஷம் அத்தனையும் இழந்திட்டே வர்றது உன் கண்களுக்குத் தெரியலையா? என்னைக்கோ செய்த தவறுக்கு எத்தனை நாள் தண்டனை அனுபவிக்கனும்.'' கலங்கிய விழிகளோடு பேசுகையில் இவளும் கரைந்தே போனாள்.

''ஆதி இப்போ உங்களை விட்டு, நான் பிரியணுமின்னு நினைச்சதற்கு காரணம், உங்க மேல உள்ள வெறுப்பினால இல்லை. அன்பினால..! உண்மையை உடைச்சி சொல்லணுமின்னா, இரண்டு முறையும் நீங்க என்னை ஆபத்தில் இருந்து காப்பாத்திதான் இருக்கீங்க!



பிரபுவோட சதி வலையிலே மீதான போது கூட என் மனசில் கோபம் இல்லை. என்னையே உங்களுக்குத் தரத் தயாராய் இருந்த போது சந்தேகப்பட்டுட்டீங்களேங்கிற ஆதங்கம் தான். யோசிச்சுப் பார்த்தா நீங்க சொன்ன உண்மையும், உங்க நிலைமையும் நான் உணர்ந்தேன்.

அதே மாதிரி சூழ்நிலை வேல்முருகனால் ஏற்பட்டப்போ உங்க அணைப்பில் நான் பாதுகாப்பை உணர்ந்தேன். அன்று வேதனையோடு வெளிவந்த வார்த்தையில், உங்களை எத்தனை தூரம் நோகடிச்சிட்டேன்னு அப்போதான் புரிஞ்சுது ஆதி!''

''என்னைப் புரிஞ்சுக்கிட்ட போதும், என்னை விட்டுப் பிரிஞ்சு போகணுமின்னு உனக்கு ஏன் தோணுச்சு நிலா.''

''அதான் சொன்னேனே ஆதி...! என்னால நீங்க பட்ட வேதனைகள் போதுமின்னு! சின்ன வயசிலே அப்பாவால ஏற்பட்ட பாதிப்பில், நான் உங்களை ஒதுக்கிட்டேன். நம்பிக்கையைப் பத்தி பெரிசா பேசிட்டு, அதை நானே கடைபிடிக்கலை. மனத்திரை விலகி உங்கக்கிட்டே என் அன்பை வெளிப்படுத்த முயன்றப்போ வேல்முருகன், கீதான்னு ஆயிரம் தடைகள்..''

''அப்படின்னா..?''

''ஸ்டில் ஐ லவ் யு ஆதி...! என் மனசிலே என்னைக்கும் நிலைச்சு நிக்கிறது நீங்கதான். உங்க மேல நான் வைத்த காதலும், நம்பிக்கையும்தான். அத்தனை கோபத்தை தோற்றுவித்தது. கீதாவும், அவங்க அம்மாவும் உங்க இரண்டு பேருக்கும் கல்யாணமின்னு பேசினப்போ, வேதனையா இருந்தாலும், அதுதான் என் தவறுகளுக்கு எல்லாம் தண்டனையா பட்டது. அதான் கிளம்பிட்டேன்..''



''முட்டாள் பெண்ணே, நீ போயிட்டா உடனே அந்த கீதாவை நான் கல்யாணம் பண்ணிப்பேன்னு நினைச்சியா? எத்தனை காலம் ஆனாலும் உன் மனசு மாற காத்து இருப்பேன்..''

''ஐ'ம் ஸாரி ஆதி..!''

''நிலா இனியும்தான் நீ சிக்னல் தந்திட்டியே! உன் மன்னிப்பை தள்ளியிருந்து கேட்டு என்னை தவிக்க விடாதே! இங்கே வா'' அவளை இழுத்து தன்னருகில் அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பின் கதகதப்பை அனுபவித்தபடியே ''ஆதி..'' என்று முனகினாள்.

சில நிமிட அணைப்பிற்குப் பின், ஆதி இதுமாதிரிதானே அந்த கீதாவையும்..!

''ஆஹா... மறுபடியும் சந்தேகமா..?''

''ச்சீ! அந்த நிலையிலே உங்க இரண்டு பேரையும் அப்படிப் பார்த்ததும் எனக்குத் தாங்கலை.. ஆயிரம் தேள்கள் கொட்டியது போல இருந்தது..''

''இப்போ.. ஐஸ் மழையில் நனைந்ததைப் போல் இருக்கிறதா..?''

''ச்சீ...!''

''நீ அவுட் ஹவுஸில் இருப்பேன்னு நானென்ன ஜோஸியமா கண்டேன்.

நம்மாளு ரொம்ப பீலிங்கோட இருந்தாளேன்னு சமாதானம் செய்யப் போனா உனக்குப் பதில் அவ மேல விழுந்து பிறாண்டி.. என் நேரக் கொடுமை.. அந்த நேரம் பார்த்துதானே நீ வந்தே!''

''ஏதேது நீங்க சொல்றதைப் பார்த்தா நான் வந்ததுக்காக கவலைப்படறா மாதிரி தெரியுதே!''

''கடவுளே..! அன்னைக்கு கட்டிப் பிடிச்சதை மட்டும்தானே சொன்னே! இன்னைக்கு இதே கையால பளார்னு அடி வாங்கினாளே அதைப் பார்க்கலையே?''

''அடிச்சீங்களா?''

''பின்னே! தெனாவட்டா முன்னாடி வந்து நின்னுட்டு நான் உன்னை லவ் பண்றேன். பதில் சொல்லுங்கிறா? வந்ததே கோபம் விட்டேன் ஒண்ணு!''

''ஏன்? ஆதி கீதாவுக்கு ஒண்ணும் அத்தனை குறை இருக்கிற மாதிரி தெரியலையே. எஸ் சொல்ல வேண்டியது தானே?''

''சொல்லியிருக்கலாம்.. ஆனா நான் ஏற்கனவே ஒரு இடத்தில் விழுந்திட்டேனே! எழுந்திருக்க முடியலை!''

''ஆதி! உண்மையைச் சொல்லுங்க, எம் மேல உங்களுக்கு கோபமே வரலையா?''

''நீ ஒரு குழந்தை நிலா! எப்போ உன்னை முதன் முதலா பார்த்தேனோ.. அப்பவே உன்னை உன் அசைவை அணுஅணுவாய் ரசிச்சிருக்கேன். அந்த கோபம், வெறுப்பு கூட எத்தனை சுவாரஸ்யமா இருந்தது தெரியுமா?''



''நிஜமா..?'' விழிகளை அகல விரித்துக் கேட்டாள்.

''இப்படிப் பார்த்துப் பார்த்துதான் என்னை..!''

''போங்க ஆதி..!'' வெட்கத்துடன் அவன் மார்பில் சரிந்தாள்.

''கீதாவை விட நீ கொஞ்சம் மோசமாத்தான் கட்டிப் பிடிக்கிறே பாரு உடம்பெல்லாம் கன்னிப் போயிருக்கு..''

''யூ..!''

''போதும் மேடம் ஸாரை ரொம்பவும் அடிக்காதீங்க.. லாவண்யா பார்த்துக்கிட்டே இருக்கா அப்புறம் அவளும் ஆரம்பிச்சிடுவா..''

''தேங்க்ஸ் வருண். நீ மட்டும் நேரத்திற்கு பார்க்கலைன்னா நிலா என்னை விட்டு...!''

''ஸார்..! நமக்கு கிடைக்கணுமின்னு இருந்தா தப்பிப் போக வாய்ப்பே இல்லை ஸார். இதோ இப்ப நான் லாவண்யாகிட்டே மாட்டிக்கிட்டா மாதிரி...'' எல்லோரும் சிரிக்க,

''இந்த சந்தோஷமும், புன்னகையும் என் குழந்தைகளுக்கு என்றைக்கும் நிலைக்கணும்'' என்றபடியே உள்ளே நுழைந்தனர், தாமரையம்மாளும், சந்திரசேகரும்.

''அத்தே..''

''என்னம்மா நிலா இது? இப்படி நீ செய்யலாமா என்கிட்டே சொல்லியிருக்கலாமே உனக்கு ஏதாவதுன்னா..''

''தப்புதான் அத்தை. ஏதோ வேகத்திலே.. ஆனா இனிமேல் உங்களையும், அத்தானையும், விட்டு எங்கேயும் போகவே மாட்டேன்..''

''என் தங்கம்.. இனியும் கல்யாணத்தைத் தள்ளிப் போட வேண்டாம். இவங்க இரண்டு பேரோட கல்யாணத்தையும் சேர்த்து ஒண்ணாவே செய்திடலாம்..'' சந்திரசேகர் சொல்லிட, இரண்டு ஜோடிகளும் பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கினார்கள்.

தன் அன்பிற்கினியவளை இத்தனை நாள் பிரிந்ததே தாளாமல் விழிகளாலேயே கட்டிப் போட்டான் ஆதவன். தன் நேசிப்பிற்குரியவள் ஆயிரம் நிலாவாய் அழகாய் ஜொலித்தாள், உதட்டின் புன்னகையில்!

அவன் வாழ்வில் நிலா ஒளி வீசத் துவங்கிவிட்டது.

